


கேனோபநிஷத்

ஸ்ரீ சங்கரரின் சொல், வாக்கிய உரைகள்

வானதி
பதிப்பகம்

தமிழாக்கம்
டாக்டர். பி.கே.சுந்தரம்

கேனோபநிஷத்

ஸ்ரீ சங்கரரின் சொல், வாக்கிய உரைகள்

தமிழாக்கம்

டாக்டர் பி.கே. சுந்தரம்

வானதி

கேனோபநிஷத்

ஸ்ரீ சங்கரரின் சொல், வாக்கிய உரைகள்

தமிழாக்கம்

டாக்டர் பி.கே. சுந்தரம்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : பிப்ரவரி, 1999
இரண்டாம் பதிப்பு : செப்டம்பர், 2000

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 30.00

☐ TITLE	:	KENOPANISHAD SRI SANKARAR'S URAI
☐ TAMIL TRANSLATION	:	Dr. P.K. SUNDARAM
☐ LANGUAGE	:	TAMIL
☐ EDITION	:	SECOND EDITION, SEPTEMBER, 2000
☐ No. OF PAGES	:	viii + 144 = 152
☐ PUBLISHED BY	:	VANATHI PATHIPPAKAM, 13, DEENADAYALU STREET, THYAGARAYA NAGAR, CHENNAI – 17.
☐ PRICE	:	Rs. . 30.00

Printed at : எம.எஸ. பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை–14.

பதிப்புரை

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்பது தமிழ் மறை. பார்க்குமிடந்தொறும் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்திருப்பது இந்தச் செம்பொருள்; ஒவ்வோர் உயிரிலும் நுணுக்கரிய நுண்ணுணர்வாகத் தன்னை இனங்காட்டிக் கொண்டு விளங்குவதும் இந்த உண்மையே. இதே பொது உண்மைதான், 'காக்கை குருவி எங்கள் சாதி' என்று மகாகவி பாரதியைப் பாடவைத்தது. எல்லா உயிரும் உண்மையில் ஒருயிர் என்றால் மனிதரும் தேவரும், விலங்கும் பறவையும் ஒரே இனம் என்றுதானே பொருள்படும்! இதனால் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்!' என்று உலகச் சமுதாயம் ஒன்று மொத்தமாக மலர்கிறது.

பாரத நாட்டின் உயிர்நிலை என்று சொல்லப்படும் பெருமை உடையவை உபநிடதங்கள். வேதங்களின் முடி, அல்லது முடிந்தமுடிபாகத் திகழ்கின்றவை இவை. 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற மூதுரையும் உபநிடதங்களும் "உண்மை ஒன்றே; அதன் வடிவங்களே நாம் எல்லாம்" என்று, உலக வாழ்க்கையின் ரகசியத்தை எடுத்துக்காட்டி, நம்மை நெறிப்படுத்துகின்றன.

இத்தகைய உபநிடதங்களுள் சிறப்பானவை பத்து. இவற்றிற்கு ஆதி சங்கரர் உரை எழுதி, இவற்றின் நுட்பங்களையும் உட்பொருளையும் மனிதச் சமுதாயத்தின் மீதுள்ள அக்கறையால் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். இவை சம்ஸ்கிருத மொழியில் இருக்கின்றன. இவற்றின் மொழிபெயர்ப்புக்கள் பல மொழிகளிலும் செய்யப்

பட்டிருக்கின்றன. தமிழ் மொழியிலும் இவற்றில் சில மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் பத்து உபநிஷதங்களுக்கும் ஆதிசங்கரர் செய்த உரைகளையும் ஒரு தொகுதியாக வெளியிட வேண்டும் என்று ஓர் எண்ணம், இறைவன் திருவருளாலும் குருவின் திருவருளாலும் எனது உள்ளத்தில் தோன்றியது. இது வளர்ந்து செயலில் நிறைவேறும் காலமும் வந்து கூடியது.

இதன் விளைவாக, சென்னைப் பல்கலைக் கழகத்தில் பல ஆண்டுகள் தத்துவத் துறையில் பேராசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற டாக்டர் பி.கே. சுந்தரம் அவர்களோடு ஒருநாள் பேசினேன். அவரும் ஆர்வத்தோடு இந்த மொழிபெயர்ப்பைச் செய்து தரும் பணியை ஏற்றுக் கொண்டார்.

முதலில், **ஈசாவாஸ்ய உபநிஷத்தும், கேனோபநிஷத்தும்** ஸ்ரீ சங்கரரின் உரைகளோடு அவரால் தமிழாக்கம் செய்யப்பட்டன. இவை இரண்டும் தனித்தனிப் புத்தகங்களாக இப்போது வெளியிடப்படுகின்றன. சம்ஸ்கிருத மொழியிலுள்ள மூல நூல்கள் இவற்றில் தரப்படவில்லை. அவை எங்கும் கிடைக்கும் என்பதாலும், மொழி பெயர்ப்பைப் படித்து அதன் பின்னர் மேலும் இவற்றைப் பயில வேண்டும் என்ற அவாவினை உண்டு பண்ணுவது மட்டும் எனது சிறப்பு நோக்கம் என்பதாலும் மூல சம்ஸ்கிருத உரை இவற்றில் தரப்படவில்லை.

இந்த நூலில் குறிப்பிடப்படவேண்டிய செய்தி ஒன்று உண்டு. அது **கேனோபநிஷத்தைப்** பற்றியதுதான். ஸ்ரீ சங்கரர் இந்த உபநிஷத்திற்கு இரண்டு உரைகள் செய்திருக்கிறார். ஒன்று, சொல்லிற்குச் சொல் உரையாக, அதாவது **பத–பாஷ்யமாக** அமைந்திருக்கிறது. இன்னொன்று, வாக்கியங்களை மொத்தமாக எடுத்துக் கொண்டு

வாக்கிய-உரையாக, அதாவது **வாக்கிய–பாஷ்யமாக** அமைத்திருப்பது. இந்த இரண்டாவது **வாக்கிய–உரைக்குத்** தமிழாக்கம் இந்தத் தொகுதியில் தரப்பட்டிருப்பது ஒரு சிறப்பு. இவ்வாறு ஒரே நூலிற்கு இரண்டு வகையாக ஸ்ரீ சங்கரர் உரை செய்திருப்பது இந்தக் **கேனோபநிஷத்தின்** தனிப்பெருமை என்று பெரியோர் சொல்லக் கேட்டிருக் கிறேன்.

கூடிய வரையில் பழகு தமிழில் இந்த மொழி பெயர்ப்பு தரப்படவேண்டும் என்று மொழி பெயர்ப்பாசிரியர் முயற்சி செய்திருக்கிறார். ஆங்காங்கு நேர்ந்திருக்கக் கூடிய இலக்கணப் பிழைகளை ஆசிரியர் உணர்ந்து எதிர்பார்த்து தமிழுலகம் மன்னிக்கவேண்டும் என்றும் என் மூலமாகக் கேட்டுக் கொள்கிறார்.

இதைப்போலவே மற்ற உபநிடதங்களும் ஸ்ரீ சங்கரரின் உரைகளோடு வெளிவர இருக்கின்றன. **கட–உபநிஷத்தின்** உரை அச்சில் இருக்கிறது.

வானதி பதிப்பகத்தின் இம்முயற்சியினைத் தமிழுலகம் வரவேற்று மேலும் இப்பணியைத் தொடர ஊக்குவிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்

வானதி திருநாவுக்கரசு

பொருளடக்கம்

கேனோபநிஷத்

மொழி பெயர்ப்பாளரின் ஒரு சிறு முன்னுரை

கேனோபநிஷத் என்ற இந்த உபநிஷத், ஸாம வேதத்ததைச் சார்ந்தது. 'கேன' என்ற சொல்லிற்கு ''எதனால்'' என்பது பொருள். ''எந்த ஒரு சக்தியினால் நம்முடைய மனது சிந்திக்கிறது? உயிர்க் காற்றுகள் இயங்குகின்றன? பேசும் ஆற்றல் ஏற்படுகின்றது? கேட்கும் சக்தி வருகிறது?'' இவ்வாறு எதனால் என்ற கேள்வியுடன் இந்த உபநிஷத் தொடங்குவதால் இதற்கு 'கேன' உபநிஷத் என்று பெயர் வந்தது.

இது நான்கு பிரிவுகள் கொண்டது. முதல் பிரிவில் ஒன்பதும், இரண்டாவதில் ஐந்தும், மூன்றாவதில் பனிரெண்டும், நான்காவதில் ஒன்பதும், ஆக மொத்தம் முப்பத்து ஐந்து மந்த்ரங்கள் உடையது.

பரம்பொருள் காதுக்குக் காதாய், கண்ணுக்குக் கண்ணாய், உயிருக்கு உயிராய், அறிவிற்கு அறிவாய், உள்ளிருந்து எல்லா வற்றையும் இயக்கும் ஆதார சக்தியாய் விளங்குகிறது. உடலும், புலன்களும், மனதும் இந்தப் பரம்பொருளினால் இயங்கு கின்றன. அந்தப் பரம்பொருளுக்காகவே இயங்குகின்றன.

நாம் வீடுகட்டி அதில் வசிக்கிறோம் என்றால், நமக்காகத் தான் அந்த வீட்டில் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து அமைக்கிறோம். நம்முடைய வீடு நமக்காக நாம் கட்டிக் கொண்டது என்பது மட்டுமல்ல.

அந்த வீட்டுக்கு உரியவர், வீட்டுக்குச் சொந்தக்காரர் ஒருவர் இருக்க வேண்டும் என்பதை அந்த வீட்டைப் பார்த்தவர்கள் தெரிந்து கொள்கிறார்கள் அல்லவா? இது

போலவே, வீடு போன்று பல பகுதிகளாகச் சேர்த்து அமைக்கப் பட்ட இந்த உடம்புக்கும் உரிய சொந்தக்காரர் இருக்க வேண்டும். வீடு கட்டி அதில் வசிக்கிற வீட்டுச் சொந்தக்காரர் அந்த வீட்டை விட வேறானவர் என்பதுபோல, இந்த உடல் என்ற அமைப்பை விட வேறாக இதில் வாழ்பவர், இதன் சொந்தக்காரர் ஒருவர் இருக்க வேண்டும்; இருக்கிறார் என்று கேன உபநிஷத் என்ற இந்த உபநிஷத் நமக்குச் சொல்கிறது.

வீட்டுக்குச் சொந்தக்காரர் ஒருவர் இருக்கின்றபோது, அந்த வீடு நன்றாகக் கவனிக்கப்பட்டு, நல்ல நிலையில் இருக்கிறது. அவர் கவனிக்காமல் விட்டுவிட்டால் வீடு பழுதடைந்து பாழாகிச் சிதைந்துவிடும். இதுபோல, உடலுக் குள்ளும் உயிர்க்குயிராக இருந்து கண் முதலிய கருவிகளைச் செலுத்தும் பரம்பொருள் என்ற சக்தி இல்லை யானால், இவையொன்றும் தத்தம் தொழிலைச் செய்ய ஆற்றலுள்ளதாக மாட்டாது. கண் பார்ப்பதற்கும், காது கேட்பதற்கும், மனம் அறிவதற்கும் பரம்பொருளே அடிப்படையானது.

இதை உணர்ந்து கொள்ள வேண்டும். இதுதான் மெய்யறிவு எனப்படும். பரம்பொருள் இவ்வாறு எல்லா வற்றையும் விட வேறாகவும் எல்லாவற்றையும் நடத்துவதாகவும் இருக்கின்ற இந்த உண்மையை நம்மை நாமே பார்த்து ஆராய்ந்து தெரிந்து கொள்ளலாம். வேறெங்கும் தேடிப் போக வேண்டிய தேவையில்லை என்று கேனோபநிஷத் நமக்குத் தெரிவிக்கிறது.

கேனோபநிஷத்தில் கூறப்படும் ஒரு சிறப்பான கருத்து நம் கவனத்திற்கு உரியது. பரம்பொருளைத் தெரிந்து கொள்வது பற்றிய கருத்து அது. அதைச் சுருக்கமாக இந்த முகவுரையில் விளக்கினால், உபநிஷத்தின் உரையைப் புரிந்து கொள்ள வசதியாக இருக்கும்.

பரம்பொருளைக் கண்ணால் பார்க்க முடியாது, காதால் கேட்க முடியாது, எடுத்துப் பேச முடியாது, மனத்தினாலும்

அறிய முடியாது என்று சொன்னால், அதைத் தெரிந்து கொள் வதற்கு வழியே இல்லாமற் போய், அப்படி ஒன்று இருக்கிறதா என்ற ஐயப்பாடு வந்துவிடுமே? என்றால், உபநிஷத்துக்கள் கூறும் சொற்களை வைத்துத்தான் அதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். உபநிஷத் என்ன சொல்கின்றது?

''பரம்பொருள் நமக்குத் தெரிந்தவை எல்லாவற்றையும் விட வேறானது; அதே சமயம், நமக்குத் தெரியாதவற்றையும் விட வேறானது'' என்று கேனோபநிஷத் கூறுகிறது. இதன் பொருள் என்ன?

நமக்குத் தெரிந்ததெல்லாம் இந்த உலகத்துப் பொருட்கள் தாம். இவை யாவும் தோன்றி அழியும் தன்மையவாய் நிலையில்லாமல் இருக்கின்றன. இதனாலேயே துன்பத்திற்குக் காரணமாகின்றன. பரம்பொருள் இவை போன்று இல்லாமல், நிலைத்த தன்மையதாய், காலத்தைக் கடந்து நிற்பதாய், பேரின்ப மாய் இருக்கிறது. எனவே, நமக்குத் தெரிந்தவற்றைவிட அது வேறானது என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இதேபோல, பரம்பொருள் நமக்குத் தெரியாமலே போய் விடும் என்றால் அதைப்பற்றிக் கவலைப்படாமலே இருந்து விடலாம். ஆனால், அவ்வாறு அதைத் தள்ளிவிடவும் முடியாது. ஏனென்றால், அது நாமாகவே இருக்கிறது. நம்மைவிட வேறான தல்ல அது. நம்மை நாமே நாம் தெரிந்து கொள்வதுதான், பரம்பொருளை நாமாகவே, நம்மைவிட வேறானதன்று என்று தெரிந்து கொள்வதுதான், பரம்பொருளை அறிவதாகும்.

நம்மை நாமே தெரிந்து கொள்ள முடியாது என்றோ, தெரிந்து கொள்ளவில்லை என்றோ யாரும் கூறமுடியாதல்லவா?

நம்முடைய ஒவ்வொரு பேச்சும், சிந்தனையும், செயலும் நிகழ்வதற்கு மூலமாக உள்ளது நாமாகவே இருக்கிற பரம் பொருள்தான்.

இன்னொன்றும் கேனோபநிஷத் சொல்லுகிறது. ''நான் பரம்பொருளைத் தெரிந்து கொண்டு விட்டேன்'' என்று ஒருவன் கூறினால், அதிலிருந்தே அவன் அதைத் தெரிந்து கொள்ள வில்லை என்று அம்பலமாகிவிடும். ஏனென்றால், ஏனைய மற்ற மேஜை, நாற்காலி போன்ற பொருட்களைத் தெரிந்து கொள்வது போன்றதல்ல இது. பரம்பொருள் நாமாகவே, எல்லாவற்றையும் அறியும் அறிவாகவே இருப்பதால், அதை அறியப்படும் மற்றப் பொருட்களோடு சரிசமமாக வைத்து எண்ணிவிடக்கூடாது.

இதையே கேனோபநிஷத் ஒரு வேடிக்கையான நிகழ்ச்சியாக நமக்குக் காட்டுகிறது. ஒரு மாணவன் ஆசிரியரிடம் பாடம் கேட்டான். பரம்பொருளின் இலக்கணம் என்பது முதலிய வற்றைத் தெரிந்து கொண்டான். அல்லது தெரிந்து கொண்டு விட்டதாக எண்ணினான். அதை ஆசிரியர் கவனித்தார். பிறகு அவனைப்பார்த்துச் சொன்னார்: ''அப்பனே! ''நான் பரம்பொருளை அறிந்து கொண்டுவிட்டேன்'' என்று எண்ணினா யானால் அது தவறு. ஏதோ சில சொற்களை வைத்து, ஒரு சிறிது விளங்கினாற்போல தோன்றும். அது சரியல்ல. இன்னும் முயன்று, உண்மையை முழுதும் தெரிந்து கொள்ளப்பார்!''

இதன் பின்னர் மாணவன் மேலும் மேலும் ஆழமாக மனத்தை ஒருமுனைப்படுத்தித் தவத்தினால் முயன்றான். அவனது மனம் ஒளிபெற்றது. ஆசிரியரிடம் சென்று ''நான் பரம் பொருளை நன்கு அறிந்து கொள்ளவில்லை. இதனால் நான் அதைத் தெரிந்து கொள்ளவில்லை என்றும் சொல்ல மாட்டேன்'' என்று சொன்னான்.

''மற்ற ஏனைய உலகத்துப் பொருட்களைத் தெரிந்து கொள்வதைப்போல, அறிவிற்குப் பொருளாக நான் பரம் பொருளைத் தெரிந்து கொள்ளவில்லைதான். ஆனால், அந்தப் பரம்பொருள் நானாகவே இருக்கின்றது என்பதனால், ''நான் என்னையே புரிந்து கொண்டேன்'' என்று சொன்னேன்'' என்றான் மாணவன். ''தெரியவில்லை'' என்பதன் பொருளை

யும், ''தெரிந்து கொண்டேன'' எனபதன பொருளையும் வேறு படுத்தி அவன் ஆசிரியரிடம் சொன்னான். இதையே இந்த உபநிஷத், வேடிக்கையாகச் சொல்லுகிறது:

''தெரிந்தது என்பவனுக்குத் தெரியவில்லை; தெரிய வில்லை என்பவனுக்குத் தெரிந்தது''!

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் சண்டை ஏற்பட்டது. இதில் தேவர்கள் வெற்றி பெற்றனர். தங்களது ஆற்றலினாலேயே இந்த வெற்றி கிட்டியது என்று அவர்கள் இறுமாப்பு அடைந்தனர். இந்தச் செருக்கை அடக்க வேண்டும் என்று பரம்பொருள் திருவுள்ளங் கொண்டது.

இந்திரனுடைய தலைநகரின் தோரணவாயிலில் ஒரு வடிவத்தை எடுத்துக் கொண்டு வந்து நின்றது. அதை யார் என்று தெரிந்து கொண்டு வர அக்கினி தேவன் முதலில் போனான். ''எதையும் எரித்துவிடுவேன்'' என்று வீரியம் பேசிய அவன் முன்னர் ஒரு துரும்பைப் போட்டு ''இதை எரி'' என்றது அந்த உருவம். அக்னி தேவனால் அது முடியவில்லை. கர்வம் அடங்கித் திரும்பிப் போனான். இதே போல, காற்றுத் தேவனும் தோற்றுப் போனான் இந்திரனால் அதைப் பார்க்கவே முடிய வில்லை. அவன் முன் உலக நாயகி உமையன்னை தோன்றி, ''தேவர்களின் வெற்றிக்கு மட்டுமல்ல, எல்லாவற்றிற்கும் முழு முதற் பொருளான தெய்வமே காரணம்'' என்று உணர்த்தினாள்.

இந்த வரலாற்றைக் கூறி, கேனோபநிஷத் பரம்பொருளை ''தத்வனம்'' (பெருமையாகக் கொண்டாடப்பட வேண்டிய முதற் பொருள்) என்று தியானிக்க வேண்டும் என்று சொல்கிறது.

ஸ்ரீ சங்கரர் வேறொரு உபநிஷத்துக்கும் எழுதாத வகையில், கேனோபநிஷத்திற்கு மட்டும் பத-பாஷ்யமும், வாக்ய-பாஷ்யமும் எழுதியிருக்கிறார். சொல்லிற்குச் சொல்லும், முழு வாக்கியப் பொருளையும் விளக்குகிறார். இங்கு இரண்டு பாஷ்யங்களுமே மொழிபெயர்த்துத் தரப்பட்டிருக்கின்றன.

केनोपनिषत्

கேனோபநிஷத்

சாந்தி மந்த்ரம்

ओं आप्यायन्तु ममाङ्गानि वाक्प्राणश्चक्षुः
श्रोत्रमथो बलमिन्द्रियाणि च सर्वाणि
सर्वं ब्रह्मोपनिषदं माऽहं ब्रह्म निराकुर्यां
मा मा ब्रह्म निराकरोत् अनिराकरणं अस्तु
अनिराकरणं मेऽस्तु तदात्मनि निरते
य उपनिषत्सु धर्मास्ते मयि सन्तु
ते मयि सन्तु ।

ॐ शान्तिः शान्तिः शान्तिः

ஓம் ஆப்யாயந்து மமாங்கானி
வாக் ப்ராணஸ் சக்ஷு: ச்ரோத்ரம் அதோ
பலமிந்த்ரியாணி ச ஸர்வாணி
ஸர்வம் ப்ரஹ்மோபநிஷதம்; மா'ஹம்
ப்ரஹ்ம நிராகுர்யாம்; மா மா ப்ரஹ்ம
நிராகரோத்; அநிராகரணம் அஸ்து;
அநிராகரணம் மே அஸ்து; ததாத்மனி
நிரதே ய உபநிஷத்ஸு தர்மாஸ்-தே
மயி ஸந்து தே மயி ஸந்து

ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி:

என்னுடைய (உடல்) உறுப்புக்களும், பேச்சும், உயிர் மூச்சும், கண்களும், காதுகளும், பலமும், எல்லாப் புலன்களும் நன்றாக வளர்ச்சி பெறட்டும். எல்லா உபநிஷத்துக்களும் கூறும் பரம்பொருள் (நான்). நான் (அந்தப்)பரம்பொருளை மறுக்காம லிருப்பேனாக! (அந்தப்) பரம்பொருளும் என்னை மறுக்காமல் இருக்குமாக! (பரம்பொருள்) என்னை மறுக்காமலிருக்கட்டும்; என்னால் (பரம்பொருளிற்கு) மறுப்பு வேண்டாம். ஆத்மா (என்ற மெய்ப்பொருளை அறிவதில்) ஈடுபட்ட என்னிடத்தில் உபநிஷதங்கள் கூறும் எல்லா நற்குணங்களும் இருக்கட்டும். அவை என்னிடத்தில் இருக்கட்டும்.

ஓம்; அமைதி! அமைதி! அமைதி!

கேனோபநிஷத்

சங்கரரின் சொல்-உரை (பத-பாஷ்யம்)

ஸ்ரீ சங்கரரின் முன்னுரை

கேனேஷிதம் (''எவரால் ஏவப்பட்டு'') என்ற (சொல்லோடு) தொடங்குவதும், பரம் பொருளை விளக்குவது மான உபநிஷத் (இங்கு) எடுத்துச் சொல்லப்படும் பொருட்டு ஒன்பதாவது அத்தியாயம் தொடங்கப்படுகிறது. இதற்கு முன் (இல்லறம் நடத்தும் ஒருவன்) செய்ய வேண்டிய பல சடங்குகள் முழுவதுமாக எடுத்துரைக்கப்பட்டுவிட்டது. சடங்குகளுக்கு இன்றியமையாததான உயிர்மூச்சு (பிராணன்) குறித்த தியானங் களும், சடங்குகளின் பகுதிகளான பல ஸாம கீதங்களைப் பற்றிய தியானங்களும் முழுதும் எடுத்துரைக்கப்பட்டன. அதன்பிறகு, காயத்ர ஸாமத்தைப் பற்றிய தியானம் கூறப்படுகிறது. இதன் முடிவிலே ஆசிரிய, மாணவ பரம்பரையைச் சொல்ல இவ்வாறு காரியங்களின் (சடங்குகளின்) முறைகளும் கூறப்பட்டுவிட்டன.

(கேனோபநிஷத், ஸாம வேதத்திற்குரிய தலவகார ப்ராஹ்மணத்தின் ஒன்பதாவது அத்தியாயமாகும். இதற்கு முந்திய ஏனைய அத்தியாயங்களும் சடங்குகளைப் பற்றி விளக்குகின்றன. இந்த ஒன்பதாவது அத்தியாயமான கேன-உபநிஷத் மெய்யறிவைப் பற்றி எடுத்துரைக்கிறது.)

இவ்வாறு விதிக்கப்பட்ட இந்த எல்லாச் சடங்குகளும் தியானங்களும் முறையாகச் செய்யப்பட்டால், ஆசைகளிலிருந்து விடுபட்டு விடுதலை பெற வேட்கை கொண்ட ஒருவனது மனத்தூய்மைக்கு அது காரணமாகின்றது. ஆசைகளையுடைய, மெய்யறிவு இல்லாத ஒருவனுக்கு, வேதத்திலும் ஸ்ம்ருதிகளிலும் விதிக்கப்பட்ட வெறுஞ் சடங்குகள் மட்டும் செய்து வந்தால், அது

தென்திசை வழியில் செல்வதற்கும் மறுபடி இவ்வுலகில் வந்து பிறப்பதற்கும் காரணமாகும். ஆனால், மெய்ந்நூல்களுக்கு மாறான இயற்கை வேகங்களால் தூண்டப்பட்டு (அறிவில்லாமல் ஒருவன்) செய்யும் செயல்களால், அசையாத (மரங்கள்) முதல் விலங்கினம் வரை உள்ள பல தாழ்ந்த பிறவிகள் எடுக்கும் இழிவை (அவன்) அடைவான். வேதம் சொல்கிறபடி ''(வைதிகக் காரியங்களையோ, தியானங்களையோ செய்யாத வர்கள்), (வடக்காகச் சுவர்க்கத்திற்குப் போகும் பாதை அல்லது இறந்த முன்னோர்கள் வாழும் தெற்கு பாதை ஆகிய) இந்த இரண்டு பாதைகளிலும் செல்லுவதில்லை. அவர்கள் இந்த (கொசு முதலிய) சிறு உயிர்களாகப் பிறந்து இடையறாத பிறப்பிற்கும் இறப்பிற்கும் ஆளாகி ''பிறப்பதும் பின் இறப்பது மாக அலைவாயாக'' என்ற வேத ஆணைக்கு உட்படுகிறார்கள். இது தெற்குமில்லாத வடக்குமில்லாத மூன்றாவது பாதை'' (பார்க்க : சாந்தோக்ய உபநிஷத் V, 10, 8). வேதத்தின் மற்றொரு வாக்கின்படி, ''மூன்று வகை உயிர்கள் (அதாவது, (i) கருவில் உதிப்பன (ii) முட்டையிலிருந்து வருவன, (iii) மண்ணிலிருந்து முளைப்பன (தெற்குப்பாதை, வடக்குப் பாதை, இவ்விரண்டை விட வேறான) ஒரு பாதையில் செல்லுகிறார்கள்''. (பார்க்க : ஐதரேய ஆரண்யகம் : II, 1.14).

இப்பிறவியிலோ முற்பிறவிகளிலோ செய்த செயல் களினால் உண்டு பண்ணப்பட்ட ஒரு சிறப்பான மனப்பாங்கு தோன்றுவதன் மூலம், ஆசைகளை நீக்கிய தூய மனத்தினனாய் வெளிப்புறச் சாதனங்கள் அவற்றின் பயன்கள் இவற்றைத் துறந்துவிட்ட ஒருவனிடத்தில், உள்ளுறையும் ஆத்மாவைப் பற்றிய மெய்யறிவைத் தானே பெற வேண்டும் என்ற அவா உண்டாகிறது. இந்த உண்மைதான், ''கேன-ஈஷிதம்'' என்று தொடங்கும் வேத வாக்கியத்தினால் கேள்வி-பதில் வடிவமாக எடுத்துக் காட்டப்படுகிறது. கடோபநிஷத்திலும் கூட, தனக்கு ''ஒரு காரணமில்லாதவரும் தனக்குத்தானே காரணமானவரு

மான) இறைவன் வெளிப்புறம் நோக்கியே செல்லும் புலன்களை ஏற்படுத்தினான். இதனால், ஒருவன் வெளிப்புறக் காட்சி களையே காண்கிறான். உள்ளிருக்கும் ஆத்மாவைக் (காண்ப தில்லை). அழிவில்லாத நிலையை விரும்பும் பகுத்தறியும் ஆற்றலுள்ள அசாதாரணமான (உயர்ந்த) ஒருவன் தன் பார்வையை உட்புறமாகத் திருப்பி (தன்) உள்ளே இருக்கும் ஆத்மாவைக் கண்டான்'' என்று சொல்லியிருக்கிறது. (பார்க்க : கடோபநிஷத், II - 1.1).

அதர்வ வேதத்தைச் சேர்ந்த முண்டக உபநிஷத்திலும் (I - 2.12) ''(வைதிகக்) காரியங்களைச் செய்து முடிப்பதனால் கிடைக்கக்கூடிய உலகங்களை நன்றாகப் பரிசீலனை செய்த பிற்பாடு, ''புதிதாக உண்டு பண்ணப்படாத என்றுமுள்ள (இயற்கையான) இந்த மோக்ஷம் (வீடுபேறு) காரியங்களினால் (புதிதாக) உண்டுபண்ணப்படுவதில்லை'' எனறுணர்ந்து, பரம் பொருளை அறிய விரும்பும் ஒருவன் துறவை மேற்கொள்ள வேண்டும். அதை (மெய்ப்பொருளை) நன்றாக அறிந்து கொள்வதற்கு, வேதத்தைக் கசடறக் கற்றவனும் பரம்பொருளில் ஊன்றியிருப்பவனுமான ஓர் ஆசிரியனை, கையில் (வேள்விக் குரிய) சமித்துக்களுடன் அணுகவேண்டும்'' என்று கூறப் பட்டிருக்கிறது. இந்த வழி ஒன்றினால் மட்டுமே, பற்றுக்களை நீக்கிய ஒருவன், பரம்பொருளைப் பற்றிக் கேட்பதற்கும், சிந்தனை செய்வதற்கும் உள்ளுறையும் ஆத்மாவை அறிவதற்கும் தகுதி பெறுகிறான். (இதைத்தவிர) வேறு வழி கிடையாது. மேலும், உள்ளுறையும் தானாகிய ஆத்மாவை பரம்பொருள் (பிரம்மம்) என்று அறிந்ததன் பயனாக, எல்லாப் பற்றுக்களுக்கும் விதையானதும், ஆசைகளும் (அவை நிறைவேறுதற்குரிய) செயல்களும் தோன்றுவதற்குக் காரணமானதுமான அறியாமை யின் முழு அழிவும் நிகழ்கிறது. ஈசாவாஸ்ய உபநிஷத்(7) கூறியபடி ''எல்லாம் ஒன்றே என்று கண்டவனுக்கு, துன்பமோ, மயக்கமோ எப்படி இருக்க முடியும்?'' (சாந்தோக்கிய

உபநிஷத்து VII - 1.3) கூறுகிறபடியும் ''மெய்ப்பொருளை அறிந்தவன் துயரங்களைக் கடக்கிறான்''. ''காரணமும், காரிய மும் தானேயாகிற ஒரு பரம்பொருளைக் கண்ட பிற்பாடு, இதயத்தின் முடிச்சுக்கள் அவிழ்கின்றன; ஐயங்களெல்லாம் விலகுகின்றன; எல்லா வினைப்பயன்களும் அழிகின்றன'', என்று (முண்டக உபநிஷத் II - 2.8) கூறுகிறது. இது போல (இன்னும் பல வேதவாக்குகளும் உள்ளன).

இங்கு ஒரு வினா : மெய்யறிவோடு சேர்ந்தே வைதிகச் சடங்குகளையும் கடமைகளையும் செய்வதனால் (மேற் சொன்ன) இதே பலனை அடைய முடியும் என்று சொல்லலாமே? (விடை) : இல்லை; ஏனெனில், வாஜஸனேயக உபநிஷத்தில் (பிருஹதாரண்யக உபநிஷத்தில்) (வைதிகச் சடங்குகளையும் உபாஸனையையும் சேர்த்தே செய்வதனால்) உண்டாகும் பலனை வேறுபடுத்திச் சொல்லியிருக்கிறது. ''எனக்கு மனைவி ஏற்படட்டும்'' என்று தொடங்கி, வாஜஸநேயக உபநிஷத் ''இந்த மனித உலகம் மகனால்தான் பெறப்பட வேண்டும்; வேறு வழியினால் அல்ல; மூதாதையர்களின் உலகம் உபாஸனையி னால் (அடையப்படவேண்டும்)'' (பிருஹதாரண்யக உபநிஷத் I - 4.16, 17), என்று, வைதிகச் சடங்குகளும் மற்றும் கடமைகளும் ஆத்மாவைவிட வேறான மூன்று உலகங்களை அடையச் செய்கின்றன என்று எடுத்துக் காட்டியிருக்கிறது.

அந்த இடத்திலேயே, ''சந்ததிகளினால் என்ன செய்யப் போகிறோம்? எங்களுக்கு ஆத்மா என்ற இந்த உலகமல்லவா வேண்டும்?'' என்று துறவுக்குரிய காரணத்தைச் சொல்லு மிடத்தில் (பிருஹதாரண்யக உபநிஷத் 4-4-22) கூறப்பட்டிருக் கிறது. அந்தக் காரணத்தின் விளக்கமும் இதுதான். சந்ததியி னாலும், சடங்குகளினாலும், சடங்குகளோடு கூடிய உபாஸனை களினாலும், நாங்கள் என்ன செய்யப் போகிறோம்? (இவை) ஆத்மாவைத்தவிர வேறு உலகங்களுக்குத்தான் ஸாதனமாகும்.

மனிதர், மூதாதையர், தெய்வங்கள் இவர்களது மூன்று உலகங்களை அடையத்தானே இவை காரணமாகும்? ஏதாவதொரு வழியினால் அடையக் கூடியவையும், நிலையில்லாதவையுமாகிய இந்த மூன்று உலகங்களும் விரும்பத் தக்கவை அன்று. ''பிறப்பில்லாததும், தேய்வில்லாததும், அழிவற்றதும், அச்சமற்றதுமான இயற்கையான (ஆத்மா) என்ற அந்த உலகம்தான் நமக்கு விரும்பத்தக்கதாகும்.'' (நாம் செய்யும்) ''காரியங்களினால் அது வளரவோ குறையவோ செய்யாதது அந்த (ஆத்மா) என்ற உலகம். (பார்க்க : பிருஹதாரண்ய உபநிஷத் : IV - 4.23; IV - 4.25). அது நித்யமானது.

(ஆத்மா) நித்தியமானதால் அஞ்ஞானம் (என்ற அறியாமையின்) அழிவினாலல்லாது வேறு வழியில் அதை அடைய முடியாது. எனவே, உள்ளுறையும் தானாகிய ஆத்மாவும் பரம்பொருளும் (பிரம்மமும்) ஒன்றே என்று உணர்ந்தபின், எல்லா ஆசைகளையும் துறப்பது ஒன்றே செய்ய வேண்டிய கடமையாகும்.

மேலும், ஆத்மாவும் பிரம்மமும் ஒன்றுதான், (வெவ்வேறல்ல) என்ற மெய்யறிவு, காரியங்களோடு ஒன்று சேராது. ஆத்மாவும் பிரம்மமும் ஒன்றே என்ற மெய்யுணர்வில் எல்லா வேற்றுமை அறிவும் இல்லாது ஒழிவதால் அது காரியங்களுடன் சேருவது என்பது பொருந்தாது. காரியங்களுக்கு அடிப்படையாக இருப்பதே 'செய்கின்றவன், செயலின் பலன்' என்கிற வேற்றுமை எண்ணம்தான். உள்ள பொருளை உள்ளபடி கண்ணாடி போல் காட்டுவதே அறிவு. எனவே, பரம்பொருளைப் பற்றிய மெய்யறிவு மனிதனின் இஷ்டப்படி அமையாது, (அவன் தன்னிச்சையாக ''இது மரம்'' ''இது ஆறு'' என்று முடிவுகட்ட முடியாது. உள்ள மரத்தையும், உள்ள ஆற்றையும் அவை உள்ளபடி அறிவு அறிவிக்க வேண்டுமேயன்றி, ஆற்றைக் குளமென்றும், மரத்தை மனிதனென்றும் அது தன்னிஷ்டப்படி திரித்துக் கூற இயலாது. அப்படிச் செய்தால் அது பொய்யறிவு ஆகும்).

எனவே, பல்வேறு புறச் சாதனங்களால் அடையக் கூடிய வையும், (கண்ணால்) பார்க்கக்கூடியவையும் அப்படிப் பார்க்க முடியாதவையும், ஆன எல்லா பலன்களையும் துறந்த ஒரு மனிதனிடத்தில் தோன்றும் உள்ளுறையும் ஆத்ம மெய்ப் பொருளை அறியும் அவாவினை, இந்த "கேனேஷிதம்" என்று தொடங்கும் வேத வாக்கியம் எடுத்துக் காட்டுகிறது. ஆனால், இங்கு (ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட) பொருள் வெகு நுட்பமானது ஆகையால், ஓர் ஆசிரியருக்கும் அவரது மாணாக்கருக்கும் இடையே நிகழும் கேள்வி-பதில் வடிவில் அது தரப்படும் பொழுது, எளிதில் புரிந்து கொள்ள வழி செய்கிறது.

மேலும், (இந்த பரம்) பொருள் பற்றிய அறிவு வெறும் தர்க்கத்தினால் மட்டும் உணரமுடியாதது என்றும் காட்டப்படு கிறது. இன்னும், "தர்க்கத்தினால் இந்த மெய்யறிவைப் பெற முடியாது" (கடோபநிஷத் II- 1-2-9) என்ற வேத வாக்கும் உள்ளது. வேதத்திலும் அதையொட்டிய ஸ்ம்ருதிகளிலும் குறிப்பாக உணர்த்தப்படுகிற ஓர் ஆசிரியரை வரிக்க வேண்டிய கட்டாயத்தைத் தெரிந்து கொள்கிறோம். "ஆசாரியரைப் பெற்றவன் மெய்யறிவு பெறுகிறான்" (சாந்தோக்ய உபநிஷத், VI - 4,2). "ஓர் ஆசார்யரிடமிருந்து பெறப்படுகிற அறிவே உயர்ந்தது" (சாந்தோக்ய உபநிஷத், (IV - 9.3), "(ஆசாரி யருக்குப்) பணிவிடை செய்வதனால் (உண்மையை அறிவா யாக" (பகவத்கீதை, IV - 34) என்பது முதலிய மெய்ந்நூல் வாக்குகளின்படி, ஒருவன் உள்ளுறையும் ஆத்மா என்ற மெய்ப் பொருளைத்தவிர வேறு ஒன்றிலும் அடைக்கலத்தைக் காணாதவ னாய், அச்சம் நீங்கியதும், நிரந்தரமானதும், மங்களமானதும், அசைக்க முடியாதபடி நிலைபெற்றிருப்பதுமான (மெய்ப் பொருளை) அறிய ஆவல் மேலிட, மெய்யறிவில் ஊன்றி நிற்கிற ஓர் ஆசார்யரை அடைந்து, அவரிடம் (சில கேள்விகள்) கேட்டான் என்று இங்கு கூறப்படுகிறது.

ॐ केनेषितं पतति प्रेषितं मनः
केन प्राणः प्रथमः प्रैति युक्तः ।
केनेषितां वाचमिमां वदन्ति
चक्षुः श्रोत्रं क उ देवो युनक्ति ॥ १ ॥

ஓம் கேனேஷிதம் பததி ப்ரேஷிதம் மன:
கேன ப்ராண: ப்ரதம: ப்ரைதி யுக்த: ।
கேனேஷிதம் வாசமிமாம் வதந்தி
சக்ஷு ச்ரோத்ரம் க உ தேவோ யுனக்தி ॥ 1

எவரால் கட்டளையிடப்பட்டு (அப்படி) கட்டளையிடப் பட்ட மனது பொருள்களைப் பற்றிச் செல்கிறது? எவரால் ஏவப் பட்டு, எல்லாவற்றிற்கும் முன்னதான பிராணன் (உயிர்க்காற்று) செயல் படுகிறது? எவரால் ஏவப்பட்டு இந்த சொற்களைப் பேசுகிறார்கள்? கண்களையும் காதுகளையும் செலுத்தும் ஒளித் தத்துவம் எது?

சங்கரரின் உரை

கேன - எவரால்? ஈஷிதம் - ஆணையிடப்பட்டு, ஏவப் பட்டு; பததி; செல்கிறது; தனது பொருளைக் குறித்துச் செல்லு கிறது? - இதுதான் (இந்த வாக்கியத்தின்) சொல் (அமைப்பு) 'இஷ்' என்ற தாது, இங்கு கூறியது கூறல் என்றோ, ''போவது'' என்றோ, பொருளுடையது என்று கருத முடியாதாகையால், இந்தத் தாதுவின் இவ்விடத்து வடிவம், 'விரும்புதல்' என்ற பொருளில்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 'ஈஷிதம்' என்ற சொல்லில், 'இட்' என்ற விகுதி பயன்படுத்தப்பட்டிருக்கும் வடிவம் வேதத்திற்கு உள்ள சலுகையாகும். 'ப்ரேஷிதம்' என்பது (மேற்சொன்ன) அதே தாதுவின் வடிவமாகும். 'ப்ர' என்பது

முன்னடைவாகச் சேர்க்கப் பட்டிருக்கிறது. அதன் பொருள் ''செலுத்துதல்'' என்பதாகும்.

(ஈஷிதம் என்பதில்லாமல்) 'ப்ரேஷிதம்' என்ற சொல் மட்டும் பயன்படுத்தப்பட்டிருக்குமானால், ஒரு குறிப்பிட்ட செலுத்துபவரைப் பற்றிய ஆராய்ச்சி மட்டும் எழுந்திருக்கும்; 'ஏவுதல்' என்பது ''எந்த குறிப்பிட்ட செலுத்துபவர்'' என்றும் ''அந்த செலுத்துதல் எவ்வாறு?'' (என்றும் ஆராய்ச்சி எழுந் திருக்கும்.) ஆனால், 'ஈஷிதம்' என்ற அடைமொழி இருப்பத னால், (மேற்சொன்ன) இரண்டு கேள்விகளுக்கும் வாய்ப் பில்லை. ஏனெனில், அதன்மூலம், ''எவருடைய இச்சையினால் மட்டும் ஏவப்பட்டு (ப்ரேஷிதம்)'' என்ற சிறப்புப் பொருள் நிச்சயிக்கப்படுகிறது.

கேள்வி : (மேற்சொன்ன) இந்தப் பொருள்தான் கருத்தில் கொள்ளப்பட்டதென்றால், 'ஈஷிதம்' (சங்கற்பிக்கப்பட்டது) என்ற சொல்லினாலேயே நோக்கம் நிறைவேறியிருக்கும். ''ஏவுதல்'' (ப்ரேஷிதம்) என்ற சொல் பயன்படுத்தப்பட வேண்டிய தேவையில்லை. மேலும், ஒரு கூடுதலான சொல் என்றால் ஒரு கூடுதலான பொருள் இருக்க வேண்டும் என்பது பொருத்தமானது. எனவே ''எதனால் அது ஏவப்படுகிறது, சங்கல்பமா, செயலா அல்லது வாக்கா?'' என்ற ஒரு சிறப்பான பொருளைப் புரிந்து கொள்வதும் முறையானது.

பதில் : அப்படியில்லை. ஏனெனில் கேள்வியின் போக்கு அப்படி. (கேள்வியின்) போக்கிலிருந்து நியாயமாக பெறக் கூடிய முடிவு என்னவென்றால் உடல், புலன்கள் முதலியவற்றின் கூட்டம் முதலிய அநித்யமான காரியங்கள், அதன் பலன்கள், இவற்றைக் குறித்து வெறுப்பை அடைந்து, இதற்கு மாறாக நித்தியமாயும் மாறாததாயும் இருக்கிற ஒன்றை அறிய விரும்பிய மனிதனால் (இந்த) ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இப்படியிராவிட்டால், கேள்வி நிச்சயமாகப் பொருளற்றதாகி

விடும். ஏனெனில் சங்கல்பம், வாக்கு, செயல் இவற்றின் மூலம் உடல் முதலியவற்றைச் செலுத்தி நடத்தும் தன்மை, எல்லோருக்கும் தெரிந்த செய்தியாகும்.

கேள்வி : இவ்வாறு சொன்ன பின்னும் ''செலுத்தப்பட்டு'' என்ற சொல்லின் கருத்து உறுதியாக எடுத்துக் காண்பிக்கப்படவில்லை.

பதில் : அன்று; ''செலுத்தப்பட்டு'' என்ற சொல் நியாயமாகவே ஒரு சிறப்புப் பொருளைத் தரக்கூடும். ஏனெனில் அது ஐயப்பாடுடைய மனிதனின் கேள்வியாகும். ''யாரால் (i) சங்கல்பிக்கப்பட்டு, (ii) செலுத்தப்பட்ட மனது செயல் புரிகிறது?'' என்ற வாக்கியத்தில் ''சங்கல்பிக்கப்பட்டு'' (ஈஷிதம்), ''செலுத்தப்பட்ட'' (ப்ரேஷிதம்) என்ற இரண்டு அடை மொழிகளும் பின்வரும் கருத்தைத் தெரிவிப்பதாக இருப்பதால் பொருந்தக் கூடியவையே. எப்படியெனில், செலுத்தும் தன்மை, உடல், புலன்கள், இவற்றின் கூட்டத்திற்கே உரியதா? ஏனெனில் இது நன்றாகத் தெரிந்த விஷயம் தானே? அல்லது, தன் இச்சையினாலேயே மனம் முதலியவற்றைச் செயல்படுத்தும் தன்மையானது, (இந்த உடல், புலன்கள் இவற்றினுடைய) கூட்டத்தை விட வேறான தனித்ததொரு பொருளைச் சேர்ந்ததா?

கேள்வி : மனது தன்னிச்சைப்படியே வேறொன்றையும் சாராமல் தன் விஷயத்தைக் குறித்துச் செயல்படுகிறது என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரிந்த ஒன்று. இதில் எவ்வாறு கேள்வி எழக்கூடும்?

பதில் : சொல்கிறோம். மனம் (ஒன்றில்) ஈடுபடுவது அல்லது ஈடுபடாமல் விலகியிருப்பது அதன் தன்னிச்சைப்படி என்றால், அப்பொழுது, ஒருவரும் தனக்கு விருப்பமில்லாத எதையும் (மனத்தில்) எண்ண மாட்டான். ஆனால் (உண்மையென்ன என்றால் தான் விரும்பாத) பின்விளைவுகளைப் பற்றித் தெரிந்தும் கூட, மனம் தீமையைச் செய்யத் துணிகிறது (என்பது

மட்டுமல்ல); (செய்ய வேண்டாம் என்று) தடுக்கப்பட்டாலும், மிகுந்த துயரத்தைத் தரக்கூடிய காரியங்களில் அது ஈடுபடத்தான் செய்கிறது. எனவே, ''கேனேஷிதம் பததி'' (''யாரால் செலுத்தப் பட்டுச் செல்கிறது?'') என்ற கேள்வி பொருத்தமானதே.

கேன - யாரால்; ப்ராணா: - உயிர்ச் சக்திகள்; யுக்தா: - செலுத்தப்படுகின்றன; ஈடுபடுத்தப்பட்டு, ''ப்ரைதி'' (தமக்குரிய தொழிலைக் குறித்து) செல்கின்றன? ப்ரதம - தொடக்கத்தில். இது உயிர்ச்சக்தியின் அடைமொழியாக இருக்க வேண்டும்; ஏனெனில் எல்லா உறுப்புக்களின் தொழில்களும் அதை வைத்துத்தான் நடைபெறுகின்றன. சப்த லக்ஷணாம் - ஒலியை வடிவமாகக் கொண்ட, இமாம் வாசம்: இந்தப் பேச்சு என்ற செயல் உலகத்தில் மக்கள் வழக்கமாகப் பேசுகின்றபடி; கேன ஈஷிதம் - யாரால் ஏவப்படுகிறது? இது போலவே, க உ தேவ - எந்த ஒளிமயமான தெய்வம், சக்ஷு: ச்ரோத்ரம்: காதுகளையும் கண்களையும், யுனக்தி - அதனதன் விஷயங்களைக் குறித்து ஏவுகிறது? செலுத்துகிறது?

மந்த்ரம் 2

சங்கரரின் முன்னுரை

இவ்வாறு கேட்ட தகுதிபடைத்த சீடனுக்கு, ஆசிரியர் கூறினார். ''மனத்தையும் மற்ற உறுப்புக்களையும் தத்தம் விஷயங்களைக் குறித்துத் தொழிற்படுத்தும் ஒளிமயமான தெய்வம் எது? அவர் எப்படி (அவற்றை) செலுத்துகிறார்?'' என்று நீ (உன்) கேள்வியின் மூலம் கேட்டாயே! அதைச் சொல்லுகின்றேன்.''

श्रोत्रस्य श्रोत्रं मनसो मनो यद्वाचो
ह वाचं स उ प्राणस्य प्राणः ।

चक्षुषश्चक्षुरतिमुच्य धीराः
प्रेत्यास्माल्लोकादमृता भवन्ति ॥

ச்ரோத்ரஸ்ய ச்ரோத்ரம் மனஸோ மனோ யத்
வா^சோ ஹ வாசம் ஸ உ ப்ராணஸ்ய ப்ராண: ।
சக்ஷு^ஷஸ் சக்ஷு^: அதிமுச்ய தீரா:
ப்ரேத்யாஸ்மாத் லோகாத் அம்ருதா பவந்தி ॥ 2

அவர் (பரம்பொருள்) செவிக்குச் செவியாகவும், மனதிற்கு மனதாகவும், வாக்கிற்கு வாக்காகவும், உயிருக்கு உயிராகவும், கண்ணுக்குக் கண்ணாகவும் இருப்பதால், அறிவு படைத்த மனிதர்கள் தியாகத்தின் மூலம், உலகைத் துறந்து இறவாமையை அடைகிறார்கள்.

சங்கரரின் உரை

ச்ரோத்ரஸ்ய ச்ரோத்ரம் : செவிக்கும் செவி. எதனால் ஒருவன் (ஒலியைக்) கேட்கிறானோ அது ச்ரோத்ரம் (செவி). அது ஒலியைக் கேட்பதற்குரிய கருவி; சொற்களை விளங்க வைக்கும் ஒலிப்புலன். ''கண்களையும், காதுகளையும் செலுத்தும் ஒளிமயமான தேவன் யார்?'' என்று அவரைக் குறித்து நீ கேள்வி கேட்டாயே, அவர் செவிக்கும் செவியானவர்.

கேள்வி : ''இன்னார் இன்னின்ன குணங்களோடு கூடியவர்; அவர் செவி முதலியவற்றை இயக்குகிறார்'' என்று பதில் அமைய வேண்டியதிருக்க, ''அவர் செவிக்குச் செவியானவர்'' என்று சம்பந்தமில்லாமல் சொன்னது பொருத்தமாயில்லையே?

பதில் : இது குற்றமன்று. ஏனெனில், அவரது சிறப்பு வேறு வழியில் தெரிந்து கொள்ள முடியாதது. செவி முதலியவற்றை இயக்குபவரை, செவி முதலியவற்றின் தொழில்களின் தொடர் பில்லாமலே, தானே செயல் செய்பவராக அறிய முடியுமானால், அரிவாள் முதலியவற்றை உபயோகப்படுத்தி செடி முதலிய

வற்றை வெட்டும் ஒருவனை அறிவதுபோல் (அறிய முடிந்தால்), அப்பொழுது இந்த மேற்சொன்ன பதில் பொருந்தாமலிருக்கலாம். ஆனால் உண்மையில், அரிவாளைக் கொண்டு புல்வெட்டுகின்றவரை எப்படித் தெரிந்து கொள்கிறோமோ அப்படித் தன்னுடைய காரியத்தைச் செய்கின்ற செவி முதலியவற்றை இயக்குகின்ற (இறைவன்) பார்க்கப்படவில்லை. ஆனால் அப்படி ஒருவன் (இறைவன்) இருக்கத்தான் வேண்டும் என்று தவிர்க்க முடியாத அறிவின் முடிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. (அப்படி என்ன தவிர்க்க முடியாத அறிவின் முடிவு?) செவி முதலிய கூட்டத்தின் செயல், சிந்தனை, துணிபு, உறுதி என்று இவற்றை வைத்துக் கொண்டே, இவை யாரோ ஒருவரின் பொருட்டுத்தான் நிகழ்கின்றன (என்பதை ஒப்புக் கொண்டாக வேண்டும்). உதாரணமாக, ஒரு வீடு (யாரோ ஒருவரின் உபயோகத்திற்காகவே கட்டப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகத் தெரிவது போல), இங்கும் (செவி முதலியன ஓர் அறிவு பொருந்திய சக்தியின் காரியமாக எற்பட்டிருக்கின்றன என்பது தெளிவு). செவி முதலிய கூட்டத்திற்கு வேறாக நின்று இயக்கும் ஒருவர் இருக்கிறார். அவருடைய உபயோகத்திற்காக என்றே செவி முதலிய கூட்டம் இயக்கப்படுகிறது (என்பதை) ஏற்கத் தான் வேண்டும் என்பது அறிவின் கட்டாயம். இவ்வாறு, கூட்டமாய்ச் சேர்ந்திருக்கும் பொருட்களெல்லாம் (அவற்றோடு கலக்காத, ஆனால் அவற்றை இயக்குகின்ற) வேறொருவரின் தேவைக்காக இருக்கின்றன என்ற இந்த உண்மையிலிருந்து, செவி முதலியனவற்றிற்கு ஓர் இயக்குனர் இருக்கிறார் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். எனவே, ''அந்த (இயக்கும்) தெய்வம் செவிக்கும் செவியானவர்'' என்ற பதில், கேட்கப்பட்ட கேள்விக்கு பொருத்தமாகத்தான் அமைந்திருக்கிறது.

கேள்வி : ''செவிக்கும் செவியானவர்'' முதலிய சொற்களின் கருத்து இங்கு இன்னும் தெளிவாகவில்லையே? ஒளிக்கு வேறொரு ஒளி எப்படித் தேவையில்லையோ, அதுபோல

இங்கும் ஒரு செவிக்கு இன்னொரு செவி தேவையில்லை என்பதுதானே சரி?

பதில் : இப்படிப்பட்ட பிழை ஒன்றுமில்லை. இங்கு கருத்து இதுதான். உதாரணமாக, செவி தனக்குரிய பொருளை (ஒலியை) அறிவிக்கும் ஆற்றலுடையது என்பது கண்கூடு. தன்னுடைய பொருளை (ஒலியை) செவி அறிவிக்க முடிகிறது என்றால், நித்தியமானதும், பகுதிகளில்லாததும், எங்கும் இருப்பதுமான ஆத்மாவின் (ஒளி) அதில் (செவியில்) இருப்பதனால்தான். இல்லாவிடில் ஏற்படாது.

எனவே, ''செவிக்குச் செவியானது'' என்பது முதலிய சொற்கள் பொருத்தமானதே. இதையே வேறு வேத வாக்கியங் களும் கூறுகின்றன. ''ஆத்மாவின் ஒளியினால்தான் ஒருவன் இருக்கிறான்.'' (பிருஹதாரண்யக உபநிஷத், IV-3.6), ''அவருடைய ஒளியினால்தான் இவை யாவும் ஒளிபெறு கின்றன''. (கடோபநிஷத், II 2.15; ச்வேதாச்வதர உபநிஷத், II-2.10) ''எந்த ஒளியினால் தூண்டப்பட்டு, சூரியன் பிரகாசிக் கிறதோ'' (தைத்திரீய ப்ராஹ்மணம், III, 12, 9, 7) முதலான (வாக்கியங்கள் உள்ளன). கீதையில் ''சூரியனிடத்துள்ளதும் அகில முழுவதையும் ஒளியால் விளங்கச் செய்வதுமான அந்த ஒளியை என்னுடையதாகத் தெரிந்து கொள்வாயாக!'' (XV-12) என்றும், அவ்வாறே, ''ஓ பரத குலத்துதித்தவனே! இந்த உடலில் உள்ளுறையும் அவர் உடலை முழுதும் விளங்கச் செய்கிறார்'' (XIII-33) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்வாறேதான் கட உபநிஷத்திலும் ''(அந்த ஆத்மா) அழியக்கூடியவற்றிலெல்லாம் நிரந்தரமானது; உணர்வு உள்ளவற்றிலெல்லாம் உணர்வானது'' (II-2.13) (என்று சொல்லப்பட்டிருக்கிறது). பொதுவாக (பாமரர் களுக்கு), செவி முதலிய (உடற்கூறுகளே) தம் ஆத்மாவாகத் தோன்றுகின்றன. அவையே, அறிவு படைத்தவைகள் என்று நம்பப்படுகின்றன. இதுவே இங்கு மறுக்கப்படுகிறது.

ஒரு மெய்ப்பொருள் உண்டென்பதும், அது எல்லா வற்றினுள்ளும் வசிக்கிறது என்பதும், அது மாறுதலும், அழிவும், இறப்பும், அச்சமும், பிறப்பும் இல்லாதது என்பதும் செவி முதலியவற்றிற்கும் செவி முதலியனவாக இருக்கிறது என்பதும், அவற்றின் காரிய ஆற்றலுக்கு ஆதாரமாக இருக்கிறது என்பதும், மெய்யுணர்வு பெற்றவர்களின் அறிவிற்குத் தெரிகிறது. எனவே (நாம் கூறிய) பதிலும், (செவிக்குச் செவியானது என்பதன்) உட்பொருளும் பொருத்தமானதே.

இது போலவே மனஸ:- மனதிற்கு, உள்ளே இருக்கும் அறிவுக் கருவிக்கு; மன: (ஆத்மா) மனதாகும். உட்கருவியான (மனது) தன்னுடைய தொழிலான நினைப்பது, தீர்மானிப்பது முதலானவற்றை ஆத்மாவின் அறிவு என்ற விளக்கின் ஒளியின்றிச் செய்ய முடியாது. எனவே, (ஆத்மா) மனதுக்கும் மனமாகும். இவ்விடத்தில், மனதும் புத்தியும் சேர்ந்தே ''மனது'' என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றன. யத் வாசோ ஹ வாசம்: (இங்கு) யத் என்ற சொல் ''ஏனெனில்'' என்ற பொருளில் உபயோகிக்கப் பட்டிருக்கிறது. அது 'ச்ரோத்ரம்' (''செவி'') போன்ற எல்லாச் சொற்களோடும் இது போலவே சேர்க்கப் படுகிறது. ''ஏனெனில், அவர் செவிக்கும் செவியானவர்'' ''ஏனெனில் அவர் மனதுக்கும் மனதானவர்'' என்பது முதலான (இடங்களிலும் இப்படியே பார்த்துக் கொள்ள வேண்டும்). 'வாசோ ஹ வாசம்' என்பதில் செயப்படு பொருளாக வரும் அர்த்தம், பெயர்ச் சொல்லாக மாற்றிக் கொள்ளப்படவேண்டும். அதுதான் 'ப்ராணஸ்ய ப்ராண:' (உயிருக்கு உயிர்) என்ற தொடருக்கு இயைந்து இருக்கும்.

கேள்வி : 'வாசோ ஹ வாசம்' என்ற சொற்களுக்கேற்ப, 'ப்ராணஸ்ய ப்ராணம்' என்று செயப்படு பொருளில் வரும் படியாக ஏன் மாற்றிக் கொள்ளக்கூடாது?

பதில் : அன்று; (எப்போதுமே) பெரும்பான்மையாக இருப்பதை ஒட்டிச் செல்வது சரியாகும். எனவே, 'ஸ: உ ப்ராணஸ்ய ப்ராண:

என்பதில் உள்ள ('ஸ' என்பதும் 'ப்ராண:' என்பதும்) ஆன இரண்டு சொற்களுக்கும் ஏற்ப, 'வாசம்' என்பது 'வாக்' ஆகும். அந்த முறையில்தான், பெரும்பான்மையோடு ஒத்துப் போகும் நியாயம் காப்பாற்றப்படும்.

மேலும், எதைப்பற்றிக் கேள்வி கேட்கப்படுகிறதோ, அது பெயர்ச் சொல்லாக முதல் வேற்றுமை உருபில்தான் நியாயமாகக் குறிப்பிடப்படவேண்டும். நீ கேட்கும் (அறிய விரும்பும்) உயிருக்கும் உயிரான (ஆத்மாவான) இறைவனால்தான் வாழ்வினைக் காக்கும் உயிர் மூச்சு தன் தொழிலை ஒழுங்காக நிறைவேற்றுகின்ற ஆற்றல் பெறுகிறது. இதற்குக் காரணம், ஆத்மாவை அடிப்படையாகக் கொள்ளாத எதனாலும், உயிரைப் பாதுகாக்க முடியாது. (பின்வரும்) வேதவாக்குகளும் இதையே சொல்லுகின்றன.

''(இதயத்தினுள்) இந்த மேலான ஆகாயம் (ஆத்மா) என்ற ஆனந்தம் இல்லையானால் யார்தான் மூச்சு விடமுடியும்?'' (தைத்திரீய உபநிஷத், II - 7-1); ''ஆத்மாவே பிராணவாயுவை மேல் நோக்கித் தள்ளுகின்றவர்; அபான வாயுவை உள் நோக்கிச் செலுத்துகின்றவர்''. (கட உபநிஷத், II-2-3). இதே (கேன உபநிஷத்திலும்), ''எதனால் மூச்சு நிகழ்கிறதோ அதைப் பரம் பொருள் (பிரம்மம்) என்று அறிவாயாக!'' (கேன உபநிஷத், I-9).

கேள்வி : 'பிராணன்' (என்ற சொல்லிற்கு) (உயிர் என்று பொருள் கொள்ளாமல்) மணத்தை நுகரும் புலன், நாசி என்று பொருள் கொள்வது பொருத்தமாக இருக்குமல்லவா? (ஏனெனில்) இந்த இடத்தில் செவி முதலிய புலன்களைப் பற்றித் தானே பேசப்படுகிறது?

பதில் : இது உண்மை. ''பிராணன்'' (உயிர்) என்று சொல்கின்ற போதே, மணத்தை நுகரும் புலனான நாசியையும் சொல்லியதாகிவிடும் என்று வேதம் கருதுகிறது. இந்த இடத்தில் கருத்தில்

கொண்ட உட்பொருள் இதுதான். ''எதன் பொருட்டு (கை, கால் முதலிய) செயற்கருவிகளும் (கண், காது முதலிய) அறிவுக் கருவிகளும் தொழிற்படுகின்றனவோ, அது பரம்பொருள் (பிரம்மம்) ஆகும்!''

இது போன்றே, அந்தப் (பரம்பொருள்) கண்ணுக்குக் கண்ணாகும். (சக்ஷுஷஸ் சக்ஷு:). வண்ணங்களைப் பார்க்கும் புலனான கண்ணினுடைய ஆற்றல், ஆத்மாவின் அறிவினால் இயக்கப்படுவதனால்தான் சாத்தியமாகிறது. எனவே அந்த ஆத்மா கண்ணுக்குக் கண் ஆகும். கேள்வி கேட்டவர் எது குறித்துக் கேட்டாரோ அதன் பொருளைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுவதால், ''அறிந்து கொண்டு'' என்ற சொற்கள் இந்த இடத்தில் பின்வருமாறு சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். செவிக்கும் செவியான பரம்பொருளைத், ''தெரிந்து கொண்ட பின்'' என்று (சேர்த்துக் கொள்வது) அவசியம். ஏனெனில், ''(இவ்வாறு தெரிந்து கொண்டவர்கள்) மரணமில்லாதவர் ஆகிறார்கள் (முக்தியை அடைகிறார்கள்)'' என்று அவ்வாறு தெரிந்து கொள்வதன் பயனை (உபநிஷத்தில்) சொல்லப் பட்டிருக்கிறது. (கேன உபநிஷத், II - 5). முக்தியும் மெய்யுணர் வினால் அல்லவா அடையப்படுகிறது? மெய்ப்பொருளை அறிந்து வீடுபேறு பெறுகிறான் என்ற பொருள் இங்கு வலிவு பெறுகிறது. செவி முதலிய புலன்களின் கூட்டத்தை (மெய்யறி வினால்) துறக்க வேண்டும். அவற்றையே ஆத்மாவாக, மெய்ப்பொருளாக எண்ணிக் கொண்டு அவற்றோடு கலந்து, பிறப்பதும், இறப்பதுமாக மனிதன் அலைகிறான். எனவே, ''செவிக்குச் செவி'' என்று விளக்கப்படும் பரம்பொருளை (பிரம்மத்தைத்) தனது ஆத்மாவாக உணரும் ஒருவன், ('அதி முச்ய') செவி முதலியவற்றோடு தன்னை ஒன்றாக எண்ணு வதைவிட்டு, (முக்தியை அடைகிறான்). செவி முதலான வற்றோடு தம்மை ஒன்றாக எண்ணுவதை விட்டவர்கள் அறிவுடையவர்கள், அல்லது தீரர்கள். சிறப்பான அறிவை

ஒருவன் பெற்றிருந்தாலன்றி, செவி முதலிய (உடற்கூறுகளின் கூட்டத்தோடு தன்னை) ஒன்றாக எண்ணுவதை ஒருவன் விடமுடியாது. பிள்ளைகள், நண்பர்கள், மனைவிகள், உறவினர் என்ற இவர்களைக் குறித்து 'நான்' 'எனது' என்னும் எண்ணங்களின் மூலம் ஏற்படும் உலக நடவடிக்கைகளிலிருந்து, அதாவது, எல்லா ஆசைகளையும் துறந்து, (அவர்கள்) மரணமில்லாதவர்களாக, முடிவில்லாதவர்களாக (முக்தர்களாக) ஆகிறார்கள். இது வேத வாக்குகளுக்கு ஒத்தும் இருக்கிறது. ''காரியத்தினாலோ பிள்ளை குட்டிகளினாலோ, செல்வத்தி னாலோ ஏற்பட முடியாத நித்தியமான முக்தியை தியாகத்தினால் மட்டும் சில (பெரியோர்கள்) அடைகிறார்கள்.'' (கைவல்ய உபநிஷத் : I -2).

''தனக்குத்தானே காரணமான இறைவன் வெளிப்புறமாகச் சென்று இயங்கும் புலன்களை அமைத்தார். அதனால், ஒரு மனிதன் புறப்பொருட்களையே பார்க்கிறான்; (தனக்கு) உள்ளே இருக்கும் ஆத்மாவைப் பார்ப்பதில்லை. (ஆனால்) அறிவுக் கூர்மை உடைய ஒருவன், முக்தியை விரும்பி, தன்னுடைய பார்வையை உள்முகமாகத் திருப்பி, (தனக்கு) உள்ளேயிருக்கும் ஆத்மாவைக் கண்டான்'' (கட உபநிஷத் II -1.1); ''ஒருவனது இதயத்தை பற்றிக் கொண்டிருக்கும் ஆசாபாசங்கள் அகலும் பொழுது, அவன் இங்கு பரம் பொருளை அடைகிறான்'' (கட உபநிஷத் II 3.14) (என்றெல்லாம் வேத வாக்குகள் இருக் கின்றன). (கேன உபநிஷத்தில்) 'அதிமுச்ய' என்ற சொல்லி லேயே ஆசைகளை விடுவது என்பது தொக்கியிருத்தலால், 'ப்ரேத்ய' என்ற சொல்லுக்கு, 'உடலிலிருந்து பிரிந்து' அதாவது 'இறந்த பிற்பாடு' என்றும் பொருள் கொள்ளலாம்.

மந்த்ரம் 3

च न तत्र चक्षुर्गच्छति न वाग्गच्छति नो मनः ।
न विद्मो न विजानीमो यथैतत् अनुशिष्यात् ॥

ந தத்ர சக்ஷுர் கச்சதி ந வாக் கச்சதி நோ மன:।
ந வித்மோ ந விஜானீமோ யதைதத் அநுசிஷ்யாத்॥ 3

கண்கள் அங்கு செல்வதில்லை; வாக்கும் மனமும் கூடத் தான். (பரம்பொருள் இன்னதென்று) நமக்குத் தெரியவில்லை. எனவே, அதை உபதேசிக்கின்ற வழி ஒன்றும் எமக்குப் புலனாக வில்லை.

சங்கரரின் உரை

'செவி முதலானவற்றிற்கும் செவியான' பரம்பொருள் (பிரம்மம்) அந்தப் புலன்களுக்கும் ஆத்மாவாக இருப்பதால், 'தத்ர', அங்கு, அந்தப் பரம்பொருளிடத்து (சக்ஷு) கண் (ந கச்சதி) செல்வதில்லை. தன்னைக் குறித்துத் தானே செல்வது என்பது முடியாது. இதே போல், (ந வாக் கச்சதி): வாக்கு (அங்கு) செல்வதில்லை. வாக்கினால் சொல்லப்பட்ட ஒரு சொல், அதன் பொருளை (அர்த்தத்தை) வெளியிடும் பொழுது, வாக்கு அந்தப் பொருளைக் குறித்துச் செல்வதாகக் கூறப் படுகிறது. ஆனால் பரம்பொருளான (பிரம்மமோ) அந்தச் சொல்லின் ஆத்மாவாகவும், அந்தச் சொல்லைப் பேசும் கருவியான வாக்குக்கும் ஆத்மாவாகவும் உள்ளது. அதனால், வாக்கு அங்கு (அந்தப் பரம்பொருளிடத்தில்) செல்வதில்லை. உதாரணமாக, நெருப்பு பொருட்களை எரிக்கிறது, பிரகாசப் படுத்துகிறது. ஆனால் தன்னைத்தானே எரிப்பதுமில்லை, பிரகாசப்படுத்துவதுமில்லை. (பிரகாசம் வேறு, நெருப்பு வேறு அன்று). அதைப் போலவேதான் இங்கும்.

(நோ மன:) மனதும் பரம்பொருளைக் காண்பிக்க முடிய வில்லை. வேறு பொருட்களை மனது எண்ணிப்பார்த்து, உறுதி செய்கிறதே தவிர, அது தன்னைத்தானே எண்ணிப்பார்த்து உறுதி செய்வதில்லை. ஏனெனில், அதற்கும் பரம்பொருளே

(பிரம்மமே) ஆத்மாவாக இருக்கிறது. ஒரு பொருள் மனத்தாலும் புலன்களாலும் மட்டுமேயல்லவா அறியப்படுகிறது? பரம் பொருள் இவைகளுக்குப் பொருளாகவில்லை யாதலால், ('ந வித்ம:') நாம் (அதை) 'இப்படி, இப்படி' என்று அறியவில்லை.

அதனால் (ந விஜானீம:), அதைத் தெரிந்து கொள்ள வில்லை. எந்த வழியில் இந்தப் பரம்பொருள், 'அநுசிஷ்யாத்' (மாணவனுக்கு) உபதேசிக்கப்பட முடியும்? இது தான் கருத்து. புலன்களால் அறியக் கூடியதாக ஒரு பொருள் இருந்தால் இன்னொருவருக்கு, அதன் இனம், குணம், செயல் என்று வரையறுத்து விளக்க முடியும். பரம் பொருளுக்கு இந்த இனம் முதலிய அடையாளம் கிடையாது. எனவே, உபதேசத்தின் மூலமாக சீடர்களுக்கு அதைப்பற்றிப் புரிந்து கொள்ள வைப்பது கடினம். இந்த முறையில், (அந்த பரம்பொருளைப்பற்றித்) தெரிய வைப்பதும் அதன் பொருளைப் புரிய வைப்பதும் ஆகிய இந்த விஷயத்தில், எவ்வளவு பெரும் முயற்சி தேவைப்படுகிறது என்று இந்த (கேன உபநிஷத்) காண்பிக்கிறது.

''நாங்கள் பரம்பொருளை அறியோம்; அதனால் அதை எடுத்துரைக்கும் வழியொன்றையும் நாங்கள் காணவில்லை'' என்ற வேதவாக்கின் விளைவாக, (அந்தப் பரம்பொருளைப் பற்றி) எடுத்துக் கூற வழியே இல்லை என்று முழுவதுமாக மறுக்கின்ற அபாயம் உண்டாகிவிட்டபடியால், இதற்கு ஒரு விலக்கு அடுத்த மந்த்ரத்தில் கூறப்படுகிறது.

புலன்கள் தரக்கூடிய அறிவுமுறைகளை ஆதாரமாக வைத்து பரம் பொருளைப் பற்றிய அறிவைத் தர முடியாது என்பது என்னவோ உண்மைதான். ஆனால் வழிவழிவந்த வேதங்களின் சாட்சியை வைத்து அத்தகைய அறிவை உண்டாக்க முடியும். ஆதலால், அதை (பரம் பொருளைப்) பற்றிய அறிவை உபதேசிப்பதற்காக வழிவழிவந்த வேதமானது மேற்கோளாக எடுத்துக் காட்டப்படுகிறது.

மந்த்ரம் 4

अन्यदेव तद्विदितादथो अविदितादधि ।
इति शुश्रुम पूर्वेषां ये नस्तद् व्याचचक्षिरे ॥

அன்யதேவ தத்விதிதாத் அதோ அவிதிதாததி।
இதி சுச்ரும பூர்வேஷாம் யே நஸ் தத் வ்யாசசக்ஷிரே ॥ 4

''அது (பரம்பொருள்) நிச்சயமாக (நமக்குத்) தெரிந்தவற்றிலிருந்து வேறானது; மறுபடியும், (நமக்குத்) தெரியாதவற்றிலிருந்தும் அது வேறானது'' - இப்படித்தான், அதை எங்களுக்கு விளக்கிச் சொன்ன முன்னோர்களிடமிருந்து கேட்டிருக்கிறோம்.

சங்கரரின் உரை

தத் - அது; அதாவது நாம் விவாதித்துக் கொண்டிருக்கிற விஷயம்; அன்யத் ஏவ - வேறுதான்; ஆத்மா செவிக்கும் செவி என்பது என்று சொல்லப்பட்டது. (செவி முதலியவற்றிற்கு) அது அப்பாற்பட்டது. அறிவினால் தெரிந்த எல்லாவற்றினின்றும் அது வேறானது (நமக்குத்) தெரிந்த எதுவும் (நமது) அறியும் செயலின் பிடிக்குள் வருவதாகத்தான் இருக்கிறது. ''தெரிந்து கொண்டேன்'' என்னும் செயலுக்குப் பொருளாகின்ற எல்லாமே ஏதாவது ஒருவரால் எங்கேனும் அறியப்படுவதாக இருக்கிறது. வெளிப்படையாகத் தோன்றும் எல்லாமே அறியப்படுவதாகத் தான் இருக்கும். அதனால், அறியப்படும் எந்தப் பொருளையும் விட ஆத்மா வேறானது என்பது இங்கு கருத்து. அப்படியானால் அறியப்படாமலேயே அது போய்விடுமோ என்ற அச்சத்தைப் போக்குவதற்காக, (உபநிஷத்) வாக்கியம் சொல்லுகிறது: (அதோ) மறுபடியும்; (அவிதிதாத்) அறியப்படாதவற்றிலிருந்தும் வேறானது. அறியப்படும் எல்லாவற்றிற்கும் மூலவித்தா

னதும், வெளிப்படையாகத் தோன்றாத அறியாமையில் உருவானதும் ஆன (எல்லா வற்றினின்றும்) அது வேறானது. 'அதி' என்ற சொல், 'மேலானது' என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டு, (இங்கு) ''வேறான'' என்ற பொருளில் அணியாக வருகிறது. ஏனெனில், ஏதேனும் ஒன்றைவிட மேலானதாக இருக்கும் மற்றொன்று, அதைவிட வேறாகவும் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அறியப்படும் பொருள் எதுவும் ஓர் அளவுக்குட்பட்டதாகவும், அழியக் கூடியதாகவும், துன்பமாகவும் இருக்கிறது.

அதனால், அது விலக்கப்பட வேண்டியது. எனவே பரம்பொருள் அறியப்படும் (எல்லாவற்றினின்றும்) வேறானது என்று சொல்லப்படும்பொழுது, அது விலக்கப்பட வேண்டிய ஒன்று இல்லை என்று சொல்வதாகத்தான் ஆகும். இது போலவே, அறியப்படாதவற்றினின்றும் அது வேறானது என்று கூறப்படும் பொழுது, அது அடையப்படக்கூடிய ஒன்றன்று என்று கூறுவதாகவே ஆகிறது. ஏதாவதொன்றைப் பயனாக அடைவதற்காகத்தான், அதைவிட வேறான அதன் காரணத்தை ஒருவர் அடைகிறார். எனவே தன் ஆத்மாவைத் தவிர வேறான ஒரு பயன் இல்லையாதலால் அந்த ஆத்மாவைத் தவிர வேறான ஒன்று அடையப்பட வேண்டிய அவசியம் இல்லை. இவ்வாறு பரம்பொருள் தெரிந்தது, தெரியாதது என்ற (இவ்விரண்டிலிருந்தும்) வேறானது என்ற கூற்றினால், பரம்பொருள் (புதிதாகக்) கொள்ளப்படுவது அல்லது தள்ளப்படுவது என்ற (இந்த இரண்டு நிலைகளுமே) மறுக்கப்பட்டுவிடுகின்றன. இதனால் பரம் பொருள் தன்னைத்தவிர வேறான ஒன்றில்லை என்பதனால் அதை அறிய வேண்டும் என்ற சீடனுடைய விருப்பம் நிறைவேறி விடுகிறது.

ஏனெனில் தெரிந்தது தெரியாதது என்ற இரண்டைவிட வேறாக ஒன்று இருக்குமானால் அது தனது சொந்த ஆத்மாவைத்

தவிர வேறானதாக இருக்க முடியாது. இதிலிருந்து, ஆத்மாவே பிரம்மம் (பரம்பொருள்) என்பது வாக்கியத்தின் பொருள் என்று தெரிகிறது. இதுவே கீழ்க்கண்ட வேத வாக்குகளாலும் ஏற்படுகிறது. ''இந்த ஆத்மா பரம்பொருளாகும்.'' (மாண்டுக்ய உபநிஷத், 2; பிருஹதாரண்யக உபநிஷத் II - 5.19; IV - 4.5); ''பாவங்களால் தீண்டப்படாத அந்த ஆத்மா'' (சாந்தோக்ய உபநிஷத் VIII 7.1); ''உடனடியானதும் நேராகத் தெரிவதும், எல்லாவற்றினுள்ளும் இருப்பதுமான ஆத்மாவே பரம்பொருள்'' (பிருஹதாரண்யக உபநிஷத், III - 4.1) என்ற வேதவாக்குகள் காணப்படுகின்றன. இவ்வாறு, ''இதை நாங்கள் கேட்டிருக் கிறோம்'' (கேன உபநிஷத் I - 4) என்ற வாக்கியம், வேற்றுமை களற்றதும், தூய அறிவானதும் எல்லாவற்றிற்கும் ஆத்மாவுமான பரம்பொருள்தான் அந்த வேதவாக்கின் உட்கருத்து என்பதை. ஆசாரியர், சீடர் என்று தொடர்ந்துவரும் பரம்பரையினால் பெறப்பட்டது என்பதை ''இவ்விதம் கேள்விப்பட்டிருக்கிறோம் என்ற கேன உபநிஷத் வாக்கியம் தெரியப்படுத்துகிறது. அத்தகைய ஆசார்யர்களின் மரபுவழிவந்த உபதேசத்தின் மூலமாகத்தான் பரம்பொருள் அறியப்படமுடியும். (பகுத்தறிவு) என்ற வெறும் வறட்டு அறிவினால் அல்ல; (புத்தகப்) படிப்பினாலும் அல்ல; புத்தி கூர்மையினாலோ, பரந்த கல்வியினாலோ, தவத்தினாலோ, வேள்விகளினாலோ, இன்னும் இவை போன்றவைகளினாலோ அல்ல. 'இதி' (இதைத்தான்) 'சுச்ரும' நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். 'பூர்வேஷாம்' பழம்பெரும் ஆசிரியரிடமிருந்து (அதாவது, பழம்பெரும் ஆசிரியர்களின் உபதேசங்களிலிருந்து); 'யே' எவர்கள் (ஆசாரியர்கள்) 'ந:' எங்களுக்கு 'தத்' அந்தப் (பரம்பொருளை) 'வ்யாசசக்ஷிரே' விளக்கினார்களோ, தெளிவாக எடுத்துச் சொன்னார்களோ (அந்த ஆசாரியர்களிடமிருந்து கேட்டிருக் கிறோம்).

மந்த்ரம் 5

சங்கரர் முன்னுரை

''அந்தப் பரம்பொருள் நமக்குத் தெரிந்தவற்றினின்றும் வேறானது; இன்னும், நமக்குத் தெரியாதவற்றினின்றும் மேலானது'' என்ற வாக்கியத்தினால் (நம்) ஆத்மாவே பரம் பொருள் (பிரம்மம்) என்ற கருத்து நிலைநிறுத்தப்பட்டு விட்டதால், (இதைக்) கேட்டுக் கொண்டிருக்கும் ஒருவருக்கு, ஓர் ஐயம் உண்டாகிறது. ''ஆத்மா எப்படி பிரம்மமாகும்? வைதிகச் சடங்குகளைச் செய்வது, தேவதைகளை உபாஸனை செய்வது என்ற கடமைகளைச் செய்யத் தகுதி உள்ள மனிதன் சடங்கு களையோ, உபாஸனையையோ செய்வதன் மூலமாக பிரம்மா முதலிய தேவர்களையோ சுவர்க்கத்தையோ அடைய விரும்பு கிறான். அவனைவிட வேறான விஷ்ணு, பரமேச்வரன், இந்த்ரன், பிராண தேவதை என்பவர்கள் அவனால் உபாஸிக்கப்பட வேண்டிய பரம்பொருளாகின்றனர். அவர்கள் அவனுடைய சொந்த ஆத்மாவாகமாட்டார்கள்.

''ஏனெனில், இது உலக வழக்கிற்கு எதிராக இருக்கிறது. சில தர்க்க வாதிகள், ஆத்மா இறைவனைவிட வேறானது என்று கூறுவதுபோல, வைதிகச் சடங்குகளைச் செய்வதே மனிதனின் ஒரே கடமை என்று சொல்கிறவர்களும், ''இந்தத் (தேவதையைக் குறித்து) வேள்வி செய்க.'' ''அந்தத் தேவதையைக் குறித்து வேள்வி செய்க'' என்று பல்வேறு தேவதைகளைத் தான் தொழுகிறார்கள். எனவே, நன்கு தெரிந்ததும் உபாஸனைக் குரியதுமான ஒன்றுதான் பிரம்மமாக இருக்க முடியும். உபாஸிப்பவர் அதைவிட வேறாகத்தான் இருக்க வேண்டும். இதுதான் அறிவிற்குப் பொருத்தமானது.''

இத்தகைய ஐயம் சீடனிடத்திலிருப்பதை அவனுடைய முகக் குறிப்பிலிருந்தோ அல்லது சொற்களிலிருந்தோ கவனித்து விட்டு, ஆசாரியர் ''இவ்வாறு ஐயப்படவேண்டாம்'' என்றார்.

यद्वाचाऽनभ्युदितं येन वागभ्युद्यते ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥

யத்வாசா அநப்யுதிதம் யேன வாக் அப்யுத்யதே!
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதம் உபாஸதே!! 5

ஏதொன்று வாக்கினால் சொல்ல முடியாதோ, ஏதொன்றினால் பேச்சும் சாத்தியமாகிறதோ, அதைப் பரம்பொருள் (பிரம்மம்) என்று தெரிந்து கொள். (அதன்றி) (சாதாரண மக்கள்) ஏதோ தாம் வழிபடும் பொருளாக நினைத்துக் கொண்டிருக்கிறார்களே, அது அன்று.

சங்கரரின் உரை

('யத்'), ஏதொன்று தூய அறிவையே தனது இயல்பாகக் கொண்டிருக்கிறதோ (அது). 'வாக்:' (பேசுவதற்குதவும்) கருவி; (உடலில்) எட்டு இடங்களிலும் (மார்பு, தொண்டை, தலை, நாவின் அடி, பற்கள், மூக்கு, உதடுகள், அண்ணம்) இருந்து அக்னி தேவதை இயக்க, எழுத்துக்களைப் பேசுகின்ற (கருவி) அது. எழுத்துக்களும் ஓர் வரிசையில் உச்சரிக்கப்படும் பொழுது ஒரு பொருளை வெளியிடுபவனவாக வாக்கு என்று அழைக்கப் படுகின்றன.

இவ்விதம் ஒரு கருத்தை வெளிப் படுத்தக் கூடிய ஒலி வாக்கு எனப்படுகின்றது. வேதமும் இதைப் (பின்வருமாறு) கூறுகிறது. ''அ'' என்ற எழுத்துத்தான் எல்லாப் பேச்சுமாகிறது. அந்தப் பேச்சு, ஸ்பர்சம் என்ற 'க' முதல் 'ம' வரையிலுள்ள 25 மெய்யெழுத்துக்களாகவும், அந்தஸ்த்தம்: என்ற (ய, ர, ல, வ என்று) இடையில் வரும் எழுத்துக்களாகவும், ஊஷ்ம (ஷ, ச, ஸ, ஹ) என்று எழுத்துக்களாகவும் வெளிப்பட்டு, பல வேறுபட்ட வடிவங்களாகின்றன. (ஐதரேய ஆரண்யகம், II - 3, 7, 13)

'வாசா:' வாக்கினால் இவை ஐந்து வகையாக (கீழ்க்கண்டவாறு) வேறுபடுகின்றன. சந்தஸ்ஸுள்ள செய்யுள் (ரிக்), உரைநடை (யஜுஸ்), இசை (ஸாமம்), உண்மை, பொய்.

'சொற்கள் என்று இலக்கணம் வகுக்கப்படுவதும், பேசும் கருவியான நாக்கைத் தனது துணையாகக் கொண்டதுமான வாக்கினால்' என்பது 'வாக்கினால்' என்ற சொல்லுக்கு (இங்கு விரிந்த பொருளாகும்).

(யத்) யாதொன்று (அநப்யுதிதம்) வெளிப்படைப் பேச்சாக உச்சரிக்கப்படவில்லையோ, (யேன) யாதொன்றினால், பரம் பொருளினால், அறிவின் ஒளியினால், (வாக்) பேச்சானது, அதன் கருவிகளுடன் சேர்ந்து ஒரு பொருளை எடுத்துச் சொல் வதன் பொருட்டு (அப்யுத்யதே) உச்சரிக்கப்படுகிறதோ, வெளிப் படையாக சொல்லப்படுகிறதோ, அதாவது, பயன் படுத்தப்படு கிறதோ அது வாக்கு எனப்படும்.

''வாக்குக்கு வாக்காக'' (கேனோபநிஷத் - I 2) என்றும், ''அது (அந்தப் பரம்பொருட்சக்தி) பேசும் பொழுது, பேசும் கருவி என்று அழைக்கப்படுகிறது'' (பிருஹதாரண்யக உபநிஷத், I - 4.7) என்றும், ''எந்தப் (பரம்பொருள்) பேச்சுக்கருவியை உள்ளிருந்து நடத்துகிறதோ'' (பிருஹதாரண்யக உபநிஷத் III - 7.17) என்றும் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ''எதைக் குறித்து பேச்சு (என்னும் சக்தி) ஒலிகளில் அடங்கியிருக்கிறது என்பது பற்றி எந்த வேதியராவது அறிவாரா?'' என்று கேள்வி எழுப்பி, அதற்கு விடையாக '' எதன் சக்தியால் ஒருவன் கனவில் பேசுகிறானோ அது வாக்கு எனப்படும்'' என்று சொல்லப் பட்டிருக்கிறதோ, பேசுகின்றவருக்குள்ள அந்த நித்யமான சக்தியே வாக்கு எனப்படும். உண்மையில், அது அறிவின் ஒளியேயாகும். இது பின்வரும் வேதவாக்கினால் பெறப்படு கிறது. ''ஏனெனில், பேசுகின்றவரின் பேச்சுச்சக்திக்கு ஒரு

பொழுதும் அழிவு கிடையாது''. (பிருஹதாரண்யக உபநிஷத் IV-3.26) (தத்ஏவ) அதுவேதான் (அதாவது) அந்தப் பரம் பொருள் தான் உன் சொந்தத் தன்மையாகும் என்று (த்வம்) நீ, (வித்தி:) தெரிந்து கொள். ''பரம்பொருளை விட உயர்ந்தது ஒன்றும் இல்லை. அது பெரியது என்பதால் 'பூமா' எனப்படுகிறது. இதனால் அது 'பூமா' (பெரியது)என்று அழைக்கப்படுகிறது. (சாந்தோக்ய உபநிஷத் VII, 23.1)

பேச்சு முதலிய எல்லாவற்றையும் தள்ளிவிட்டு, ஆத்மா வையே தடையேதுமில்லாத பிரம்மமாகத் தெரிந்து கொள். இந்தத் தடைகளால் அல்லவா, வழக்குகளொன்று மில்லாததும், வேற்றுமைகளற்றதும், எல்லாவற்றிற்கும் மேலானதும் ஒரே சீரானதுமான பரம்பொருளைக் குறித்து ''அது வாக்குக்கு வாக்காகும்'', ''கண்ணுக்குக் கண்ணாகும்'' ''காதுக்குக் காதா கும்'' ''மனதிற்கு மனதாகும்'', காரியங்களைச் செய்யும், பலன் களை நுகரும், அறியும், அடக்கி ஆளும், ஆணையிடும் அது, அறிவும், ஆனந்தமும் ஆகிற பிரம்மம் என்ற பேச்சுக்க ளெல்லாம் நிகழ்கின்றன?

இது தான் (உபநிஷத்தில் வரும்) 'ஏவ' என்ற சொல்லின் பொருள். (இதம்) 'இது' வென்று (சுட்டிக் காட்டப்படும் பொருளாக) தடைகளால் ஏற்படும் வேற்றுமை களையுடைய, ஆத்மாவல்லாத தேவதைகள் முதலியவற்றை மக்கள் உபாஸிக்கிறார்களே, தியானம் செய்கிறார்களே அது பிரம்ம மன்று.

''அதையே பிரம்மம் என்று அறிவாயாக!'' என்ற (உபநிஷத்) வாக்கியத்தின் மூலம் ''ஆத்மா அல்லாத (உடல் முதலிய) ஒன்றும் பிரம்மமில்லை'' என்பது கூறப்பட்டுவிட்டா லும், (விதிவிலக்கு இல்லாத) வெளிப்படையானதொரு நியதியை எடுத்து விளக்கும் பொருட்டு இதே கருத்து ''இது பிரம்மமன்று'' என்ற வாக்கியத்தில் திரும்பவும் கூறப்படுகிறது.

அல்லது, பிரம்மமல்லாத ஒன்றைப் பிரம்மமாகக் கூறுவதைத் (தவறு என்று) விலக்கும் நோக்கத்துடன் இவ்வாறு கூறப்பட்டது என்றும் வைத்துக் கொள்ளலாம்.

மந்த்ரம் 6

यन्मनसा न मनुते येनाहुर्मनो मतम् ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदं उपासते ॥

யந் மனஸா ந மனுதே யேனாஹுர் மனோ மதம்।
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதம் உபாஸதே॥ 6

எதனை (ஒருவன்) மனதால் அறியமுடியவில்லையோ, எதனால் மனதும் அறியப்படுகிறது என்று சொல்கிறார்களோ, அதைப் பிரம்மம் என்று அறிந்து கொள். இந்த (மக்கள்) உபாஸிப்பதெல்லாம் பிரம்மம் அல்ல.

சங்கரரின் உரை

(ஒரு விஷயத்தில் பல சாத்தியக்கூறுகள் இருக்கும்போது, மற்றவற்றை விலக்கி ஒன்றே ஒன்றை மட்டும் கட்டளையாக ஏற்பது நியமவிதி என்ற சட்டமாகும். ஆத்மா, அது அல்லாத வேறு ஒன்று என்ற இரண்டுமே பிரம்மமாகலாம் என்ற இரண்டு சாத்தியக்கூறுகள் இருந்தால், அதில் ஆத்மாவையே பிரம்மம் என்று கொள்ள வேண்டும் என்பது சட்டமாக இங்கு கூறப்படுகிறது.

''ஆத்மாவே பிரம்மம்'' ''ஆத்மா அல்லாதது பிரம்மம்'' என்பதில் ''ஆத்மா அல்லாதது பிரம்மம்'' என்பதை விலக்குகிற நியதி பரிஸங்க்யா விதி எனப்படும். இங்கு இந்த இருவகையிலும் பொருள் கொள்ளலாம் என்பது பகவான் சங்கரரின் கருத்து.)

மனஸ் என்றால் (அறிவதற்குரிய) உட்கருவி. மனதும் புத்தியும் ஒரே உட்கருவியாக இங்கு கருதப்படுகின்றன. 'மனஸ்' என்ற சொல், 'மன்' என்ற தாதுவிலிருந்து பிறந்தது. எதனால் (ஒருவன்) சிந்திக்கிறானோ (அது மனஸ்). அது எல்லாப் புலன் களுக்கும் பொதுவானது. ஏனெனில், அது எல்லாப் பொருள் களையும் தழுவி நிற்கிறது. மனது என்பது விரும்புதல் முதலிய வற்றைத் தனது தொழில்களாக உடையது. ''இச்சை, சிந்தனை, ஐயம், நம்பிக்கை, நம்பிக்கையின்மை, உறுதி, உறுதியின்மை, வெட்கம், அறிவு, அச்சம் - இவையெல்லாம் மனதையன்றி வேறல்ல'' (பிருஹதாரண்யக உபநிஷத், ப 5.3) என்ற வேத வாக்கின்படி (இது கூறப்பட்டது). இச்சை முதலிய தொழில்களை யுடையது மனம்.

(யத்) மனத்தையும் விளங்கச் செய்யும் அறிவின் ஒளி, பிரம்மம் (ந மனுதே). இந்த மனத்தினால் சிந்திக்கவோ, அதை உறுதி செய்யவோ, விருப்பப்படி இயக்கவோ முடியாது. ஏனென்றால், மனத்தையும் ஒளிபெறச் செய்கிற வகையில் அது (பரம்பொருள்) மனத்தை ஆள்கிறது. எல்லாவற்றிற்கும் உள்ளிருக்கும் ஸாரமாகவே (தன்மையாகவே) ஆத்மா அமைந் திருப்பதால், மனது அதன் சொந்தத் தன்மையான ஆத்மாவைக் குறித்துச் செயல்பட முடியாது. உள்ளிருக்கும் ஆத்மா என்ற அறிவின் ஒளி அதை அறிவுறுத்தும் பொழுதுதான் மனது சிந்திக்கும் ஆற்றலைப் பெறுகிறது. அந்தப் பரம்பொருளை அறிந்தவர்கள், பரம் பொருளினால் மனது அதனுடைய பல செயல் வடிவங்களோடு அறியப்படுகிறது, வியாபிக்கப்படுகிறது என்று சொல்கிறார்கள்.

ஆகையால், (தத் ஏவ) அந்தப் (பரம்பொருளையே) மனத்தின் உள்ளிருந்து அறிவு ஊட்டும் (அந்த ஆத்மாவையே) பிரம்மம் என்று தெளிவாக உணர்வாயாக. மற்றபடி (மனிதர்கள்

உலகில் வழிபடும் இவையெல்லாம் பரம் பொருளல்ல) என்று முன் சொன்னவாறு புரிந்து கொள்ள வேண்டும்.

மந்த்ரம் 7

यच्चक्षुषा न पश्यति येन चक्षूंषि पश्यति ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥

யச் சக்ஷுஷா ந பச்யதி யேன சக்ஷும்ஷி பச்யதி।
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதமுபாஸதே॥ 7

எதை (ஒருவன்) கண்களினால் பார்க்க முடியாதோ, எதனால் கண்களைப் பார்க்கிறானோ, அதையே பரம்பொருள் என்று அறிவாயாக; இந்த (மக்கள்) உபாஸிப்பதையல்ல.

சங்கரரின் உரை

(யத்) : யாதொன்று, (சக்ஷுஷா) கண்ணினால், மனத்தின் செயற்பாடோடு சேர்ந்து (ந பச்யதி) (உலகத்து மக்கள்) பார்ப்பதில்லையோ, (யேந) எதனால் (பச்யதி) (மனிதன் மனத்தின் செயற்பாடுகளைவிட வேறான கண்ணின் பார்வையையும்) அறிவின் ஒளியினாலே பார்க்கிறானோ, கவனிக்கிறானோ, முழுவதுமாகப் பரவுகிறானோ அதுவே பரம்பொருள் என்று முன் போலவே புரிந்து கொள்ள வேண்டும்.

மந்த்ரம் 8

यच्छ्रोत्रेण न शृणोति येन श्रोत्रमिदं श्रुतम् ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥

யச் ச்ரோத்ரேண ந ச்ருணோதி யேன ச்ரோத்ரமிதம் ச்ருதம் ।
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதமுபாஸதே ॥ 8

யாதொன்றை (ஒருவன்) காதினால் கேட்க முடியாதோ, ஆனால் எதனால் அவன் காதையும் கேட்டு அறிகிறானோ, அதைப் பரம்பொருள் என்று அறிவாயாக. இதன்றி இந்த (மக்கள்) தொழும் எதுவும் (பரம்பொருள்) இல்லை.

சங்கரரின் உரை

(யத் ச்ரோத்ரேண ந ச்ருணோதி;) எதை மனிதன் காதுகளால் கேட்கவில்லையோ, (அது பரம் பொருள்). (இந்தக் காதுகள்) திசைகளுக்குக் காவலான தெய்வத்தினால் பாதுகாக்கப் படுகின்றன; அவை ஆகாயத்தினால் உருவானவை; மனத்தின் தொழிலோடு இணைக்கப்பட்டவை. (யேன:) எந்த ஒளியின் மூலமாக (இதம் ச்ரோத்ரம் ச்ருதம்) (எல்லோரும்) நன்கு அறிந்த காதும் இயக்கப்படுகிறதோ, (தத்ஏவ) அதையே (பரம்பொருள் என்று அறிவாயாக) என்ற இது முதலானவை எல்லாம் முன் போல பொருள் கொள்ள வேண்டும்.

மந்த்ரம் 9

यत्प्राणेन न प्राणिति येन प्राणः प्रणीयते ।
तदेव ब्रह्म त्वं विद्धि नेदं यदिदमुपासते ॥

इति केनोपनिषदि प्रथमः कण्डः ॥

யத் ப்ராணேன ந ப்ரணிதி யேன ப்ராண: ப்ரணீயதே ।
ததேவ ப்ரஹ்ம த்வம் வித்தி நேதம் யதிதம் உபாஸதே ॥ 9

எதொன்றை ஒருவன் தன் நாசியினால் முகரவில்லையோ, ஆனால் எதனால் நாசியும் இயக்கப்படுகிறதோ, அதைப் பரம்பொருள் என்று அறிந்துகொள்; (இதனினும் வேறாக) எதை (மக்கள்) உபாஸிக்கிறார்களோ அது (பரம்பொருள் அன்று).

சங்கரரின் உரை

மண்ணினால் ஆன (நம் உடம்பிலுள்ள) நாசியில் உறையும் உயிர்மூச்சின் செயற்பாட்டினால் (யத்) யாதொன்று ஒருவனால் (ந ப்ராணிதி) சாதாரணமான மணத்தை போல் முகரப்பட வில்லையோ, அறியப்படவில்லையோ, (இதற்கு மாறாக) (யேன:) எந்த ஆத்மாவின் ஒளியினால், ப்ராண: - நுகரும் கருவியான நாசியானது மற்ற உலகத்துப் பொருட்களைப் போல விளக்கப்படுகிறதோ, (ப்ரணீயதே) அதனுடைய பொருளைக் குறித்து இயக்கப்படுகிறதோ. (அது பரம் பொருள்) என்பதெல்லாம் முன்போலவே புரிந்து கொள்ள வேண்டும்.

கேனோபநிஷத்தில் முதற் கண்டம் முடிந்தது.

இரண்டாவது கண்டம்

சங்கரரின் முன்னுரை

'நீயே ஆத்மா; அது கொள்ளப்படுவதும் இல்லை, தள்ளப்படுவதும் இல்லை. (இந்த இரண்டிற்கும்) அது அப்பாற் பட்டது. அதுவே பிரம்மம்'' என்ற நம்பிக்கையானது ஒரு சீடனிடம் உறுதியாக உண்டாக்கப்பட்டுவிட்ட பொழுது, அவன் ''என்னை நன்கு அறிந்து கொண்டேன்; நானே பிரம்மம் என்று எனக்குத் தெரிந்து விட்டது'' என்ற முடிவிற்கு உடனே வந்து விடக் கூடாது என்று எண்ணிய ஆசிரியர், அந்த எண்ணத்தைச் சீடனிடமிருந்து போக்குவதற்காக, ''நீ அப்படி நினைத்தால்'' (யதி மன்யஸே) என்று சொல்லத் தொடங்குகிறார்.

கேள்வி : ''நான் நன்றாகத் தெரிந்து கொண்டேன்'' என்ற உறுதியான எண்ணம் உங்களுக்கு உடன்பாடுதானே?

பதில் : உண்மை; (அப்படிப்பட்ட) உறுதியானதொரு நம்பிக்கை (எனக்கு) உடன்பாடுதான். ஆனால், ''நான் நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டேன்'' என்ற இது போல் (அறிவினால்) அறியக்கூடிய பொருள்தான் முழுமையாக அறியக் கூடியதாகும். உதாரணமாக, தீப்பிடித்து எரியக் கூடிய பொருள் அத்தீயினால் எரிக்கப்படக் கூடியதாகிறது; ஆனால் அந்நெருப்பே (நெருப்பால்) எரிக்கப்பட முடியாது. எல்லா உபநிஷத்துக் களிலும் நிச்சயிக்கப்பட்ட கருத்து என்ன என்றால், அறிவது (என்ற காரியத்தைச் செய்கின்ற) ஒவ்வொருவருடைய சொந்த ஆத்மாவே பரம்பொருள் என்பதுதான். இங்கேயும், இதே உண்மைதான். கேள்விகளுக்குப் பதில் சொல்லும் முறையில் ''அது செவிக்கும் செவியாகும்'' என்று நிலை நாட்டப் பெற்றிருக் கிறது. (கேனோபநிஷத் : I - 2) இதுவே மேலும் குறிப்பாக ''எது வாக்கினால் பேசப்பட முடியாததோ'' (I - 5) என்ற வாக்கியத் திலே அழுத்தமாகக் கூறப்பட்டிருக்கிறது. இன்னும், பிரம்ம

ஞானிகளுடைய (மெய்யுணர்ந்தவர்களுடைய) மரபு வழி வந்த உறுதியான முடிவுகள் ''அந்த (பிரம்மம் நமக்குத்) தெரிந்த வற்றினின்று வேறானது; (நமக்குத்) தெரியாதவற்றினின்றும் மேலானது'' (I-4) என்ற வேதவாக்கியத்தில் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன.

இப்படி விளக்கப்பட்ட இந்த கருத்து பின்வருமாறு (உபநிஷத்தினால்) முடிவு செய்யப்படவும் போகிறது. ''நன்றாக அதைப்பற்றித் தெரிந்தவருக்குத் தெரியாது; (அதைப் பற்றித்) தெரியாதவருக்குத் தெரிந்திருக்கும்'' (II - 3). எனவே, ''நான் நன்கு பிரம்மத்தை அறிவேன்'' என்ற சீடனின் எண்ணம் மறுக்கப் படவேண்டும் என்பது முறையானதே. அறிபவன் அறிபவனா லேயே அறியப்பட முடியாது அல்லவா? எரிக்கும் நெருப்பு தன்னையே எரித்துக் கொள்ளாதல்லவா? பிரம்மத்தைவிட வேறொரு அறிபவன் கிடையாது. அப்படி ஒன்று இருந்தா லல்லவா அறியப்படும் பொருளாகப் பிரம்மம் இருக்கும்? அத்தகைய வேறொரு அறிபவன் கிடையாது என்று, பின்வரும் வேத வாக்கியம் மறுக்கிறது: ''இந்த (அறிகின்ற பிரம்மத்தைத் தவிர) வேறொரு அறிபவன் கிடையாது'' (பிருஹதாரண்யக உபநிஷத், III - 8.11). எனவே, ''நான் பரம்பொருளை (பிரம்மத்தை) நன்றாகவே அறிவேன்'' என்ற உறுதியான நம்பிக்கை பொய்யாகும். இதனால், ''நீ இப்படி நினைப்பா யானால்'' என்பது முதலியவற்றை ஆசிரியர் சரியான காரணத் தோடுதான் சொல்லியிருக்கிறார்.

மந்த்ரம் 1

यदि मन्यसे सुवेदेति दहरमेवापि
नूनं त्वं वेत्थ ब्रह्मणो रूपम् ।
यदस्य त्वं यदस्य देवेषु अथ नु
मीमाꣳस्यमेव ते मन्ये विदितम् ॥

யதி மன்யஸே ஸுவேதேதி தஹரமேவாபி
நூநம் த்வம் வேத்த ப்ரஹ்மணோ ரூபம்।
யதஸ்ய த்வம் யதஸ்ய தேவேஷு அத நு
மீமாம்ஸ்யமேவ தே மன்யே விதிதம்॥ 1

நன்றாகவே முழுவதும் பரம்பொருளைத் தெரிந்து கொண்டு விட்டேன் என்று நீ எண்ணுவாயானால், நீ உனக்குள் ளிருக்கும் பரம்பொருளைப் பற்றி மிகவும் கொஞ்சமாகத்தான் தெரிந்துகொண்டிருக்கிறாய் என்பது நிச்சயம். தேவர்களுக் குள்ளும் இருக்கும் அதை நீ கொஞ்சம்தான் அறிவாய். எனவே, பரம்பொருள் உன்னால் இன்னும் ஆராயப்பட வேண்டியிருக் கிறது.

சங்கரரின் உரை

(யதி ஸுவேத இதி) (நான் பிரம்மத்தை) நன்றாகவே அறிவேன்'' என்று (யதிமன்யஸே) நீ எண்ணுவாயானால் என்பது பொருள். ஒரு பொருள் அறிவதற்குக் கடினமாக இருந்தாலும் அறிவுத்திறன் உடையவனும் குற்றங்குறைகளற்ற வனுமான ஒருவன் ஏதாவதொரு சமயத்தில் அதை அறிந்து கொள்ளக் கூடும். (மெய்யறிவில்லாத) வேறொருவனுக்கு (அது முடியாமலிருக்கலாம்). ஆதலால், ஆசிரியர் சிறிது ஐயப்பாட்டு டனேயே ''நீ நினைப்பாயானால்'' என்றெல்லாம் சொல்கிறார். இது ஏற்கனவே தெரிந்த செய்தியாகும். ''கண்ணில் பார்க்கப் படுகின்ற இந்தப் புருஷன் ஆத்மா'' என்று பிரஜாபதி கூறி, பின் ''அது மரணமில்லாதது, அச்சமில்லாதது; அதுவே பிரம்மம்''. (சாந்தோக்ய உபநிஷத் VIII - 7.4) என்று தெரிவித்த பொழுது, விரோசனன் அவனுடைய இயற்கையான குறைகளின் காரண மாக, (பிரஜாபதி) சொன்னதற்கு நேர்மாறாக, (ஆத்மாவிற்கு வேறான) உடலையே ஆத்மா என்று எடுத்துக் கொண்டான். இத்தனைக்கும், அவன் (ஆசிரியரான) பிரஜாபதிக்கு மகன்; அறிவாளி; அஸுரர்களுக்குத் தலைவன்.

இதே போல், தேவர்களுக்குத் தலைவனான இந்த்ரன், ஒரு தடவை, இரண்டு தடவை, மூன்று தடவை பிரஜாபதி எடுத்துச் சொன்ன பொழுதும், அதைப் புரிந்து கொள்ள முடியாமல், நான்காவது தடவையாக (பிரஜாபதி சொன்ன பொழுது), முதலிலிருந்தே அவர் சொல்லிக் கொண்டு வந்த அதே பிரம்மத்தை நன்கு உணர்ந்தான். (ஏனெனில்) அப்பொழுது அவனுக்கிருந்த குற்றங்குறைகள் நீங்கியிருந்தன. (சாந்தோக்ய உபநிஷத் VIII - 7.12).

உலக நடை முறையிலும் கூட இது போன்று நடக்கிறதைப் பார்க்கிறோம். ஒரே ஆசிரியரிடம் பாடம் கேட்கும் மாணவர் களில் ஒருவன் சரியாகப் புரிந்து கொள்கிறான்; ஒருவன் தவறாகப் புரிந்து கொள்கிறான்; ஒருவன் நேர் எதிராகப் புரிந்து கொள்கிறான்; ஒருவன் ஒன்றையுமே புரிந்து கொள்வதில்லை. (அப்படியிருக்க), புலன்களுக்கு அப்பாற்பட்ட ஆத்மா வினுடைய இயல்பைப் பற்றிய (அறிவைப்பற்றிச்) சொல்ல வேண்டுமா? இந்த விஷயத்தில், எல்லாத் தர்க்க வாதிகளும், அவர்கள் (ஆத்மா என்ற ஒன்று இருப்பதாக நம்பினாலும் நம்பா விட்டாலும், அது குறித்துத்) தவறான எண்ணங்களைக் கொண்டிருக்கிறார்கள். ஆகையினால், ''பிரம்மம் (என்னால்) அறியப்பட்டுவிட்டது'' என்ற சொல்லானது உறுதியான முடிவாக (ஒருவனால்) உரைக்கப்பட்டாலும், தவறான எண்ணங்களைப் பலர் கொண்டிருப்பதைக் காணும் பொழுது ''இப்படி நினைப்பா யேயானால்'' என்பது போன்ற ஆசிரியரின் எச்சரிக்கையான சொற்கள் மிகவும் பொருத்தமாகின்றன.

(ப்ரஹ்மண:) பிரம்மத்தினுடைய (தஹரம் ரூபம் ஏவ அபி) மிகக் குறைந்த வடிவத்தைத்தான் (நூநம்) நிச்சயமாக (த்வம் வேத்த) நீ அறிவாய். (பிரம்மத்தைப் பற்றி மிகச் சிறிய வடிவத்தைத்தான் நீ அறிந்து கொண்டிருக்கிறாய் என்பது வாக்கிய அமைப்பு).

கேள்வி : (அப்படியானால்) பிரம்மத்திற்கு, பெரியது, சிறியது என்று பல வடிவங்கள் உண்டா? ''மிகச் சிறிய வடிவைத்தான்'' என்று கூறுவதற்கு அதுதான் காரணமா?

பதில் : அப்படித்தான். உருவம், பெயர் என்ற சூழ்நிலைத் தடைகளால் பிரம்மத்திற்குப் பல வடிவங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் (இவை) அதன் (உண்மையான) நிலையல்ல. அதன் உண்மை நிலையில் வடிவங்களும், அதைப்பற்றிய எந்தப் பேச்சும் சேர்ந்தே மறுக்கப்படுகின்றன. ''யாதொன்று, ஒலி, தொட்டுணர்ச்சி, உருவம், அழிவு என்பது இல்லாமல், இதே போன்று, எது சுவையற்று மணமற்று என்றுமுளதாக (விளங்குகின்றதோ அது பிரம்மம்)'' என்று வேதம் கூறுகிறது. (கட உபநிஷத் I - 3.15); ந்ருஸிம்ஹதாபினீ உபநிஷத், 9; முக்திகோபநிஷத் II.72).

கேள்வி : எந்த குணத்தினாலே ஒரு பொருள் நிச்சயிக்கப்படுகிறதோ அது அதனுடைய உண்மை இயல்பாகும் என்பது தானே சரி? எனவே, எந்த ஒரு தன்மை பிரம்மத்திற்கு இருப்பதாக அறியப்படுகிறதோ அதுதான் அதனுடைய மெய்யான இயல்பு ஆகும். ஆகவே, மண் முதலிய (ஐந்து மூல பௌதிகப் பொருள்களில் ஒன்றிற்கும்) அறிவு குணமாக இருக்க முடியாது என்பதாலும், அவற்றின் மாறுதலால் ஏற்பட்ட உடல் முதலியவற்றின் (குணமாகவும்) அது இருக்க முடியாது என்பதாலும், காது முதலிய (புலன்களில் யாதொன்றிற்கும்), (மனது, புத்தி முதலிய) அந்தக்கரணத்திற்கும் அது குணமாகாது என்பதாலும், அது பிரம்மத்தின் இயல்பாகத்தான் இருக்க முடியும். எனவே, பிரம்மம் அறிவு என்ற (அதன் தனித்தன்மையினால்) விளக்கப்படுகிறது. இதனால்தான், ''அறிவு, ஆனந்தம் என்பதே பிரம்மம்'' (பிருஹதாரண்யக உபநிஷத் (III - 9.28) ''(அது) தூய அறிவேயாகும்''. (பிருஹதாரண்யக உபநிஷத் (II - 4.12), என்றும் ''பிரம்மம் உண்மையாக இருப்பது, அறிவு,

முடிவற்றது''. (தைத்திரீய உபநிஷத் (II-1.1) ''பிரம்மம் தூய உணர்வு'' (ஐதரேய உபநிஷத், (V - 3) என்றும், வேதங்களில் பிரம்மத்தின் இயல்பானது நிச்சயிக்கப்பட்டிருக்கிறது.

பதில் : உண்மையில் அப்படித்தான். இருப்பினும், (பிரம்மத்தி னுடைய சொந்த இயல்பாக இவை குறிப்பிடப்படவில்லை, மனது, உடல், புலன்கள் என்ற இந்தத் தடைகளைக் கருத்தில் கொண்டு, அறிவு முதலிய சொற்களால் அது கூறப்பட்டிருக் கின்றது). உடல் முதலியவை விரிவு, சுருக்கம், ஊனம் முதலியனவற்றை அடையும்போதும், அல்லது முழுவதுமே அழியும்போதும், உள்ளிருக்கும் (பிரம்மமும்) அவற்றை ஒட்டி (இந்த மாறுதல்களை அடைவது போல் தோன்றுவதும்) இதற்குக் காரணம். உண்மையில் அவ்வாறில்லை. உண்மை என்ன வென்றால், ''நன்றாகத் தெரிந்தவனுக்கு அது தெரிய வில்லை, தெரியாதவனுக்கு அது தெரிகிறது'' (கேன உபநிஷத், II - 3) என்பதுதான்.

'யத் அஸ்ய' என்ற சொற்களை, அவற்றிற்கு முன்னால் 'ப்ரஹ்மண: ரூபம்' (பிரம்மத்தினுடைய வடிவம்) என்ற சொற் களோடு சேர்த்துப் பொருள் (கொள்ள வேண்டும்). (''யாதொன்று பிரம்மத்தினுடைய அம்சமோ அது'' என்று பொருளேற்படும்).

மனித உடல் முதலிய உருவத்தினால் கட்டுப்படுத்தப்பட்ட பிரம்மத்தின் வடிவத்தைப்பற்றி நீ வெகு சிறிதுதான் அறிவாய் என்பதுமட்டுமல்ல; (தேவேஷு வேத்த:) தேவர்களுக்குள்ளும் கூட அது இருப்பதாக நீ அறிந்து வைத்திருக்கும் சில தெய்வீக மான அம்சங்களிலே கட்டுப்பட்டுக் காணப்படும் பிரம்மத்தைப் பற்றியும் நீ அறிந்ததும் வெகு சிறிதுதான். இப்படித்தான் நான் நினைக்கிறேன். மானுட இயல்போடு காணப்படுவ தானாலும், தேவதைகளினிடையே ஆனாலும், அது (பிரம்மம்) தனது குறைவுபட்ட தோற்றத்தினின்றும் விடுபடுவதில்லை. ஏனெனில்,

அது (வடிவம் முதலிய) வட்டத்திற்குள் சிக்கி கட்டுப்பாடு களினால் தடைபட்டிருக்கிறது.

உட்கருத்து என்னவென்றால், வேற்றுமைகள் அற்றதும், தன்னைத்தவிர இரண்டாவது இல்லாமல் ஒன்றாக இருப்பதும், பெரியது (பூமா) என்று பெயர் பெற்றதும், நித்தியமானதுமான பிரம்மம் (ஓர் உலகத்துப் பொருள் அறியப்படுவது போல முழுவதும் அறியப்பட முடியாதது.) இந்தக் காரணத்தால், (மன்யே) நினைக்கிறேன், (தே) உனக்கு, இந்தத் தருணத்திலும்கூட, பிரம்மம் என்பது (மீமாம்ஸ்யம் ஏவ) ஆராய்ந்து பார்க்க வேண்டியதாக இருக்கிறது.

இவ்வாறு ஆசிரியரால் உபதேசிக்கப்பட்ட சீடன் ஒரு- முனைப்பட்ட மனத்தோடு தனிமையில் அமர்ந்து ஆசிரியரால் மரபுவழியை ஒட்டி உபதேசிக்கப்பட்ட வாக்குகளை அவற்றின் பொருளோடு ஆராய்ந்து, பகுத்தறிவினால் உறுதி செய்து கொண்டு, அதைத் தன் சொந்த அனுபவமாக்கி, (மறுபடியும்) ஆசிரியரை அணுகி (''மன்யே (பிரம்மம்) விதிதம்) மெய்ப் பொருள் அறியப்பட்டது என்று இப்பொழுது நினைக்கிறேன் என்று சொன்னான்.

(ஆசிரியர்) ''எவ்வாறு (பிரம்மம் உன்னால் அறியப் பட்டது?)'' என்று கேட்கிறார். (சீடன்) ''கேளுங்கள்; (சொல் கிறேன்)'' என்றான்.

மந்த்ரம் 2

नाहं मन्ये सुवेदेति नो न वेदेति वेद च ।
यो नस्तद्वेद तद्वेद नो न वेदेति वेद च ।।

நாஹம் மன்யே ஸுவேதேதி நோ ந வேதேதி வேதச ।
யோ நஸ்தத்வேத தத்வேத நோ ந வேதேதி வேத ச ।। 2

''(பிரம்மத்தை) நான் நன்கு அறிந்து கொண்டேன்'' என்று நினைக்கவில்லை. நான் அறிந்து கொள்ளவில்லை என்பதுமல்ல. நான் அறிந்து கொண்டேன்; ஆனாலும் அறிந்து கொள்ளவில்லை (என்று எண்ணுகிறேன்). நம்மில் யார் ஒருவன் ''நான் (பிரம்மத்தை) அறிந்து கொள்ளவில்லை என்பதல்ல. நான் அறிவேன், இருந்தும் நான் அறியவில்லை'' என்ற உபதேசங் களைப் புரிந்து கொள்கிறானோ, அவன் அதை (பிரம்மத்தை) அறிவான்.''

சங்கரரின் உரை

(ந அஹம் மன்யே ஸு வேத இதி) ''நான் பிரம்மத்தை முழுதும் அறிந்து கொண்டுவிட்டேன்'' என்று நான் எண்ண வில்லை. ''அப்படியானால் பிரம்மம் உன்னால் நிச்சயமாக அறியப்படவில்லை போலும்'' என்று (ஆசிரியரால்) சொல்லப் பட்ட பொழுது, (சீடன்) பதில் சொல்லுகிறான். (நோ ந வேத இதி, வேத ச) நான் பிரம்மத்தை அறியவில்லை என்பதில்லை. நான் அறியவும் அறிவேன். (வேத ச) என்ற சொற்களில் 'ச' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதால் (ந வேத ச) : நான் (பிரம்மத்தைத்) தெரிந்து கொண்டேன் என்பதும் இல்லை'' என்று பொருள் கொள்ள வேண்டும்.

(இப்படிச் சீடன் சொன்னபோது, ஆசிரியர் கேட்கிறார்). ''(பிரம்மத்தை) முழுதும் தெரிந்து கொண்டேன் என்று நான் எண்ணவில்லை'' என்றும் (அதே நேரத்தில்) ''நான் தெரிந்து கொள்ளவில்லை என்பதில்லை; நான் அறிவேன், ஆனால் அறியவும் இல்லை'' என்றும் கூறுவது (முன்னுக்குப்பின்) முரண்பாடாக இல்லையா? ''நான் நன்கு அறிவேன்'' என்று நீ எண்ணாவிட்டால், அப்போது ''நான் அறியவும் செய்வேன்'' என்று எப்படி நீ நினைக்க முடியும்? இன்னும், ''நான் நிச்சயமாக அறிவேன்'' என்று எண்ணுவாயானால், அப்பொழுது ''நான் நன்கு அறிவேன்'' என்று நீ ஏன் நினைக்கவில்லை?

''ஒரு பொருள் எதனால் நன்கு அறியப்படுகிறதோ அதே அறிவினால் நன்கு அறியப்படவில்லை என்பது முரண்பாடாகும். பிரம்மம் இங்கு ஐயப்பாட்டிற்குரியதாகவோ, அறிதற்குரியதாகவோ உள்ள ஒரு பொருளாகிறது என்று நீ ஒருவேளை நினைத்தால், பிரம்மத்தைக் குறித்து அது ஐயத்திற் குரியது என்றோ, தவறான அறிவிற்குரியது என்றோ நிலை நாட்டப் பார்ப்பது இயலாத காரியம். ஐயப்பாடும், பொய்யறிவும் எவ்விடத்திலும் தீங்கை விளைவிப்பவை என்பது உலகறிந்தது.'' மேற்சொன்னவாறு ஆசிரியரால் நம்பிக்கை தளருமாறு செய்யப் பட்ட போதிலும், சீடன் தளரவில்லை. மேலும் பிரம்மத்தை பற்றிய தனது அறிவில் உறுதியான நம்பிக்கையை வெளிப் படுத்தி, ''அது தெரிந்ததற்கு எல்லாம் வேறானது; தெரியாத தற்கும் மேலானது'' என்று ஆசிரியரால் சொல்லப்பட்ட வேத மரபின் வலிமையினாலும், சொந்த அறிவின் பலத்தினாலும், அனுபவத்தின் பலத்தினாலும் தைரியமாகச் (சீடன்) கூறினான். (எப்படிப் பேசினான்) என்று இப்போது விளக்கப்படுகிறது.

''(ந:) நம்மிடையே (அதாவது) கூடவே கற்கும் மாணவர் களிடையே யார் ஒருவன் நான் சொன்னதை சரியாக (வேத) அறிந்து கொண்டானோ, அவன் அந்த பரம் பொருளை அறிந்த வனாவான்'' அப்படி ஆசிரியர் சொன்னது என்ன?

''நோ ந வேத இதி வேத ச''

''நான் அறியவில்லை என்பதல்ல; நான் அறிவேன், அதே சமயம் நான் அறியவில்லை'' என்பதுதான் அவர் கூறியது ''(பரம்பொருள்) தெரிந்தவற்றிற்கு வேறானது; தெரியாத வற்றுக்கு மேலானது'' என்ற ஆசிரியருடைய கருத்தைத் தனது சொந்த அறிவு, அநுபவம் இவற்றால் நன்கு உறுதி செய்து, ''நான அறியவில்லை; எனினும் அறிந்து கொண்டேன்'' என்று மாணவன் சொன்னான். ஆசிரியருடைய கருத்துக்கு இணங்க வும், அறிவாற்றல் குறைந்தவர்கள் தவறாகப் புரிந்து கொள்ளக்

கூடிய வாய்ப்பைத் தடுப்பதற்காகவும் சீடன் இவ்வாறு சொல்கிறான்.

எனவே ''எவன் அறியவில்லையோ அவன் அறிந்து கொண்டான்'' என்று சீடன் உறுதிபடச் சொன்னது பொருத்த மாயிற்று.

மந்த்ரம் 3

சங்கரரின் முன்னுரை

குரு, சீடன் இவர்களுடைய உரையாடலிலிருந்து விலகி, உபநிஷத் தன்னுடைய வாக்காகவே, ('யஸ்ய - அமதம்) (எவனுக்குத் தெரியவில்லையோ) என்பது முதலிய சொற் களினால், அந்த உரையாடலின் மூலம் பெறப்பட்ட முழு முடிவையும் (இப்பொழுது) தெரிவிக்கிறது.

மந்த்ரம் 3

यस्यामतं तस्य मतं मतं यस्य न वेद सः ।
अविज्ञातं विजानतां विज्ञातं अविजानताम् ॥

யஸ்யாமதம் தஸ்ய மதம் மதம் யஸ்ய ந வேத ஸ: ।
அவிக்ஞாதம் விஜானதாம் விக்ஞாதம் அவிஜானதாம் ॥ 3

எவனுக்குத் தெரியவில்லையோ அவனுக்குத் தெரிந்தது. தெரிந்தவனுக்கு அது தெரியவில்லை. நன்கு தெரிந்தவர்களுக்கு அது தெரியவில்லை; எவருக்குத் தெரியவில்லையோ அவர் களுக்குத் தெரிந்தது.

சங்கரரின் உரை

(யஸ்ய) எவருக்கு (அமதம்) (பிரம்மம்) அறியப்பட வில்லை என்பது உறுதியான எண்ணமோ, (தஸ்ய:) அப்படிப்

பட்டவருக்கு; (மதம்) நன்றாகத் தெரிந்து விட்டது என்பது (இங்கு கருத்து). மேலும், (யஸ்ய) எவருக்கு (மதம்) பிரம்மத்தைப் பற்றித் தெரிந்துவிட்டது என்ற உறுதியான எண்ணம் இருக்கிறதோ (ஸ:) அவர், (ந வேத) (உண்மையில் அதை) அறியவில்லை.

மேலே கூறப்பட்ட (உண்மை) தெரிந்த மனிதரும், அவ்வாறு தெரிந்து கொள்ளாத மனிதரும் கொண்டிருக்கும் இந்த இரண்டு கருத்துக்களும் இன்னும் தெளிவாக வற்புறுத்தப்படு கின்றன. (அவிக்ஞாதம் விஜானதாம்) (என்ற இரண்டாவது வரியில்) (விஜானதாம்) பிரம்மத்தை (உள்ளது உள்ளபடி) தெரிந்தவர்களுக்கு அது (அவிக்ஞாதம்) தெரியவில்லை. அதாவது, பிரம்மத்தை முற்றும் தெரிந்தவர்களுக்கு (அது தெரியவில்லை); (தெரிந்துவிட்டதாக அவர்கள் கூறுவதில்லை).

(அவிஜானதாம்) யார் (பிரம்மத்தை) தெரிந்து கொள்ள வில்லையோ அவர்களுக்கு (விக்ஞாதம்) பிரம்மம் தெரிகிறது. யாருக்கு முழு மெய்யுணர்வு உண்டாகவில்லையோ (அவர் களுக்கு), அதாவது, மெய்ப்பொருளான ஆத்மாவை புலன்கள், மனது, புத்தி இவற்றுடன் ஒன்றாக நினைக்கிறார்களோ, (அவர் களுக்கு), எவருடைய அறிவு மிகவும் பின் தங்கியதோ, அவர்களுக்கு ''பிரம்மம் எங்களால் அறியப்பட்டது'' என்ற எண்ணம் உறுதியாக இருக்கிறது. உண்மை தெரியாத போது, தெரிந்துவிட்டதாக எண்ணுகிறவர்கள்தான் உண்மையில் தெரியாதவர்களாகும். மெய்ப்பொருளாகிய பிரம்மத்தையும் (உடல், புலன்கள், புத்தி முதலிய) சேர்க்கைகளிருந்து பிரித்து அறியாமல், புலன்கள், மனது, புத்தி இவைகளையே மெய்ப் பொருளான ஆத்மாவாக எண்ணியிருக்கிறவர்களுக்கு, மனது (உடல் முதலிய) சேர்க்கைகள் கண்ணுக்குத் தெரிவதால், பிரம்மம் எங்களால் அறியப்பட்டது என்று நினைத்துவிடுகிற தவறு ஏற்படுவது இயற்கையாகும். எனவே, (மேற்சொன்ன

இந்த) எண்ணத்தை எதிராளியின் நிலையாக ''யாருக்குத் தெரிய வில்லையோ அவர்களுக்குத் தெரிகிறது'' என்று வேதம் காட்டுகிறது (அல்லது 3-ம் சுலோகத்தில் இரண்டாவது அடியில் 'அவிக்ஞாதம்' முதலிய சொற்கள், (முதலடிக்கு) ஆதாரமான ஒரு காரணமாகக் கூறப்பட்டது என்றும் வைத்துக் கொள்ளலாம்). ''தெரியவில்லை'' என்று ஒருவர் ஒப்புக் கொள்வதினாலேயே, உலகத்து மற்ற ஏனைய பொருள்களைப் போல பிரம்மம் என்ற மெய்ப்பொருள் அறிவினால் சுட்டி அறியக் கூடிய பொருள் அன்று என்று தெரிந்து கொண்டார் என்பது பெறப்படுகிறது.

மந்த்ரம் 4

சங்கரரின் முன்னுரை

இதுவரை ''யார் பிரம்மம் தெரிந்ததாக நினைக்கிறார் களோ அவர்களுக்குத் தெரியவில்லை'' என்பது உறுதி செய்யப் பட்டது.

(இதெல்லாம் சரிதான்). ஆனால் பிரம்மம் முழுதும் அறியப்படாமலே போய்விட்டால், அப்பொழுது சாதாரண மனிதர்களுக்கும், பிரம்மத்தை அறிந்த (ஞானிகளுக்கும்) வித்தியாசம் இல்லாமல் போய்விடும். மேலும், ''யாருக்குத் தெரிந்ததோ அவர்களுக்குத் தெரியவில்லை'' என்பது முரண் பாடான கூற்றாகும். அப்படியானால், முழுவதும் அறியப்பட்ட தாக பிரம்மம் எப்பொழுது ஆகும்? இதை விளக்குவதற்காக, உபநிஷத் மேலும் கூறுகிறது.

प्रतिबोधविदितं मतममृतत्वं हि विन्दते ।
आत्मना विन्दते वीर्यं विद्यया विन्दतेऽमृतम् ॥

ப்ரதிபோத விதிதம் மதம் அம்ருதத்வம் ஹி விந்ததே ।
ஆத்மனா விந்ததே வீர்யம் வித்யயா விந்ததே அம்ருதம் ॥ 4

(பிரம்மம்) ஒவ்வொரு உணர்விலும் (இருப்பதை) அறிந்தால், அது அறியப்பட்டதாகிறது. அதன் மூலம் இறவாமையை ஒருவன் அடைகிறான். ஒருவன் தன்னுடைய ஆத்மாவின் மூலம் பலத்தை அடைகிறான். மெய்யறிவினால் இறவாமை என்ற (முக்தியை) அடைகிறான்.

சங்கரரின் உரை

(ப்ரதிபோத விதிதம்) ஒவ்வொரு உணர்விலும் (பிரம்மம்) இருப்பது அறியப்பட்டது. 'போதம்'' என்ற சொல்லினால், புத்தியின் மூலம் பெறப்பட்ட அறிவுகள் குறிக்கப்படுகின்றன. (புத்தியில் எழும்) எல்லா அறிவுகளையும் தன்னால் அறியப் படும் பொருளாக கொண்ட ஆத்மா என்ற மெய்ப்பொருள் இந்த எல்லா எண்ணங்களிலும் ஊடுருவித் தோன்றி அறியப்படுகிறது. எல்லா அறிவுகளுக்கும் சாக்ஷியாக இருப்பதாலும், தானே அறிவுச் சக்தியாக இருப்பதாலும், இத்தகைய அறிவுகளில் எல்லாம், அந்த அறிவுகளினாலேயே ஆத்மா பொதுவாகக் காண்பிக்கப்படுகிறது. அதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேறு வழி கிடையாது.

எனவே அறிவுகளின் உள்ளார்ந்த மெய்ப்பொருளாக, (சாக்ஷியாக) பிரம்மம் தெளியப்படும் பொழுது, அது (மதம்) நன்றாய் அறியப்பட்டதாகிறது என்பது இங்கு சொல்லப்பட்ட கருத்து. அனைத்து அறிவுகளுக்கும் சாக்ஷியாகப் பிரம்மத்தை ஏற்பதனால்தான், அது இயல்பிலேயே ஒரு பொதுவான சாக்ஷி என்பதும், அது வளர்ச்சிக்கும் தேய்விற்கும் உட்பட்டதன்று என்பதும், நித்தியமானது, தூய தன்மையது, (தன்னைத்தவிர வேறொன்றைச்) சாராதது, (வேறுபடும்) எல்லாப் பொருள்களிலும் தான் ஒன்றாய் நிற்பது என்பதெல்லாம் உறுதி செய்யப் பட்டதாகும். பானை, குகை முதலியவற்றில் இருக்கும் ஆகாயம் தன் தன்மையிலிருந்து மாறாமல் எப்படி அவற்றில் எல்லாம் ஒரே தன்மையதாய் இருக்கிறதோ, அது போலவே (ஆத்மாவும்

எங்கும் எதிலும் ஒரே சீரான தன்மையதாய் விளங்குகிறது). ''அது தெரிந்ததினின்றும் வேறானது, இன்னும், தெரியாததற்கும் அப்பாற்பட்டது'' (கேனோபநிஷத் I - 4), என்ற இந்த வேத மரபின் வாக்கியத்தினுடைய கருத்து. இங்கு இவ்வாறு தெளிவாக முடிவு செய்யப்பட்டதாகிறது. (இதற்கு ஆதாரமாக) வேறொரு வேத வாக்கியமும் இருக்கிறது: ''ஆத்மா பார்வை யையும் பார்ப்பவன், (காதால்) கேட்பதைக் கேட்பவன், நினைவை நினைப்பவன், அறிவை அறிபவன்'' (பிருஹதாரண்யக உபநிஷத் III - 4.2).

(மேற்சொன்ன இதன்) விளக்கத்தை வேறு விதமாகவும் சிலர் சொல்லக்கூடும். அறிகின்றது என்ற அதன் தன்மை மூலம் அந்த ஆத்மா ஒவ்வொரு அறிவிலும் விளங்குவதை ஊகிக்கலாம்.

(மரம் அசைவதைப் பார்த்து) மரத்தை அசைப்பது காற்றுத்தான் என்று (ஊகித்து) அறிவதைப் போலத்தான் இது. (இந்த விளக்கத்தின்படி) ஆத்மா (என்ற மெய்ப்பொருள்) அறியும் ஆற்றலைக் குணமாக உடைய ஒரு பொருள் என்று ஆகின்றதே ஒழிய அதுவே அறிவு ஆகாது. அதன் (குணமான) அறிவும் (ஒரு சமயத்தில்) தோன்றி (மற்றொரு சமயத்தில்) அழிந்து போகிறது (என்று ஒப்புக்கொள்ள வேண்டி வரும்). எப்பொழுது அறிவு உண்டாகிறதோ அந்த அறியும் செயலினால் ஆத்மா மாறுதலை அடைகிறது. எப்பொழுது அந்த அறிவு அழிகின்றதோ அப்பொழுது, ஆத்மா தன் குணத்தை இழந்து அறிவற்ற ஒரு பொருளாகிவிடும். இவ்வாறு ஏற்படுமானால் ஆத்மா மாறுதலடையக் கூடியது என்றும், பல பகுதிகளை உடையது என்றும், அழியக்கூடியது என்றும், மாசுள்ளது என்றும் இதுபோன்ற பல குற்றங்குறைகள் (அதில்) தவிர்க்க முடியாத தாகி விடும். கணாதர் என்ற ஓர் அறிஞரின் கொள்கையின்படி ''ஆத்மாவுடன் மனது சேருவதால் அறிவு உண்டாகிறது. அது, ஆத்மாவில் பிரிக்கமுடியாதபடி கலக்கிறது. அதன் காரணமாக,

அறியுந்தன்மையை ஆத்மா அடைகிறது. ஆனால், அது மாறுதலடையக்கூடியதன்று. நிறத்தோடு இணைபிரியாது சேர்ந்த ஒரு பானையைப் போன்று அது ஆகின்றது''. ஆனால் இது தவறான கொள்கை.

(கணாதருடைய) மேற்சொன்ன இந்தக் கொள்கையின்படி கூட, ஆத்மா ஓர் அறிவற்ற ஜடப் பொருள் என்றுதான் பெறப்படும். இதனால், ''பிரம்மம் அறிவே உருவானது; ஆனந்தமானது'' (பிருஹதாரண்யக உபநிஷத், III - 9, 28.) ''பிரம்மம் அறிவே உருவானது'' (ஐதரேய உபநிஷத் V - 3) என்பது முதலான வேத வாக்கியங்களோடு இந்தக் கொள்கை முரண்படுகிறது. ஆத்மா பகுதிகளற்றதால் அதில் இடம், காலம் என்று ஒன்றும் கிடையாது. (கணாதர் கூறுவது உண்மையானால்) மனதும் ஆத்மாவோடு எப்பொழுதும் தொடர்புடையதாயி ருக்கும். இதன் விளைவாக (கடந்த கால) நினைவுகள் ஒரு பொழுது உண்டாகும், ஒரு பொழுது உண்டாகாது என்ற ஓர் ஒழுங்கு (நியதி) இல்லாமற் போய்விடும்.

மேலும், மனம் முதலிய பிறவற்றுடன் சேரும் தன்மை உடையது ஆத்மா என்றும் கருத வேண்டி வரும்.

இப்படிக் கூறுவது வேதத்துக்கும் அதையொட்டிய மற்ற புனித நூல்களுக்கும் பகுத்தறிவிற்கும் மாறுபாடாக இருக்கும். ஏனெனில் ''எதனுடனும் சேராத ஆத்மா ஒன்றையும் பற்றாது. (பிருஹதாரண்யக உபநிஷத், III, 9, 26), ''ஒன்றோடும் சேராத அது, எல்லாவற்றையும் தாங்குகிறது,'' (பகவத் கீதை : XIII, 14) என்ற வேதவாக்குகளும், அதன் வழிவந்த மெய்ந்நூல்களும் கூறுகின்றன. பகுத்தறிவின்படி பார்த்தாலும், குணங்களையுடைய ஒரு பொருள் தன் போலவே குணங்களையுடையதான, மற்றொரு பொருளோடு சேருகிறது. மாறுபட்ட குணங்களை யுடைய பொருளோடு அப்படிச் சேராது. இதனால் குணங்குறி களற்றதும், வேற்றுமைகளில்லாததும், உலகத்திலுள்ள மற்ற

எல்லாவற்றினின்றும் வேறுபட்ட இயல்புடையதுமான ஆத்மா, தன்னிலும் வேறான எந்த ஒன்றோடும் சேரும் என்பது பகுத்தறிவிற்கு விரோதமாகும். எனவே, உண்மையில் நித்திய மாயும் அறிவே உருவானதுமான ஆத்மாவே பிரம்மம் என்ற இந்தக் கருத்து, மனதில் பிறக்கும் எல்லா அறிவுகளையும் அறிகின்ற தன்மை ஆத்மாவிற்கு இருந்தால்தான் பெறப்படும். எனவே ''பிரதிபோதவிதிதம்'' என்ற சொற்றொடருக்கு நாம் (சங்கரர்) சொன்ன பொருள்தான் சரியானது.

''ப்ரதி-போத-விதிதம்'' என்ற சொற்றொடருக்கு ''ஆத்மா தன்னைத் தானே அறிந்து கொள்கிறது'' என்ற (பௌத்த மதத்தைச் சேர்ந்த விஞ்ஞான வாதிகளின்) விளக்கத்தை ஏற்றுக் கொண்டால், (அந்த விளக்கம்) புத்தியோடு ஆத்மா தன்னை ஒன்றுபடுத்திக் கொண்ட பொழுது (புத்தி முதலிய) வேற்றுமை கள் தோன்றுகின்ற சூழ்நிலையில், சாத்தியமானதுதான். அப்பொழுதுதான் (ஆத்மா) ''தன்னைத்தானே அறிகிறது'' முதலிய செயல்களெல்லாம் நிகழும். ''தன்னிடத்திலேயே தன்னைப் பார்க்கிறான்'' (பிருஹதாரண்யக உபநிஷத், IV - 4.23) என்றும், ''ஓ புருஷோத்தமனே! நீ உன்னையே உன்னுடைய ஆத்மாவாக பார்ப்பாயாக'' (பகவத் கீதை: X, 15) (என்றும் வாக்கியங்கள் இருப்பது இதற்கு ஆதாரம்).

ஆனால், புத்தி முதலியவற்றோடு கலக்காத ஆத்மா ஒன்றேயாக இருக்கும் நிலையில், தன்னைத்தானே அறிவது என்பதோ, மற்றொன்றினால் அறியப்படுவது என்பதோ நிகழாது. (ஆத்மா) தூய அறிவாகவே இருப்பதால், இன்னொரு அறிவினால் அறியப்படவேண்டிய தேவையும் இல்லை. ஒரு விளக்கு இன்னொரு விளக்கின் ஒளியினால் தெரியப்படுத்தப்பட வேண்டியதில்லை அல்லவா? அதுபோல தன்னைத்தானே அறிதல் என்ற பௌத்தரின் கொள்கை ஏற்கப்பட்டால், அப்பொழுது அறிவு கணத்துக்குக் கணம் தோன்றி மறையும் என்று சொல்ல வேண்டும்; அதனால், தனக்கென்று தனித்தன்மை

ஒன்று அதற்கு இல்லை என்றும் ஏற்படும். பின்வரும் வேத வாக்கியங்களுக்கு விரோதமுமாகும். ''அறியும் ஆத்மாவின் அறியும் தொழில் ஒரு போதும் நீங்காது. ஏனெனில், அது என்றும் உள்ளது''. (பிருஹதாரண்யக உபநிஷத் IV - 3, 30); ''நித்தியமானது, எங்கும் நிறைந்திருப்பது'' (முண்டக உபநிஷத், I. 1.6); ''பிறப்பில்லாத அந்தப் பெரிய ஆத்மா மூப்பில்லாதது, இறவாதது, என்றுமுள்ளது, அச்சமற்றது'' (பிருஹதாரண்யக உபநிஷத், IV - 4.25).

மற்றும் சிலர், 'பிரதி-போதம்' என்னும் சொல்லினால், காரணமின்றியே தற்செயலாகத் தோன்றும் அறிவுகள் கூறப்படு கின்றன என்று எண்ணுகிறார்கள். தூங்குகின்ற ஒரு மனிதனுக்கு (உண்டாகும் அநுபவங்களை) இதற்கு உதாரணமாகக் காட்டுகிறார்கள். இன்னும் வேறு சிலர், (பிரதி-போதம் என்னும் சொல்லினால்) ஒரு தடவை மட்டுமே தோன்றும் அறிவு குறிக்கப்படுகிறது என்று கருதுகிறார்கள்.

(இதற்கு விடை கூறுகிறோம்).

அந்த (அறிவு) காரணத்தோடு தோன்றுகிறதோ, காரண மின்றித் தோன்றுகிறதோ, ஒரே ஒரு தடவை தோன்றுகின்றதோ பல தடவைகள் தோன்றுகின்றதோ, அது நிச்சயமாக ப்ரதி-போதம் (அறிவின் ஒரு தோற்றம்) தான் (என்பதில் கருத்து வேறுபாடு இல்லை).

ஏனெனில், இறவாதநிலையை, தான் தானாகவேயிருக்கும் முக்தியை, ஒவ்வொரு அறிவிலும் தோன்றிக் கொண்டிருக்கும் 'ஆத்மாவை, உணர்ந்து மெய்யறிவினால் எவன் ஒருவன் அடை கிறானோ அதுவே 'அறிந்து கொண்டேன்' என்று அவன் சொல்வதன் கருத்து. (இவ்வாறு) உள்ளுறையும் ஆத்மா எல்லாவற்றையும் அறியும் பொருளாகக் கண்ட மெய்யறிவே முக்திக்குக் காரணமாகிறது. இறவாத முக்தி நிலை என்பதோ ஆத்மா அல்லாத வேறொன்றாக இருக்க முடியாது. இறவாமை

என்ற முக்தி நிலை ஆத்மாவின் சொந்தத் தன்மையாகவே இருப்பதால், அதற்கு வேறு காரணம் தேவையில்லை என்பது தான் உண்மை. அறியாமையினால், ஆத்மாவை அதல்லாத வேறொன்றாகப் பார்ப்பதுதான் மரணம் எனப்படுகிறது.

ஆத்மாவைப்பற்றிய மேற்சொன்ன உண்மையறிவினால் இறவாமை (என்ற முக்தி) எவ்வாறு அடையப்படுகிறது என்ற கேள்விக்கு இப்பொழுது விடை சொல்லப்படுகிறது. தன் சொந்த இயல்பான ஆத்மாவினால் ஆற்றலை அடைகிறான். செல்வம், நண்பர்கள், மாந்திரீகம், மருந்து, விரதம், யோகம் இவை மரணத்தை வெல்ல ஆற்றல் உடையவை அல்ல. ஏனெனில், இவை அழியக் கூடிய பொருட்களினால் வருகிறது. ஆனால், ஆத்மாவைப்பற்றிய மெய்யறிவினால் வரும் ஆற்றலோ ஆத்மாவின் மூலமாக மட்டுமே பெறப்படுகிறது; மற்ற எந்தப் பொருளிலிருந்தும் அன்று. ஆத்மாவைப்பற்றிய மெய்யறி வினால் வரும் ஆற்றல் வேறெந்த வெளிச் சாதனங்களையும் எதிர்பார்க்காததனால், அந்த ஆற்றலே மரணத்தை வெல்லக் கூடியது. இவ்வாறு ஆத்மாவை அறிந்த மெய்யறிவினால் வரும் ஆற்றலினால் ஒருவன் முக்தியை அடைகிறான். அதர்வ வேதத்தைச் சேர்ந்த (முண்டக உபநிஷத்தில்) ''இந்த ஆத்மா ஆற்றலில்லாத ஒருவனால் அடையப்படக் கூடியதன்று'' (III - 2.4) என்று கூறப்பட்டிருக்கிறது. எனவே, மெய்யறிவு தரும் ஆற்றலினால் மட்டுமே ஒருவன் முக்தி அடைகிறான்.

மந்த்ரம் 5

சங்கரரின் முன்னுரை

வாழ்க்கையில் பல துன்பங்களைச் சந்திக்கும் மனிதர்கள், விலங்குகள், ஆவிகள் என்ற எவ்வளவோ உயிர்க் கூட்டங்களில் அறியாமையின் காரணமாக, பிறப்பு, மூப்பு, சாவு, பிணி முதலியன ஏற்படுவது மிகவும் வருத்தம் தருவதுதான். இதனால் :

इह चेदवेदीदथ सत्यमस्ति
न चेदिहावेदीन्महती विनष्टिः ।
भूतेषु भूतेषु विचित्य धीराः
प्रेत्यास्माल्लोकादमृता भवन्ति ॥ ५ ॥

इति केनोपनिषदि द्वितीयः खण्डः ॥

இஹ சேதவேதீதத ஸத்யமஸ்தி
ந சேதிஹாவேதீன் - மஹதீ விநஷ்டி: ।
பூதேஷு பூதேஷு விசித்ய தீரா:
ப்ரேத்யாஸ்மால்லோகாத் அம்ருதா பவந்தி ॥ 5

இதி கேனோபநிஷதி த்விதீய: கண்ட: ॥

இங்கு மெய்யறிவு பெற்றால், அப்பொழுது உண்மை விளங்குகிறது. இங்கு மெய்யறிவு பெறாவிட்டால், அது பெரிய இழப்பாகும். மெய்யுணர்ந்த பெரியோர்கள், (மெய்ப்பொருளை) எல்லா உயிர்களிலும் கண்டு, உலகத்தைத் துறந்து இறவாமையை (முக்தியை) அடைகிறார்கள்.

சங்கரரின் உரை

வேதத்தின் கருத்தோடு இயைந்து செல்பவனும் ஆற்றலுள்ளவனுமான ஒருவன், முன்னர் சொன்ன இயல்புடையதும், முறையாக விளக்கப்பட்டதுமான ஆத்மாவை (இஹ) இங்கேயே (இந்தப் பிறவியிலேயே) அறிந்தால், (அத) அப்பொழுது, (அஸ்தி ஸத்யம்) உண்மை விளங்குகிறது; அதாவது இந்த மனித வாழ்விலேயே அழியாமை, (பிறந்த பயனை அடைதல்), பெருவாழ்வு, மெய்யறிவு என்பதான உறுதிப் பொருள்கள் அமைகின்றன. (இஹ) இங்கு, உயிர் வாழ்க்கையிருக்கும் போதே, ஒரு தகுதியுள்ள மனிதன் (ந அவேதீத் சேத்) மெய்யறிவு பெறவில்லையானால், அப்பொழுது, (மஹதீ) பெரிய, முடிவில்லாத

(விநஷ்டி:) அழிவு, அதாவது முடிவேயில்லாது தொடர்ந்து வரும் பிறவி, மூப்பு, மரணம் முதலிய இழப்புக்கள் ஏற்படும். எனவே, (தீரா:) மெய்யறிவு பெற்றவர்கள், நல்லது கெட்டது இவற்றை நன்கு அறிந்தவர்கள்; (விசித்ய) ஆத்மா என்ற ஒரே மெய்ப்பொருளை நன்கு உணர்ந்து, (பூதேஷுபூதேஷு) அசைகிற, அசையாத எல்லாப் பொருட்களிலும் (ப்ரேத்ய) 'நான்' 'எனது' என்னும் எண்ணங்களுக்கு இடமான, அறியாமை யால் ஆன உலகிலிருந்து விடுபட்டுத் திரும்பி, துறவு மேற் கொண்டு எல்லாப் பொருட்களையும் தன்னுயிர்போல் பார்க்கும் இரண்டற்ற அத்வைத நிலையை அடைந்து, (அம்ருதா: பவந்தி) இறவாமையை (முக்தியை), அடைகிறார்கள், பிரம்மமாகவே (மெய்ப்பொருளாகவே) ஆகிறார்கள் என்பது கருத்து. ''எவன் மேலான பிரம்மத்தை அறிகிறானோ அவன் பிரம்மமாகவே ஆகிறான்'' (முண்டக-உபநிஷத் III - 2.9) என்ற வேத வாக்கு இப்படித்தான் சொல்லுகிறது.

இத்துடன் கேனோபநிஷத்தில் இரண்டாவது கண்டம் முடிவுற்றது.

மூன்றாவது கண்டம்

சங்கரரின் முன்னுரை

''தெரிந்தவர்களுக்குத் தெரியவில்லை; தெரியாதவர்களுக்குத் தெரிந்தது'' (கேனோபநிஷத் : II - 3) என்ற வேத வாக்கியத்தைக் கேட்டுவிட்டு, மந்த புத்தியுள்ள சிலர் கீழ்க்கண்ட தவறான எண்ணத்தைக் கொண்டிருக்கக் கூடும் : ''உள்ள பொருள் எதுவும் ஓர் அளவையால் (அறியும் முறையால்) தெரிந்து கொள்ளப்படுகின்றது என்பது கண்கூடு. இல்லாத பொருள் எதுவும் அறியப்படுவதே இல்லை. உதாரணமாக, முயல் கொம்பு. இது முற்றிலும் இல்பொருள்தான். இது போலவே, முற்றிலும் அறியப்படாத பிரம்மமும் நிச்சயமாக ஓர் இல் பொருள்தான்''.

மேற்சொன்ன இந்தத் தவறான எண்ணம் ஏற்படக் கூடாது என்பதற்காக, பின் வரும் இந்தக் கதை தொடங்கப்படுகிறது. எந்த வகையிலும் ஆட்சியுள்ள தலைவனாயும், தேவர்களுக்கும் மேலே உயர்ந்த தேவனாகவும், கடவுளர்க்கெல்லாம் கடவுளாகவும், தேவர்களின் வெற்றிக்குக் காரணமாயும், அசுரர்களின் தோல்விக்குக் காரணமாயும், எளிதில் அறிந்து கொள்ள முடியாததாகவும் இருப்பதால், அந்தப் பரம்பொருள் எப்படி இல்லை என்று சொல்லமுடியும்?

இந்தக் கருத்துக்கு உடன்பாடாக அல்லவா பின் வரும் வாக்கியங்கள் இருக்கின்றன? அல்லது, பிரம்மத்தைப் பற்றிய அறிவைப் புகழ்வதற்காகவும் (இந்தக்) கதை சொல்லப்பட்டிருக்கலாம். பிரம்மத்தைப் பற்றிய அறிவினால் அல்லவா, அக்னியும் மற்றத் தேவர்களும் (மற்ற) தேவர்களைக் காட்டிலும் உயர்வு அடைந்தார்கள்? இந்திரன் இன்னும் அதிக உயர்வை அடைந்தான்?

பிரம்மம் அறிவதற்கு அரியது என்று இந்தக் கதை

எடுத்துக் காட்டுவதாக வைத்துக் கொள்ளலாம். அல்லது அக்னியும் மற்றவர்களும் மிகுந்த வலியவர்களாக இருந்த போதிலும் பிரம்மத்தை மிகுந்த சிரமத்துடன்தான் அறிந்தார்கள். இதே போலத்தான் தேவர்களுக்கு அரசனாக இந்திரன் இருந்தாலும் (அவனும் மிகவும் பிரயாசையுடன்தான் பிரம்மத்தைத் தெரிந்து கொள்ள முடிந்தது).

அல்லது, இது எல்லாமே பின்னால் வரப்போகிற ரகசியமான சில போதனைகளைக் குறித்து ஒரு விதியை (கட்டளையை) ஏற்படுத்துவதற்காக சொல்லப்பட்டிருக்கலாம். (கேனோபநிஷத், IV - 7). அல்லது, பிரம்மத்தைப் பற்றிய அறிவு இல்லாமல், எல்லா உயிர்களும் பொதுவாக நினைக்கிற படி "நான் செய்கிறேன்; அதன் பயனை நுகர்கிறேன்" என்று சொந்தம் கொண்டாடுவது பொய்யானது என்று காண்பிப்பதற்காக (இந்தக் கதை) சொல்லப்பட்டிருக்கலாம். பொதுவாக, தங்கள் சொந்தத் திறமையினால் வெற்றி பெற்றோம் என்ற கர்வம் தேவர்களுக்கு இருந்ததல்லவா? அது போலத்தான்.

மந்த்ரம் 1

ब्रह्म ह देवेभ्यो विजिग्ये तस्य ह
ब्रह्मणो विजये देवा अमहीयन्त ॥

ப்ரம்ம ஹ தேவேப்யோ விஜிஹ்யே தஸ்ய ஹ
ப்ரம்மணோ விஜயே தேவா அமஹீயந்த ॥ 1

பரம்பொருளே தேவர்களின் பொருட்டு வெற்றி பெற்றது. அது பெற்ற வெற்றியில் தேவர்கள் செருக்கடைந்தார்கள்.

சங்கரரின் உரை

பரம்பொருள், உண்மையிலேயே தேவர்களின் பொருட்டு வெற்றி பெற்றது. தேவர்களுக்கும், அசுரர்களுக்கும் நடந்த

போரில், உலகத்தின் எதிரிகளாயும் தெய்வீக நியதிகளை மீறுபவர்களாயும் உள்ள அசுரர்களை வெற்றிகொண்ட பிற்பாடு, பிரம்மம் அந்த வெற்றியையும் அதன் பயனையும் தேவர் களுக்குத் தந்து விட்டது. உலகத்தின் நிலையான நன்மைக்காக (இப்படிப் பிரம்மம் செய்தது.)

அந்தப் பிரம்மத்தினுடைய வெற்றியில் அல்லவா, (அக்னி முதலிய) தேவர்கள், ஏதோ தங்கள் திறமையினால் வெற்றி பெற்றது போல பெருமைப்பட்டுக் கொண்டார்கள்?

சங்கரரின் முன்னுரை

உயிர்களுடைய இதயங்களில் ஆத்மாவாக வசிப்பவனும், எல்லாம் அறிந்தவனும், உயிர்கள் செய்யும் எல்லாச் செயல் களுக்கும் பலனைப் பகிர்ந்து கொடுப்பவனும், எல்லாம் வல்லவ னும், உலகத்தின் நிலையான தன்மையைக் காப்பதில் விருப்ப முள்ளவனுமான இறைவனையே இந்த வெற்றியும் பெருமையும் சாரும்.

மந்த்ரம் 2

त ऐक्षन्तास्माकमेवायं विजयोऽस्माकमेवायं महिमेति ।
तद्धैषां विजज्ञौ तेभ्यो ह प्रादुर्बभूव तन्न व्यजानत किमिदं यक्षमिति ॥

த ஐக்ஷந்தாஸ்மாகமேவாயம்
விஜயோऽஸ்மாகமேவாயம் மஹிமேதி ।
தத்தைஷாம் விஜக்ஞௌ தேப்யோ
ஹ ப்ராதுர் பபூவ தந்ந வ்யஜாநத கிமிதம் யக்ஷமிதி ॥ 2

''ஆகா! இந்த வெற்றி நமதே! ஆகா! இந்த வெற்றி நமதே!'' என்று (தேவர்கள்) நினைத்தார்கள். பரம்பொருள் அவர்களுடைய (இந்த ஆணவத்தை)த் தெரிந்து கொண்டது. அவர்கள் முன் தோன்றியது. (அவர்களுக்கு) இது என்ன தேவதை என்று புரியவில்லை.

(தே) (அவர்கள்) இந்தத் தேவர்கள்; (ஐக்ஷந்த) நினைத்தார்கள்; ''(அயம் விஜய:) இந்த வெற்றி, (அஸ்மாகம் ஏவ) நம்முடையதேயாகும். இந்தப் பெருமையும் நம்முடையதே யாகும். நம்முள் ஆத்மாவாக இருக்கும் இறைவனுடையது அன்று; இந்த வெற்றியின் பலன், அக்னி, வாயு, இந்த்ரன் என்ற தன்மையோடுகூடிய நம்மால் அநுபவிக்கப்படுகிறது. இதெல்லாம் நம்முடைய ஆத்மாவாக இருக்கும் இறைவனால் அடையப் பட்டதன்று'' என்று தேவர்கள் எண்ணினார்கள். இப்படித் தவறான செருக்கினால் எண்ணும் (தேவர்களின்) மனப்போக்கை பரம்பொருள் (அறிந்து கொண்டது). அது எல்லாவற்றையும் அறியும் அல்லவா? அது எல்லா உயிர் களினுடைய அறிவுக் கருவிகளையெல்லாம் இயக்குவதால் தேவர்களின் இந்தப் பொய்யான செருக்கைக்கண்டு, இவர்களுடைய போலிப் பெருமையால் ''அசுரர்களைப் போல் இந்தத் தேவர்களும் தோல்வியுறாமலிருக்கட்டும்'' என்று, அவர்களின் பேரில் கருணை கூர்ந்து ''அவர்களுடைய தவறான செருக்கை நீக்கி அவர்களுக்கு அருள் செய்கிறேன்'' என்று எண்ணி, அவர்களுடைய நன்மையின் பொருட்டு, இதுவரை ஒருவரும் கண்டிராதபடி ஆச்சரியமானதும் வியப்புக்குரிய தன்னுடைய மாயா சக்தியினால் தோற்றுவிக்கப்பட்டதுமான வடிவத்தை எடுத்துக் கொண்டு தேவர்களுடைய கண்முன்னால் காட்சியளித்தது. அப்படித் தம் முன்னால் தோன்றிய (தத் ப்ரஹ்ம) - பரம்பொருள், மிகப் பெரியதும், வணங்கத்தகுந்தது மான, அந்தத் தெய்வ வடிவம், இன்னதென்று (ந வ்யஜானத) தேவர்களால் அறியமுடியவில்லை.

மந்த்ரம் 3

तेऽग्निमब्रुवञ्जातवेद एतद्विजानीहि
किमिदं यक्षमिति तथेति ॥

தே அக்னிம் அப்ருவன் ஜாதவேத
ஏதத் விஜானீஹி கிமிதம் யக்ஷமிதி ததேதி ॥ 3

அவர்கள் அக்னியைப் பார்த்து ''ஏ ஜாதவேத! இந்தத் தெய்வ வடிவம் இன்னதென்று நன்கு அறிந்து வருக!'' என்று சொன்னார்கள். அவரும் ''அப்படியே'' என்றார்.

சங்கரரின் உரை

அந்த தெய்வ வடிவத்தை அறிய முடியாமல், ஆனால் அதே சமயம் (அதைத்) தெரிந்து கொள்ள வேண்டுமென்ற விருப்பம் கொண்டு அந்தத் தேவர்கள் உள்ளத்தில் அச்சத்தோடு, எல்லோருக்கும் முதலில் செல்கிறவரும், பேரறிவு படைத்தவரும், எல்லாம் அறிந்தவர்போலக் காணப்படுபவருமான அக்னியைப்பார்த்து ''ஏ ஜாதவேத! நீ ஆற்றலுள்ளவனாதலால், நமக்குக் காட்சியளிக்கிற தெய்வ வடிவத்தை இது என்ன தேவதை என்று நன்றாகத் தெரிந்து கொண்டு வா'' என்று சொன்னார்கள்.

மந்த்ரம் 4

तदभ्यद्रवत्तमभ्यवदत्कोऽसीत्यग्निर्वा
अहमस्मीत्यब्रवीज्जातवेदा वा अहमस्मीति ॥

தம் அப்யத்ரவத் தம் அப்யவதத்
கோ஽ஸி இதி அக்னிர் வா அஹமஸ்மீதி
அப்ரவீத் ஜாதவேதா வா அஹமஸ்மீதி ॥ 4

அவர் அதனிடத்துச் சென்றார். அவரைப்பார்த்து ''நீ

யார்?'' என்று அது கேட்டது. ''நான் அக்னி; நான் ஜாதவேதா வாகவும் இருக்கிறேன்'' என்று அக்னி சொன்னான்.

சங்கரரின் உரை

அப்படியே என்று (தேவர்களுக்குச்) சொல்லிவிட்டு அக்னி அந்தத் தெய்வீகத் தோற்றத்தைக் குறித்துச் சென்றான் அவ்வாறு அணுகி (அதைக்) கேள்வி கேட்க நினைத்த பொழுது அந்தத் தெய்வீகத் தோற்றத்தின் முன்னிலையில் அவனது ஆணவம் ஒடுங்கி ஒன்றும் பேசவில்லை. அந்த அக்னியைப் பார்த்து அந்தத் தெய்வீகத் தோற்றம்; ''நீ யார்?'' என்று வினவியது. இப்படி (பிரம்மத்தினால்) வினவப்பட்ட அக்னி ''நான் அக்னி எனப் பெயருடையவன்; ஜாதவேதா என்றும் எல்லோரும் என்னை அறிவர்'' என்றான். இதன் மூலம், இரண்டு பெயர்களால் பிரசித்தி பெற்றவன் என்ற தன்னுடைய தற்பெருமையை பறைசாற்றிக் கொண்டான்.

மந்த்ரம் 5

तस्मिꣳस्त्वयि किं वीर्यमित्यपीदꣳसर्वं
दहेयं यदिदं पृथिव्यामिति ॥

தஸ்மிம்ஸ் த்வயி கிம் வீர்யமி த்யபீதக்ம்
ஸர்வம் தஹேயம் யதிதம் ப்ருதிவ்யாமிதி ॥ 5

(அந்த உருவம்) ''இப்படிப்பட்ட உன்னிடம் என்ன சக்தி உள்ளது?'' என்று கேட்டது. ''இப்பூமியிலுள்ள எல்லாவற்றை யும் எரித்துவிடுவேன்'' என்று (அக்னி பதில் சொன்னான்).

சங்கரரின் உரை

இவ்வாறு சொன்ன அக்னியைப்பார்த்து அந்தப் பரம் பொருள், ''இவ்வளவு பிரபலமான பெயர்களையும் குணங் களையும் உடைய உன்னிடம் என்ன சக்தி உள்ளது?'' என்று

வினவியது. அதற்கு அக்னி ''பூவுலகிலுள்ள, அசைவது, அசையாதது என்ற இந்த எல்லாப் பொருட்களையும் எரித்துச் சாம்பலாக்கிவிடுவேன்'' என்றான். பூமி என்ற சொல் இங்கு ஒரு உதாரணமாகத்தான் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பூவுலகம் மட்டுமன்றி, பூவுலகிற்கு அப்பால் உள்ள பொருட்களும் கூட (அக்னியாகிற) நெருப்பினால் நிச்சயமாக எரிக்கப்படக் கூடியவைதான்.

மந்த்ரம் 6

तस्मै तृणं निदधौ एतद्दहेति ।
तदुप्रेयाय सर्वजवेन
तन्न शशाक दग्धुं स तत एव निववृते
नैतदशकं विज्ञातुं यदेतद्यक्षमिति ॥

தஸ்மை த்ருணம் நிததாவேதத் தஹேதி ।
ததுப்ரேயாய ஸர்வஜவேன
தந்ந சசாக தக்தும் ஸ தத ஏவ நிவவ்ருதே
நைதத்அசகம் விக்ஞாதும் யதேதத் யக்ஷமிதி ॥ 6

(அந்தப் பரம்பொருள்) (அக்னியின்) முன்னால் ஒரு துரும்பை வைத்து ''இதை எரி'' என்றது. (அக்னி) மிகுந்த உற்சாகத்தினால் பிறந்த சக்தியோடு அந்தத் துரும்பைத் தாக்கினான். அவனால் அதை எரிக்க முடியவில்லை. அங்கிருந்து திரும்பிவந்து ''அந்த தேவதை இன்னதென்று என்னால் கண்டறிய முடியவில்லை'' என்று (தேவர்களிடம் சொன்னான்).

சங்கரரின் உரை

தற்பெருமை கொண்ட (அக்னியின்) முன்னால் பரம் பொருளான (அந்தத் தெய்வத் தோற்றம்) ஒரு துரும்பை வைத்தது. ''இந்த வெறும் துரும்பை எரி, என் கண் முன்னே.

உன்னால் இதை எரிக்க முடியாவிட்டால், எங்கும் எல்லா வற்றையும் எரிக்கக்கூடியவன் என்ற வீண் தற்புகழ்ச்சியை விட்டுவிடு'' என்று அந்த பரம்பொருள் சொன்னவுடன், (அக்னி) அந்தத் துரும்பினிடம், மிகுந்த உற்சாகத்தில் விளைந்த வேகத்துடன் அணுகினான். அணுகி, அந்தத் துரும்பை எரிக்க முடியவில்லை. அந்தத் துரும்பைக்கூட எரிக்க முடியாமல், வெட்கி, தன்னுடைய வீறாப்பான சவாலில் தோற்று அக்னி அந்தத் தோற்றத்தினின்று மௌனமாகத் திரும்பினான்; தேவர் களிடம் திரும்பிச் சென்று ''இந்தத் தெய்வீகத்தோற்றம் இன்ன தென்று அறிவதற்கு வல்லமை என்னிடம் இல்லை'' என்று சொன்னான்.

மந்த்ரம் 7

अथ वायुमब्रुवन्वायवेतद्विजानीहि
किमेतद्यक्षमिति तथेति ॥

அத வாயுமப்ருவன் வாயவேதத் விஜாநீஹி
கிமேதத்யக்ஷமிதி ததேதி ॥ 7

அப்பொழுது (தேவர்கள்) வாயுவைப் பார்த்து ''ஏ வாயுவே! இந்த யக்ஷஸ் இன்னதென்று தெரிந்து வருவாய்!'' என்றனர். (வாயு) 'அப்படியே' என்றான்.

மந்த்ரம் 8

तदभ्यद्रवत्तमभ्यवदत्कोऽसीति वायुर्वा
अहमस्मीत्यब्रवीन्मातरिश्वा वा अहमस्मीति ॥

ததப்யத்ரவத் தம் அப்யவதத் கோ஽ஸீதி வாயுர்வா
அஹமஸ்மீத்யப்ரவீன் மாதரிச்வா வா அஹமஸ்மீதி ॥ 8

அந்த (யக்ஷஸைக் குறித்து) அவன் சென்றான். அவனைப்

பார்த்து அது ''நீ யார்?'' என்று கேட்டது. அவன் ''என்னை வாயு என்பர்; மாதரிச்வா என்பதும் நானே' என்றான்.

மந்த்ரம் 9

तस्मिंस्त्वयि किं वीर्यमित्यपीदं सर्वमाददीय
यदिदं पृथिव्यामिति ॥

தஸ்மிம்ஸ் த்வயி கிம் வீர்யம் இதி அபீதக்ம்
ஸர்வமாததீய யதிதம் ப்ருதிவ்யாம் இதி ॥ 9

''இப்படிப்பட்ட உன்னிடம் என்ன சக்தி இருக்கிறது?'' என்று (யக்ஷஸ் கேட்டது). (வாயு) ''இந்தப் பூவுலகில் உள்ள எதையும் ஊதித் தள்ளிவிடுவேன்'' என்றான்.

மந்த்ரம் 10

तस्मै तृणं निदधावेतदादत्स्वेति
तदुप्रेयाय सर्वजवेन
तन्न शशाकादातुं स तत एव निववृते
नैतदशकं विज्ञातुं यदेतद्यक्षमिति ॥

தஸ்மை த்ருணம் நிததௌ ஏதத் ஆதத்ஸ்வேதி
ததுப்ரேயாய ஸர்வஜவேன
தந்ந சசாக ஆதாதும் ஸ தத ஏவ நிவவ்ருதே
நைததசகம் விக்ஞாதும் யதேதத் யக்ஷமிதி ॥ 10

(அந்த யக்ஷஸ்) அவன் முன் ஒரு புல்லை வைத்து, ''இதை எடு'' என்றது. வாயு தம் உற்சாகத்தில் விளைந்த முழு வேகத்தோடு அந்தப் புல்லை அணுகினான். அதை எடுக்க முடியவில்லை. அங்கிருந்து திரும்பிச் சென்று ''இந்தத் தேவதை இன்னதென்று என்னால் அறியமுடியவில்லை'' (என்று தேவர்களிடம் சொன்னான்.)

சங்கரரின் உரை

அதன் பின், அவர்கள் வாயுவினிடம் ''ஓ வாயுவே, அறிந்து வா'' என்று (முன்பு அக்னிக்குச் சொன்னதுபோல) சொன்னார்கள். இது எல்லாம் முன் போலவே பொருள் கொள்ள வேண்டும். ''வீசுகிறது'' ''செல்லுகிறது'' அல்லது ''வாசனை யைச் சுமந்து செல்கிறது'' என்பதால் வாயுவிற்கு (காற்றிற்கு) அந்தப் பெயர் ஏற்பட்டது. மாதரிச்வா என்றால், வெற்று வெளியில் சஞ்சரிக்கிறது என்பது பொருள். (ஸர்வம் அபி) இவை எல்லா வற்றையும் (ஆததீய) - எடுத்து வீசி எறிந்து விடுவேன் என்பது முதலியன முன்பு (அக்னியைப் பற்றிச் சொன்னது போல) இங்கும் எல்லாம் சொல்லப்பட்டது.

மந்த்ரம் 11

अथेन्द्रमब्रुवन्मघवन्नेतद्विजानीहि
किमेतद्यक्षमिति तथेति तदभ्यद्रवत्तस्मात्तिरोधते ॥

அத இந்த்ரம் அப்ருவன் மகவன் ஏதத் விஜானீஹி ।
கிமேதத்யக்ஷமிதி ததேதி ததப்யத்ரவத் தஸ்மாத் திரோததே ॥ 11

பிறகு (தேவர்கள்) இந்த்ரனைப் பார்த்து ''ஓ மகவா! இந்த யக்ஷஸ் இன்னதென்று தீர அறிந்து வருவீர்'' என்றனர். (இந்த்ரன்) ''அப்படியே'' (என்றான்). அந்த யக்ஷஸை அணுகினான். அது அவன் (கண்ணுக்குப் படாமல்) மறைந்தே போயிற்று.

சங்கரரின் உரை

''அத இந்த்ரம் அப்ருவன் மகவன் ஏதத் விஜானீஹி'' என்பது முதலான சொற்கள் (எல்லாம்) அக்னி, வாயு முதலிய வர்களுக்குச் சொன்னது போலவே பொருள் செய்யப்பட

வேண்டும். இந்த்ரன், தேவர்களின் தலைவன், அவனுடைய ஆற்றல் பற்றி (மகவா) என்று பெயர் பெற்றவன். (அவன்) (தத் அப்யத்ரவத்) அந்தத் தெய்வீகத் தோற்றத்தை அணுகினான். (தஸ்மாத்) அப்படித் தன்னை அணுகிய இந்த்ரனிடமிருந்து அந்த (யக்ஷஸாக வந்த) பிரம்மம் பார்வைக்கு அகப்படாமல் மறைந்து போயிற்று. அவனுடைய வெறும் பார்வைக்குக் கூட இடம் தராமல் பிரம்மம் மறைந்து போயிற்று. ''தான் இந்த்ரன்'' என்ற இந்த்ரனுடைய ஆணவம் முற்றும் அழிக்கப்படவேண்டும் என்பதே பரம்பொருளின் நோக்கம். அதனால் (இந்த்ரன் அதனுடன்) பேசுவதற்குக் கூட அது இடங்கொடுக்கவில்லை.

மந்த்ரம் 12

स तस्मिन्नेवाकाशे स्त्रियमाजगाम
बहुशोभमानां उमाᳬ हैमवतीं
ताᳬ होवाच किमेतद्यक्षमिति ॥

इति केनोपनिषदि तृतीयः खण्डः ॥

ஸ தஸ்மின்னேவாகாசே ஸ்த்ரியம் ஆஜகாம
பஹு¯சோபமானாம் உமாம் ஹைமவதீம் தாம் ஹோவாச
கிமேதத் யக்ஷமிதி *12*

இதி கேனோபநிஷதி த்ருதீய: கண்ட:

எந்த இடத்தில் அந்தத் தெய்வீக உருவம் முதலில் தென்பட்டுப் பின் மறைந்ததோ, எந்த இடத்தில் அந்த (யக்ஷஸ்) மறைகின்ற நேரத்தில் இந்த்ரன் நின்றானோ, (தஸ்மின் ஏவ ஆகாசே) - அதே இடத்தில், அல்லது அந்த இடத்தின் ஒரு பகுதியில், இந்த்ரன் நின்றான். ''இந்த தோற்றம் யாது?'' என்று மனத்தில் யோசனை செய்து கொண்டிருந்தான். அக்னி முதலியவர்களைப் போல அவன் திரும்பிப் போகவில்லை.

அவனுக்கு யக்ஷஸ் பேரில் இருந்த ஈடுபாட்டை அறிந்த, அறிவே உருவான பிரம்மம் பெண்ணுருவாக உமையின் வடிவமெடுத்து, அவன் முன் தோன்றியது.

அந்த இந்த்ரன் அந்த (பஹுசோபமானாம்) மிகவும் ஒளியுடன் கூடிய உமையை (ஆஜகாம) - அணுகினான். மெய்யறிவு என்பது ஒளிபடைத்த எல்லாவற்றிற்குள்ளும் மிக்க ஒளி வாய்ந்ததாகையால், ''மிகுந்த ஒளிபடைத்த'' (''பஹு சோபமான'') என்ற அடைமொழி உமையம்மைக்குப் பொருத்த மானதே. (இந்த்ரன்), (ஹைமவதீம்) - பொன்னாலான ஆடை யணிந்தது போல் வடிவுள்ள, (அதாவது) மிகுந்த ஒளிபடைத்த ஹைமவதீ (என்ற) உமையன்னையை அணுகினான் என்பது பொருள். ஹிமவானின் பெண்ணாகையால் அவள் ஹைமவதீயெனப் பெயர் பெற்றாள் என்றும் சொல்லலாம். முற்றுமுணர்ந்த இறைவனோடு எப்பொழுதும் சேர்ந்திருப்பதால், பரமேச்வரிக்கு எல்லா உண்மையும் தெரியும் என்று எண்ணி, இந்த்ரன் அவளை அணுகினான். அவளை (உமையைப்) பார்த்து (கிம்ஏதத் யக்ஷம் இதி) ''இப்பொழுது தோன்றி மறைந்த இந்தத் தோற்றம் யாது?'' என்று கேட்டான்.

கேனோபநிஷத்தின் மூன்றாவது கண்டம் முற்றிற்று.

நான்காவது கண்டம்

மந்த்ரம் I

सा ब्रह्मेति होवाच ब्रह्मणो वा एतद्विजये
महीयध्वमिति ततो हैव विदाञ्चकार ब्रह्मेति ॥

ஸா ப்ரஹ்மேதி ஹோவாச ப்ரஹ்மணோ வா ஏதத் விஜயே
மஹீயத்வமிதி ததோ ஹைவ விதாஞ்சகார ப்ரஹ்மேதி ॥ 1

அந்த (அம்பிகை) ''அது பரம் பொருளே. பரம் பொருளின் வெற்றியே அது. அதை உங்களுடைய வெற்றி என்று பெருமையடித்துக் கொண்டீர்கள்'' என்றாள். ''வந்தது பரம் பொருள்'' என்று இந்த்ரன் இதிலிருந்து உறுதியாக அறிந்தான்.

சங்கரரின் உரை

(ஸா) - அவள் (ஹைமவதீ), ''(ப்ரஹ்ம இதி) (தோன்றிய) அது பரம்பொருளே. (ப்ரஹ்மணோ வை விஜயே) - பரம் பொருளின் வெற்றியில் (நீங்கள் தற்பெருமைப்பட்டுக் கொண்டீர்கள்). அசுரர்கள் பரம்பொருளால்தான் வெல்லப் பட்டார்கள். நீங்கள் அதற்குக் கருவியாக மட்டுமே இருந்தீர்கள். வெற்றி அவருடையதாயிருக்க, நீங்கள் (மஹீயத்வம்) பெருமைப்பட்டுக் கொண்டீர்கள், தற்பெருமையடித்துக் கொண்டீர்கள்'' என்று (உவாச ஹ) சொன்னாள். (ஏதத்) ''இந்த'' என்ற இந்தச் சொல் இவ்வகையில் ''பெருமைப்பட்டுக் கொண்டீர்கள்'' என்ற வினைச்சொல்லிற்கு அடைவாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

''ஆயினும் இது உங்களது வீண் செருக்குத்தான். (அஸ்மாகம் ஏவ அயம் விஜய: அஸ்மாகம் ஏவ அயம் மஹிமா) 'இந்த வெற்றி நம்முடையதே; இந்தப் பெருமை நமக்குரியதே! (என்று பீற்றிக் கொண்டீர்கள்)'' என்று உமை சொன்னாள்.

(தத: ஹ இவ) - இதிலிருந்துதான், உமையின் இந்தச் சொற்களிலிருந்துதான், (தோன்றி மறைந்த) அது, பரம்பொருளென்று இந்த்ரன் (விதாம் சகார) - தெரிந்து கொண்டான்,

(தத: ஹ ஏவ) (அதிலிருந்துதான்) என்ற சொற்களில் அடங்கியிருக்கும் அழுத்தம், இந்த்ரன் தானாகத் தெரிந்து கொண்டு விடவில்லை; உமை சொல்லித்தான் தெரிந்து கொண்டான் என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது.

மந்த்ரம் 2

சங்கரரின் முன்னுரை

அக்னி, வாயு, இந்த்ரன் என்ற இந்தத் தேவர்கள் மற்ற தேவர்களைவிடச் சிறப்படைந்தார்கள். ஏனெனில், அவர்கள், அந்தப் பரம்பொருளைப் பார்க்கவும், பேசவும் பேறு பெற்றார்கள் அல்லவா?

तस्माद्वा एते देवा अतितरामिवान्यान्देवान्यदग्निर्न
वायुरिन्द्रस्ते ह्येनन्नेदिष्टं पस्पर्शुस्ते
ह्येनत्प्रथमो विदाञ्चकार ब्रह्मेति ॥

தஸ்மாத்வா ஏதே தேவா அதிதராமிவ
அன்யான் தேவான் யத் அக்னிர் வாயுரிந்த்ரஸ்-தே
ஹ்யேநந்நேதிஷ்டம் பஸ்பர்சுஸ்-தே
ஹ்யேநத் ப்ரதமோ விதாஞ்சகார ப்ரஹ்மேதி ॥ 2

சங்கரரின் உரை

(தஸ்மாத்) - ஆகையினால், (ஏதே தேவா:) - இந்தத் தேவர்கள் தங்களுடைய சொந்த குணச் சிறப்பினால், அதாவது, ஆற்றல், பண்பு போன்ற பேற்றினால் (அன்யான் தேவான் -) மற்றத் தேவர்களைவிட (அதிதராம் இவ) - மிகவும் மேம்பட்ட

வர்களானார்கள். (இங்கு) 'இவ' என்ற சொல்லுக்குப் பொருள் ஒன்றும் இல்லை. அல்லது அழுத்தம் கொடுப்பதற்காகப் பயன் படுத்தப்பட்டிருக்கிறது என்று வைத்துக் கொள்ளலாம். (புத் அக்னி: வாயு: இந்த்ர:) - அக்னி, வாயு, இந்த்ரன் என்ற தேவர்கள் (ஏதத் ப்ரஹ்ம) இந்தப் பரம்பொருளை முன் கூறிய உரையாடல் முதலியவற்றால், (நேதிஷ்டம் பஸ்பர்சு:) - மிகவும் நெருங்கி, அண்மையில் கண்டுவிட்டவர்களாதலால், மற்றத் தேவர்களை விட முதன்மை பெற்று உயர்ந்துவிட்டார்கள். (ஏனத் -) இந்தப் பரம்பொருளை (விதாம் சகார) (விதாம் - சக்ரு: என்றிருத்தல் வேண்டும்) - 'இது பரம் பொருள்' என்று தெரிந்து கொண்டார்கள்.

மந்த்ரம் 3

சங்கரரின் முன்னுரை

அக்னியும் வாயுவும் (வந்தது பரம்பொருள் என்று) இந்த்ரன் சொல்லித்தான் தெரிந்து கொண்டார்கள் என்பதாலும், இந்த்ரன்தான் முதன் முதலில் உமையின் மூலம் பரம் பொருளைத் தெரிந்து கொண்டான் என்பதாலும்

तस्माद्वा इन्द्रोऽतितरामिवान्यान्देवान्
स ह्येननेदिष्ठं पस्पर्श स ह्येनत्प्रथमो
विदाञ्चकार ब्रह्मेति ॥

தஸ்மாத்வா இந்த்ரோऽ திதராமிவான்யான்
தேவான் ஸ ஹ்யேநந் நேதிஷ்ட்டம்
பஸ்பர்ச ஸஹ்யேனத் ப்ரதமோ
விதாஞ்சகார ப்ரஹ்மேதி ॥ 3

சங்கரரின் உரை

(தஸ்மாத் வை இந்த்ர: அதிதராம் இவ -) அந்தக் காரணத் தால், இந்த்ரன் மற்றத் தேவர்களவிடச் சிறப்படைந்தான். (ஹி

ஸ: ஏனத் நேதிஷ்ட்டம் பஸ்பர்ச) - அவன் அதை (பரம் பொருளை) மிகவும் நெருங்கிக் கண்டதால் (ஸ: ஹி ஏனத் ப்ரதம: விதாம்சகார ப்ரஹ்ம இதி) - முதன் முதலில் இந்தப் பரம்பொருளைத் தெரிந்து கொண்டான் என்பதால் (இந்த்ரன் சிறப்படைந்தான்) என்று இந்த வாக்கியத்தின் பொருள் இவ்வாறு விவரிக்கப்பட்டது.

அதனால்தான் இந்த்ரன் மற்றத் தேவர்களைவிடச் சிறப்படைந்தான். முதன் முதலில் (அந்த யக்ஷஸை), பரம் பொருளை, மிகவும் நெருங்கி அறிந்துவிட்டான் என்பதுதான் (இந்தச் சிறப்புக்குக்) காரணம்.

மந்த்ரம் 4

तस्यैष आदेशो यदेतद्विद्युतो
व्यद्युतदाऽइतीन् व्यमीमिषदा इत्यधिदैवतम् ॥

தஸ்யைஷ ஆதேசோ யதேதத்
வித்யுதோ வ்யத்யுததா இதீன்
ந்யமீமிஷதா இத்யதிதைவதம் ॥ 4

உவமை மூலமாக தியானத்தைப் பற்றி அந்தப் (பரம் பொருள்) அளித்த உபதேசம் இது. மின்னலின் வெட்டுப் போன்றது அது (பரம்பொருள்). கண்கொட்டுவது போன்றது அது. இவை இங்கு தெய்வீகமான (அதிதைவதமான) ஒரு சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்ட (உதாரணங்கள்).

சங்கரரின் உரை

இந்த இடத்தில் ஆராயப்படும் பரம்பொருளைப்பற்றி (ஏஷ: ஆதேச:) உதாரணம் (அல்லது உவமை) மூலமாகப் பெறப்படும் உபதேசம் இதுதான். ஒப்பில்லாத பரம்பொருளைப் பற்றி உபதேசம் எந்த உவமை மூலம் செய்யப்படுகிறதோ, அது

(ஆதேசம்) எனப்படும். (யத் ஏதத் -) மின்வெட்டு என்று மக்கள் எல்லோருக்கும் நன்கு தெரிந்தது எதுவோ, அது தான் இங்கு உவமை. பரம்பொருள் மின்வெட்டுப் போல பிரகாசித்தது என்றால் அது. (வித்யுத:) 'மின்னலிலிருந்து பெற்ற ஒளியினால் தான்' என்பது ''வித்யுத: வ்யத்யுதத்' என்ற சொற்றொடரின் பொருளாக இருக்க முடியாது. ''மின்வெட்டு'' என்று இங்கே (அச் சொற்றொடர்க்குப்) பொருள் கொள்ள வேண்டும். (வ்யத்யுததா) என்ற (உபநிஷத்தில் வரும்) சொல் உவமை என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்குப் பொருள் என்னவென்றால்: ''(பரம்பொருள்) மின்வெட்டுப் போன்று தோன்றுவது'' என்பதுதான். வேதத்தின் வேறொரு இடத்திலும் கூட, ''(பரம்பொருள்) ஒரு மின்வெட்டை ஒத்தது'' (ப்ருஹ தாரண்யக உபநிஷத், II - 3.6) என்று கூறியிருப்பதால் (மேற் கண்டவாறு பொருள் கொள்வது ஏற்புடையதே). ஏனெனில், ஒரே ஒரு தடவை தேவர்களுக்கு முன்னே மின்வெட்டுப் போலத் தோன்றிவிட்டு, பரம்பொருள் மறைந்து விட்டது. அல்லது, 'வித்யுத:' (மின்வெட்டினுடைய) என்ற சொல்லுக்குப் பின் 'தேஜ:' (ஒளி) என்ற சொல் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு செய்தால், 'வ்யத்யுதத்' என்ற சொல்லிற்கு 'மின் வெட்டுப்போல் பிரகாசித்தது' என்று பொருள் ஏற்படும். மின்னலின் ஒளி ஒரே ஒரு தடவை வெட்டியது என்பது போன்ற நிகழ்ச்சி இங்கு நிகழ்ந்தது. 'இதி' என்ற சொல் 'ஆதேச:' (உபதேசம்) என்ற சொல்லை நினைவிற்குக் கொண்டுவரும் நோக்கம் கொண்டது. (எனவே இங்கு பொருள் யாதெனில்), இந்த உவமையே ஆதேசம் அல்லது உபதேசமாகும். 'இத்' என்ற சொல், 'சேர்த்து இணைப்பது' என்பதற்காகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது.

இங்கு இன்னொரு உவமை தரப்படுகிறது. அது என்ன? (ந்யமீமிஷத்) ''சிமிட்டியது'', எப்படி நம் கண் கொட்டுகிறதோ அது போல. 'ந்யமீமிஷத்' என்ற சொல்லின் வடிவம்,

(அச்சொல்லின்) தாதுவினுடைய பொருளுடையதேயாகும். 'ந்யமீமிஷதா' என்ற உபநிஷத் சொல்லில் 'ஆ' என்பதும், உவமை என்ற கருத்தில் இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. பொருள் என்னவென்றால்: கண் மூடித் திறக்கும் நேரத்தில் நடந்தது, பரம்பொருளின் தோற்றம். (இதி அதிதைவதம்)- இது (தெய்வமான) பரம் பொருளுக்கு உவமைகள் காட்டுவதற்காக ஏற்பட்டது.

மந்த்ரம் 5

अथाध्यात्मं यदेतद् गच्छतीव च मनोऽनेन
चैतदुपस्मरत्यभीक्ष्णं संकल्पः ॥

அதாத்யாத்மம் யதேதத் கச்சதீவ ச
மனோனேன சைததுபஸ்மரத்யபீக்ஷ்ணம் ஸங்கல்ப: ॥ 5

இனி, உடலாகத் தனியுருவங் கொண்ட நிலையில் (உவமை மூலம்) அதைப்பற்றிய உபதேசம்; அதைக் குறித்து மனம் செல்லுகின்றது போன்ற (நிகழ்ச்சி). திரும்பத்திரும்ப மனத்தினால் நினைத்துப் பார்க்கப்படுகின்ற (அதைப்பற்றிய) சிந்தனை.

சங்கரரின் உரை

இதன் பிறகு, (அத்யாத்மம்) - பரம்பொருள் உடலில் உள்ளுறையும் தனி உயிராக இருக்கின்ற நிலை பற்றிய உபதேசம் செய்யப்படுகிறது. (யத் ஏதத்) நன்கு தெரிந்த உண்மை இது. இந்தப் பரம்பொருளைக் குறித்து மனம் (கச்சதி இவ) செல்லுவதுபோல (அதாவது) மனது பரம்பொருளில் புகுவது போல, அதைத் தனக்கு ஒரு பொருளாக எண்ணி நினைப்பதைப் போல, ஒரு நிகழ்ச்சி. (அனேன) இந்த மனத்தினால் மெய் யறிவை விரும்பும் சாதகன் (ஏதத்) - இந்தப் பரம்பொருளை

(அபீக்ஷ்ணம்) - மிகவும் (உபஸ்மரதி) நெருங்கி நினைத்துப் பார்க்கிறான்.

(ஸங்கல்ப:) - மனத்தின் சிந்தனைக்குப் பரம்பொருள் (பொருளாகிறது). மனம் முதலிய தடைகளினால் அல்லவா சிந்தனை, நினைவு முதலிய மனத்தின் நிலைகளினால் பரம்பொருள் வெளிப்படுத்தப்படுகிறது? இவற்றிற்குப் பொருளாவதால் இவற்றினால் அறியப்படுவது போல அது இருக்கிறது. ஆகையினால், மனம் முதலியவற்றோடு கூடிய ஒரு தனி உயிராகப் பரம்பொருள் தோன்றுகின்ற நிலையில், செய்யப்படும் உபதேசம் இது.

(உருவங்கடந்த) தெய்வ நிலையில், மின்னல் போலவும் கண்மூடிக் கண் திறப்பது போலவும் (ஒரு நொடியில்) தன்னைக் காண்பித்துக் கொள்ளும் தன்மையுள்ளது பரம்பொருள். தனி ஓர் உயிராக அது தோன்றும் பொழுது மனத்தின் கண் உண்டாகும் அறிவோடு தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் தன்மையுள்ளது. இதுதான் (மின்னல் முதலிய உவமைகள்) மூலம் தரப்பட்ட பரம் பொருளைப்பற்றிய உபதேசமாகும். உவமைகள் மூலம் பரம்பொருளைப்பற்றிய உபதேசத்திற்குத் தேவை என்ன வென்றால், இவ்வாறு உபதேசம் செய்யப்படும் பரம்பொருள், சிற்றறிவு படைத்த மக்களுக்கு எளிதாகப் புரிகிறது. குறை வில்லாத பரம் பொருள் அறிவு குறைந்தவர்களால் புரிந்து கொள்ள முடியாது.

மந்த்ரம் 6

तद्ध तद्वनं नाम तद्वनमित्युपासितव्यं
स य एतदेवं वेदाभिहैनꣳ सर्वाणि भूतानि संवाञ्छन्ति ॥

தத்ஹ தத்வனம் நாம தத்வனம் இதி
உபாஸிதவ்யம் ஸ ய ஏததேவம்

வேதாபிஹைறனம் ஸர்வாணி
பூதானி ஸம்வாஞ்சந்தி ॥ 6

அந்தப் பரம்பொருளானது எல்லா உயிர்களாலும் மிகவும் போற்றத்தகுந்தது என்பது நன்கு தெரிந்த ஒன்று. எனவே, அது 'தத்வனம்' என்று தியானிக்கப்பட வேண்டும். இவ்வாறு அதைத் தியானம் செய்பவரை எல்லா உயிர்களும் நிச்சயமாக வேண்டி நிற்கின்றன.

சங்கரரின் உரை

(தத்) - அந்தப் பரம்பொருள் (ஹ) நிச்சயமாக (தத்வனம் நாம) - ('தத்வனம்' என்று பெயர் பெற்றது). தத்வனம் என்ற சொல், (தஸ்ய) - 'அவருடைய' என்ற சொல்லிலிருந்தும், (வனம்) - 'போற்றி வணங்குவதற்குரியது', என்ற சொல்லி லிருந்தும் பிறந்தது. எல்லா உயிர்களுக்கும் உள்ளே ஆத்மாவாக இருப்பதால், அது போற்றப்பட வேண்டும். அதனால் பரம் பொருளுக்குத் 'தத்வனம்' என்று பெயர். எல்லா உயிர்களாலும் போற்றுவதற்குரியது பரம்பொருள் என்பது எல்லோரும் நன்கு அறிந்த ஒன்று. போற்றப்படத் தக்கதாக இருப்பதால், **அது** 'தத்வனம்' என்று அந்தப் பெயர் மூலம் (உபாஸிதவ்யம்) தியானிக்கப்பட வேண்டும். 'தத்வனம்' என்பது அந்தப் பரம் பொருளின் சிறப்பான குணத்தைக் காண்பிக்கிறது. (இந்த வேதவாக்கியம்) இப்பெயர் மூலம் செய்யப்படும் தியானத்தின் பலனைச் சொல்கிறது.

(ஸ:ய:) - எவனொருவன் (ஏதத்) - மேற்சொன்ன பரம் பொருளை (ஏவம்) - இவ்வாறு மேற்சொன்ன குணங்களை யுடையதாக (வேத) - தியானிக்கிறானோ, (ஏவம்) - அப்படித் தியானிக்கிறவனை, (ஸர்வாணி பூதானி) - எல்லா உயிர்களும் (ஹ) - நிச்சயமாக, (அபிஸம்வாஞ்சந்தி) பிரார்த்தனை செய் கின்றன; பரம்பொருள் போன்றே கருதி வேண்டுதல் செய் கின்றன.

மந்த்ரம் 7

சங்கரர் முன்னுரை

இவ்வாறு அறிவுறுத்தப்பட்ட சீடன் ஆசிரியரைப் பார்த்துச் சொன்னான்:

उपनिषदं भो ब्रूहीत्युक्ता त उपनिषद्ब्राह्मीं
वाव त उपनिषदमब्रूमेति ॥

உபநிஷதம் போ ப்ரூஹீத்யுக்தா த உபநிஷத் ப்ராஹ்மீம்
வாவ த உபநிஷதம் அப்ரூமேதி ॥

(சீடன்) : ஐயா! மெய்யான ரகஸ்ய அறிவைச் சொல்லுவீராக!

(குரு) : ''நான் உனக்கு ரஹஸ்ய அறிவைத்தான் சொன்னேன். இதுவரை நான் பரம்பொருளைப்பற்றிய ரஹஸ்ய அறிவைத்தான் உனக்குச் சொல்லிக் கொடுத்தேன்''.

சங்கரரின் உரை

''ஐயா! (உபநிஷதம்) - சிந்திக்க வேண்டிய ரகஸ்யத்தை (ப்ரூஹி) - சொல்லுங்கள்'' (இதி) - என்றான். இப்படிக் கேட்ட சீடனைப் பார்த்து குரு - ''உனக்கு (உபநிஷத்) - ரகஸ்ய அறிவு (உக்தா) - ஏற்கனவே சொல்லப்பட்டு விட்டது'' என்றார். ''அது என்ன?'' என்ற கேள்விக்கு அவர் ''(தே) - உனக்கு (உபநிஷதம் வாவ அப்ரூம இதி) - அந்த ரகஸ்யத்தைக் கூறிவிட்டேன் (அது) (ப்ராஹ்மீம்) - பிரம்மம் என்ற பரம் பொருளைப் பற்றியத எல்லா அறிவுக்கும் மேம்பட்ட பரம் பொருளைப்பற்றியதுதா ஏற்கனவே நான் கூறிய ரகஸ்யம்'' என்று பதிலுரைத்தா ''ஏற்கனவே சொல்லிவிட்டேன்'' என்று உறுதிப்படுத்துவதா இந்தப் பதில் அமைந்தது.

(கேள்வி) : பரம்பொருளைப்பற்றிய ரகஸ்யத்தை ஏற்கனவே கேட்டிருந்த சீடன், ''ஐயா! அந்த ரகஸ்யத்தைச் சொல்லுங்கள்'' என்று கேட்டானென்றால் அவன் கருத்து என்ன?

அந்த கேள்வி ஏற்கனவே (ஆசிரியரிடமிருந்து) கேட்டிருந்த பொருளைப் பற்றியதாக இருக்குமானால், அது பயனற்றதாகும். ஏனெனில் அரைத்த மாவையே அரைப்பதைப் போல, கூறியது கூறல் என்ற பிழையினால் அது பயனற்ற கேள்வியாகும்.

ஏற்கனவே (ஆசிரியரால்) சொல்லப்பட்டிருந்த ரகஸ்யம் அரைகுறையானது என்று எண்ணப்படுமானால், அந்த (ரகஸ்யத்தின்) பலனைச் சொல்லி முடித்திருப்பது பொருந்தாது. ''இவ்வுலகத்திலிருந்து மீண்டு ஒருவன் இறவாமையை (முக்தியை) அடைகிறான்'' (கேன உபநிஷத் II. 5) என்று அதன் பலனைச் சொல்லியிருப்பது பொருத்தமற்றதாகும். எனவே, ஏற்கனவே கூறப்பட்டுவிட்ட ரகஸ்யம் பூராவும் சொல்லப்பட வில்லை என்ற கருத்தோடு சீடனின் இக்கேள்வி கேட்கப்பட்டது என்றாலும்கூட, அக்கேள்வி பொருத்தமற்றதேயாகும். ஏனெனில் அப்படி ஒரு பகுதியும் மிச்சம் வைக்கப்படவில்லை. இப்படியிருக்க கேள்வியின் நோக்கம் என்ன?

பதில் : முன்னால் கூறப்பட்ட (ஆசிரியரின்) ரகஸ்ய உபதேசம் முற்றும் சொல்லப்படாமல் (அப்படி முற்றுப் பெறுவதற்கு) வேறு ஏதாவதொன்றின் உதவியை எதிர்பார்க்கிறதா? அல்லது அப்படி எதிர்பார்க்கவில்லையா? எதிர்பார்க்கிறது என்றால், ''அத்தகைய வழியைப் பற்றிய ரகஸ்ய உபதேசத்தை எனக்குச் செய்யுங்கள். அல்லது, வேறு ஒன்றையும் எதிர்பார்க்கவில்லை என்றால், பிப்பலாதரைப் போல் (பிரச்ன உபநிஷத், VI. 7), ''இதற்கு மேல் ஒன்றுமில்லை'' என்று அறுதியிட்டுக் கூறிவிடுங்கள்'' (என்பது தான்) சீடனுடைய கேள்வியின் கருத்து. ''இந்த ரகஸ்யத்தை உனக்குக் கூறிவிட்டேன்'' என்ற குருவின் திட்டவட்டமான பதிலும் பொருத்தமாகிறது.

கேள்வி : முடிந்த முடிபாக இது சொல்லப்படவில்லை என்று மறுப்புக் கூற இடமுண்டு. ஏனெனில், ''ஒருமுனைப்பட்ட

தியானம், தவம் (சடங்குகள் முதலியவை அதன் கால்கள்), (கேன உபநிஷத் - IV. 8) என்று மேல்வரப் போகின்ற வாக்கியத் தினால், குரு இன்னும் ஏதோ மேற்கொண்டு சொல்வதற்கு இருக்கிறார் , முடிக்கவில்லை (என்பது தெளிவு).

பதில் : உண்மைதான். இன்னும் ஆசிரியரால் சொல்லப்பட வேண்டியது மிச்சம் இருக்கிறது. ஆனால் அது அவரால் சொல்லப்பட்ட பரம்பொருள் பற்றிய உபதேசம் இன்னும் முற்றுப் பெறவில்லை என்பதனாலோ, அல்லது அந்த உபதேசம் முற்றுப் பெற இன்னும் ஏதோ வேறு ஓர் உதவியை எங்கிருந்தோ எதிர் பார்க்கிறது என்பதாலோ அல்ல.

பின் என்னவெனில், பரம்பொருளைப்பற்றிய மெய் யறிவை அடைவதற்குரிய வழியாக, வேதங்களுக்கும் அவற்றின் அங்கங்களுக்கும் சமமாக அவற்றோடு கூடவே ஒருமுனைப் பட்ட தியானம், (தவம்) முதலியவை சொல்லப்பட்டிருக்கின்றன. (மேலும்) வேதங்களோ, (சிக்ஷை) முதலிய அவற்றின் அங்கங் களோ, பரம்பொருளைப்பற்றிய அறிவின் பகுதிகளாகவோ அல்லது அதற்கு உதவும் உதவிகளாகவோ நேரடியாக அமைந் தனவல்ல.

கேள்வி : (வேதங்களோடும், வேதாங்கங்களோடும்) சேர்ந்தே கூறப்படும் எதற்கும் தக்கபடி, தனித்தனி பலன் இருக்கலாமே? (ஒரு யாகத்தின் முடிவில் வரும் மந்த்ரங்கள் பல்வேறு தேவதை களைக் குறித்த துதியாக இருந்தாலும்) அந்தந்த தேவதைகளுக்கு ஏற்ப பயன்படுத்தப்படுவதுபோல, தவம், தன்னடக்கம், சடங்கு கள், உண்மை முதலியன, பரம்பொருளைப் பற்றிய மெய் யறிவுக்கு அங்கமாகவும் அல்லது (அத்தகைய மெய்யறிவிற்குத்) துணைச் சாதனங்களாகவும் இருக்கலாம். வேதங்கள், அதன் அங்கங்கள், இவற்றின் கருத்துக்களை தெளிவாக்குவதன் மூலம், மெய்யறிவிற்கும் சாதனங்களாக இருக்கும், என்ற இந்தப் பாகு

பாடு பொருத்தமாகிறது. பொருத்தமான பொருள் தரும் வகையினாலும் இது ஏற்புடையது.

பதில் : அன்று; ஏனெனில் இது பகுத்தறிவிற்குப் பொருந்தாது, இப்படிப் பாகுபாடு செய்வது உண்மைகளுக்கு ஒத்துவரவில்லை. ஏனெனில், பரம்பொருளைப்பற்றிய மெய்யறிவானது, செய்கைகள், செய்பவர்கள், பயன்கள் என்ற எல்லா வேற்றுமை எண்ணங்களையும் விலக்குகிறது. ஆகவே, அது முழுமையானது அல்ல என்றும் வேறு ஏதோ ஒன்றை அல்லது துணைச் சாதனத்தை நம்பி இருக்கின்றது என்றும் கூறுவது பொருந்தாது; (அதுபோலவே), பரம்பொருளைப்பற்றிய அறிவும் அதன் பயனாக வரும் முக்தியும், வேறு எல்லாப் பொருட்களையும் விலக்கி, ஆத்மா ஒன்றையே பற்றி நிற்கின்றன. ''முக்தியை விரும்புகின்ற ஒருவன், எல்லாச் செயல்களையும் அவற்றின் சாதனங்களோடு சேர்த்து ஒரேயடியாகத் துறந்துவிட வேண்டும். எல்லாவற்றையும் துறந்தபின்தான் அது அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. அப்படித் துறக்கும் ஒருவனின் ஆத்மாவாகவே மெய்ப்பொருள் இருக்கிறது'' என்ற மூதுரையும் உள்ளது. ஆகவே, மெய்யறிவிற்குச் செயல்களைச் செய்வது சாதனமாகவோ அல்லது துணையாகவோ பொருந்தாது. எனவே, வேள்வியின் முடிவில் ஒரு மொத்தமான துதிப்பாடல் குறிப்பிட்ட தனியொரு தேவதைக்கும் பொருந்தும் என்பது போல, இங்கும் வைத்துக் கொள்ளலாம் என்ற உதாரணம் சரியல்ல.

ஆகையினால் (உபநிஷத்தில் சீடன் கேட்ட) கேள்வியும் (அதற்குக் குரு அளித்த) பதிலும், ஓர் இறுதியான முடிவாகச் சொல்லப்பட்டன என்று கூறுவதுதான் பொருந்தும். அதாவது, அளிக்கப்பட்ட ரகஸ்ய உபதேசம் இவ்வளவுதான். வேறொன்றையும் எதிர்பாராமல் மெய்யறிவைப் பெறுவதற்கு அது போதுமானது.

மந்த்ரம் 8

तस्यै तपो दमः कर्मेति प्रतिष्ठा वेदाः
सर्वाङ्गानि सत्यमायतनम् ॥

தஸ்யை தபோ தம: கர்மேதி ப்ரதிஷ்ட்டா
வேதா: ஸர்வாங்கானி ஸத்யமாயதனம் ॥ *8*

தவம், புலனடக்கம், சமயச்சடங்குகள் முதலியன அதன் ஊன்றுகோல்கள். வேதங்கள் அதன் எல்லா உறுப்புக்களாகும். உண்மை அதன் இருப்பிடம்.

சங்கரரின் உரை

('தஸ்யா:' என்று இருக்கவேண்டும்) நான் உனக்குத் தெரிவித்த பரம்பொருளைப் பற்றிய ரகசிய உபதேசத்தைப் பெறுவதற்குத் தவம் முதலியன வழிகள். (தப:) - உடல், புலன்கள், மனது இவை ஒருமுனைப்படுதல், (தம:) - (புலனின்பங்களிலிருந்து) விடுபடுதல், (கர்ம) - அக்னி ஹோத்ரம் முதலிய கிரியைகள் (இவை சாதனங்கள்), ஏனெனில், மனத் தூய்மை மூலம் தேவையான ஆன்மீகப் பக்குவத்தை அடைந்த ஒருவனிடத்தில்தான் மெய்யறிவு தோன்றுகிறது என்பது கண்கூடு. தன்னுடைய பாவங்களைப் போக்கிக் கொள்ளாத ஒருவனிடத்தில், பரம்பொருளைப் பற்றிய உபதேசம் செய்யப் பட்டாலும், அதை அவனால் புரிந்து கொள்ள முடியாமல் இருப்பதும் அல்லது தவறாகப் புரிந்து கொள்ள நேர்கிறது என்பதும் அநுபவத்தில் தெரிகிறது. இந்த்ரன், விரோசனன் முதலியவர்கள் இதற்கு எடுத்துக் காட்டுக்கள். (சாந்தோக்ய உபநிஷத், VIII - 7.12).

ஆகையினால் வேதங்கள் அளிக்கும் மெய்யறிவானது, இப்பிறவியிலேயோ அல்லது கடந்த பல பிறவிகளிலேயோ, தவம் முதலியவற்றினால் தூய்மைப்படுத்தப்பட்ட மனத்தையு

டைய ஒருவனுக்குத்தான் உதிக்கிறது. இதை வேதமே தெரிவிக் கிறது. ''பேரொளியான (பரம்பொருளைக்குறித்து) யாருக்கு உயர்ந்த பக்தி இருக்கிறதோ, அப்பேரொளியிடம் இருப்பது போன்ற (அதே பக்தி) குருவினிடத்தும் இருக்கிறதோ, அத்தகைய உயர்ந்த மனிதனுக்கு (இந்த உபதேசம்) செய்யப் படும் பொழுது, (அது அவனுக்குத்) தெளிவாக விளங்கு கின்றது''. (சுவேதாச்வதர உபநிஷத், VI, 23) ஸ்மிருதியும் இதை உறுதிப்படுத்துகிறது: ''பாவங்கள் நீங்கின ஒருவனிடத்து, மெய்யறிவு தோன்றுகிறது''. (மஹாபாரதம், சாந்தி பர்வம், 204, 8).

(கேன உபநிஷத்தில்) 'இதி' என்ற சொல், இன்னும் சில வற்றை அறிவுக்குச் சாதனங்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதைக் காண்பிப்பதற்காகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. அதாவது, 'இதி' (இது முதலிய) என்ற சொல்லி னால், மெய்யறிவு தோன்றுவதற்கு உதவும் சாதனங்களாக, ஏற்கனவே சொன்னதோடு கூட, இன்னும் சிலவற்றையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதைக் காண்பிக்கிறது. உதாரணமாக, ''தன்னடக்கம், டாம்பீகம் இல்லாமை'' முதலியன. (கீதை : XIII, 7).

(உடல், புலன், மனது) என்பவை, (ப்ரதிஷ்ட்டா) - ரகஸ்ய உபதேசத்தின் இரு கால்கள், ஊன்றுகோல்கள் போன்றவை. இவை இருக்கும் பொழுது, பரம் பொருளைப் பற்றிய அறிவு உறுதியாகவும் செயலுடையதாகவும் ஆகிறது. ஒரு மனிதன் தன் கால்களைக் கொண்டு (உறுதியாகவும் காரியம் செய்பவனாகவும் இருப்பது போல்). (வேதா) : - வேதங்கள் நான்கு; (ஸர்வாங் கானி) - (சிக்ஷை) உச்சரிப்பு, இனிய உரை போன்ற (வேத) உறுப்புக்கள் ஆறு. இந்த உறுப்புக்கள் வைதிகக் கிரியைகளையும் அறிவையும் விளங்க வைப்பதால் அந்த வேதங்களைக் காப்பதால் ஆறு உறுப்புக்களும் மெய்யறிவின் ஊன்றுகோல்கள்

ஆகும். (அல்லது (ப்ரதிஷ்டா) என்ற சொல், (மெய்யறிவின்) இரண்டு கால்கள் என்று வைத்துக் கொண்டால், வேதங்கள் அதன் (அந்த மெய்யறிவின்) தலை முதலான எல்லா உறுப்புக் களுமாகும்.

இப்படிப் பொருள் கொள்ளும்போது உச்சரிப்பு, பேச்சு முதலிய ஆறு வேத அங்கங்களும் 'வேதங்கள்' என்ற சொல்லாலேயே குறிப்பிடப்பட்டு விடுவதாகத் தெரிந்து கொள்ள வேண்டும். ஏனெனில், முக்கியமான பொருள் சொல்லப்பட்டு விட்ட பொழுது, அதோடு கூடவே, அதன் அங்கங்களும் சொல்லப்பட்டுவிட்டதாகத்தான் ஆகும். ஏனெனில் அங்கங்கள் எதுவும் முக்கியப் பொருளைச் சார்ந்திருப்பவைதான்.

(ஸத்யம் ஆயதனம்) - ஸத்யம் என்பது ஆயதனம், அதாவது மெய்ப்பொருள் குறித்த ரஹஸ்ய உபதேசம் இருக்கும் இடம். 'ஸத்யம்' என்பதற்கு, வாக்கு, மனம், உடல் இவற்றில் வஞ்சனையும் கயமையும் இல்லாதிருத்தல் என்பது பொருள். ஏனெனில், வஞ்சனையும் கயமையும் உள்ளவர்களிடம் உண்மை இராது. ''நேர்மையின்மை, வஞ்சனை, பொய்ம்மை இல்லாதவர் களிடத்தில் (மெய்யறிவு விளங்குகிறது)'' (பிரச்னோபநிஷத் : I - 16) என்று வேதமும் கூறுகிறது. எனவே, ஸத்யம் அல்லது உண்மை, (ரகஸ்ய உபதேசம்) இருக்கும் இருப்பிடமாக எண்ணப் படுகிறது.

தவம் முதலியவற்றோடு, சத்தியமும் மெய்யறிவின் கால் களாக ஏற்கனவே சொல்லப்பட்டுவிட்டாலும், மறுபடியும் இங்கு அது (ரஹஸ்ய உபதேசத்தின்) இருப்பிடமாகச் சொல்லப் பட்டிருப்பதன் காரணம், (மெய்யறிவைப் பெறுவதற் குரிய) வழிகளிலே அது மற்றவற்றைவிட உயர்ந்து நிற்கிறது என்று நினைவுபடுத்தத்தான். ''ஆயிரம் அச்வமேத யாகங்களை ஒரு தட்டிலும் ஸத்யத்தை மற்றொரு தட்டிலும் வைத்து நிறுத்தால் ஒரு ஸத்யமே ஆயிரம் அச்வமேத யாகங்களைவிட எடை மிகுந்து

நிற்கிறது''. (விஷ்ணு ஸ்ம்ருதி, 8) என்று மெய்வழி நூலும் கூறுகிறது.

மந்த்ரம் 9

यो वा एतामेवं वेदापहत्य पाप्मानमनन्ते
स्वर्गे लोके ज्येये प्रतितिष्ठति प्रतितिष्ठति ॥

யோ வா ஏதாமேவம் வேத அபஹ்ருத்ய பாப்மானம் அனந்தே
ஸ்வர்கே லோகே ஜ்யேயே ப்ரதிதிஷ்ட்டதி ப்ரதிதிஷ்ட்டதி ॥ 9

இதி கேனோபநிஷதி சதுர்த்த : கண்ட:

இதை இவ்வாறு (மேற்கூறியவாறு) புரிந்து கொண்டவன், பாவங்கள் நீங்கி, எல்லையற்றதும், ஆனந்தமானதும், எல்லா வற்றிற்கும் மேலானதுமான, பரம்பொருளில் உறுதியாக நிலைத்து நிற்கிறான்; உறுதியாக நிலைத்து நிற்கிறான்.

சங்கரரின் உரை

(யோ வை) - எவனொருவன் (ஏதாம்) - இந்தப் பொருளை, புனிதமான இந்தப் பரம் பொருளை இவ்வாறு (மேற்கூறியபடி) (வேத) - அறிகிறானோ, ''எவரால் ஏவப் பட்டு'' (கேனோபநிஷத், I - 1) என்று தொடங்கும் வேத வாக்கியத்தினால் ஏற்கனவே ஏது சொல்லப்பட்டதோ, எந்தப் பரம் பொருள் ''தேவர்களின் பொருட்டு'' (கேனோபநிஷத் III - 1) என்று தொடங்கும் வேதவாக்கினால் துதிக்கப்பட்டதோ, எது ''எல்லா அறிவிற்கும் அடித்தளம்'' (முண்டக உபநிஷத், I - 1.1) (என்று கூறப்பட்டதோ), அத்தகைய பரம்பொருளை எவன் உணர்கிறானோ, பரம்பொருளைப்பற்றிய அறிவின் பயனை ''ஒருவன் இறவாத (முக்தி) நிலையை அடைகிறான்'' (கேனோபநிஷத், II - 4) என்று எடுத்துக்காட்டி (மறுபடியும்) முடிவாக அது கூறப்பட்டிருப்பது, முறையாக நிறைவு செய்

வதற்காகத் தான். (அப்படி உணர்ந்தவன்), (அபஹத்ய பாப்மானம்) - பாவத்தை நீக்கி, அறியாமை, ஆசை, செயல்கள் இவற்றினால் ஆன உலக வாழ்க்கையின் வித்துக்களை உதறி எறிந்துவிட்டு, (அந்த) - முடிவேயில்லாத (ஸ்வர்கே லோகே) - ஆனந்தமே வடிவமான பரம்பொருளில், (ப்ரதிதிஷ்ட்டதி) - உறுதியாக நிலைபெற்றிருக்கிறான். (அந்த) - 'எல்லையில்லாத' என்னும் அடைமொழி சேர்க்கப்பட்டதால், ஸ்வர்க - என்னும் சொல் இங்கு தேவருலகத்தைக் குறிக்காது. 'எல்லையற்றது' என்னும் சொல் (அதன் நேரடியான பொருளைவிட்டு) வேறெதையேனும் குறிப்பினால் உணர்த்துவதாகக்கூட எடுத்துக் கொள்ளக்கூடாது என்னும் மரபை ஒட்டி, வேதவாக்கியம் (ஜ்யேயே) - 'மேலான' என்று ஒரு சொல்லைச் சேர்த்துக் கூறுகிறது. எல்லாவற்றையும்விட மேலான ஆத்மா என்பது இங்கு நேரடியாகவே ஆத்மா என்று சொல்லப்படுகிறது. அந்த ஆத்மாவில் நிலைத்திருப்பதனால் மறுபடியும் அவன் பிறவி எடுப்பதில்லை என்பது கருத்து.

கேனோபநிஷத்தின் நான்காவது கண்டம் முற்றிற்று.

கேனோபநிஷத்திற்குச் சங்கரர் செய்த பதபாஷ்யம் (சொல்விளக்கம்) முற்றிற்று.

கேனோபநிஷத்

சங்கரரின் வாக்கிய - உரை (வாக்ய-பாஷ்யம்)

முதற்கண்டம்

(இதுவரை) செய்கையை அடிப்படையாகக் கொண்ட பிராண-விக்ஞானம் அல்லது உயிர்க்காற்று (என்ற சக்தியின்) உபாஸனையும், பல வகையான சமயச் சடங்குகளும் சொல்லி முடிக்கப்பட்டன. இவற்றைத் தனித்தனியாகவோ சேர்த்தோ செய்வதால் (மரணத்திற்குப் பின்) தெற்குத்திசை வழியாகவும், வடக்குத் திசை வழியாகவும் (உயிர்) செல்வதும், திரும்ப மண்ணுலகிற்கு வருவதும், அப்படி வராமல் (மேலே உயர்ந்த லோகங்களுக்குச்) செல்வதும் முறையே ஏற்படுகின்றன.

இதற்கு மேலே, பலனில் ஆசை வைக்காமல், தெய்வ உபாஸனையையும் சமயக் கிரியைகளையும் சேர்த்தே செய்வதால் உயிர் பக்குவத்தைப் பெற்று, மெய்யறிவு வருவதற்குத் தடை எல்லாம் நீங்கி, பலவகையாக வேற்றுமைப்பட்டுக் காணும் (உலகப்) பொருட்களில் உள்ள குற்றங்களை நன்கு உணர்ந்து, வெளியுலகப் பொருட்களை அடியோடு ஒதுக்கி, (பிறப்பு இறப்பாகிற) உலக வாழ்க்கைக்கு வித்தான அறியாமையைப் போக்கி (அதற்கு வேண்டிய) மெய்யறிவைப் பெற விரும்பியவர்க்கு ''கேனேஷிதம்'' (யாரால் ஏவப்பட்டு) என்று தொடங்கி மெய்ப்பொருளின் இயல்பைப் பற்றிய அறிவு ஏற்படும் பொருட்டு, இந்த அத்தியாயம் தொடங்கப்படுகிறது. அதன் மூலம்தான், மரணத்தின் இடமான அறியாமை அழிக்கப்பட வேண்டும். ஏனெனில், அதைச் சார்ந்தல்லவா பிறப்பு இறப்புக்கள் உண்டாகின்றன? (ஆத்மா என்ற) மெய்ப்பொருள் இதுவரை தெரிந்து கொள்ளப்படாததால் அதைத் தெரிந்து கொள்வதற்காக அது பற்றி அறிய ஆசை உண்டாவது பொருத்தமானதே.

(இந்த உபநிஷத்தில்) (வைதிக) காரியங்களைப் பற்றிச் சொல்லப்படவில்லை. (காரியங்களுக்கு அது) எதிரியாய் இருப்பதால், தெரிந்து கொள்ளப்படவேண்டிய இந்த (ஆத்ம) மெய்ப்பொருளைச் (சொல்லுமிடத்தில்) காரியங்களை செய்வது குறித்துப் பேசப்படவில்லை.

ஏனென்றால், மெய்ப்பொருளை உள்ளது உள்ளபடி தெரிந்து கொள்ளும் அறிவு, செய்கைக்கு முரணானது. தனக்கு மேலொன்றில்லாத (பிரம்மம்) என்ற பரம்பொருளேதான் அல்லவா (நம் ஒவ்வொருவருடைய) ஆத்மா? அதைத் தெரியப் படுத்தும் நோக்கத்தோடு வேதம் ''அதையே பரம்பொருளாக நீ தெரிந்து கொள். எந்த ஒன்றை (இந்தப் பாமர மக்கள்) உபாஸிக்கிறார்களோ அதையன்று'' (கேனோபநிஷத், I - 4) என்பது முதலான வாக்குகளால் பேசுகிறது.

தன்னுடைய சொந்த நாட்டில் (அரசனாகப்) பட்டாபி ஷேகம் செய்யப்பட்டு தலைவன் ஆகிவிட்ட ஒருவன் வேறு யாரையும் வணங்க விரும்பமாட்டான் அல்லவா? அதனால், ''நான் பரம்பொருளாக இருக்கின்றேன்'' என்று தெளிந்த ஒருவன் (வேறு) எந்தக் காரியத்தையும் செய்விக்க விரும்ப மாட்டான். தன்னை பரம்பொருளாக எண்ணுகின்றவன், காரியங் களில் பலனேதும் இருப்பதாகப் பார்க்க மாட்டான். பயனில்லாத காரியமோ கிடையாது. அதனால், மெய்யறிவு காரியத்திற்கு முரணானது. எனவே, (உபநிஷத்தில்) காரியத்தைக் குறித்த பேச்சு இடம் பெறவில்லை. தெரிந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பத்திற்கு, மெய்யறிவு ஒன்றுதான் குறிக்கோளாக இருக் கிறது.

(அப்படியானால்) ஒரு காரியமும் செய்யவே வேண்டாமா என்று கேட்டால், (அப்படி) இல்லை. (பலனில்) ஆசை வைக்காமல் (செய்யும் காரியங்களில்) ஒருவன் தன்னைத் தூய்மைப்படுத்திக் கொள்ளும் பொருட்டு ஈடுபடலாம்.

கேள்வி : (மெய்ப்பொருளான) தன்னைப்பற்றிய உண்மையறிவு தன்னைப்பற்றிய அறியாமையை (நீக்கிக் கொள்வதைத் தன்) இலக்காகக் கொண்டிருப்பதால், காரியங்களைச் செய்யாமல் விட்டு விடுவதுதான் பொருத்தமானது. அதனால்தான் ''சேற்றைப் பூசிக் கொண்டு பின் அதைக் கழுவுவதைவிட, தூரத்திலிருந்தே அதைத் தொடாமலிருந்துவிடுவது மேல்'' (மஹாபாரதம், வனபர்வம், 2 - 49) என்று கூறப்படுகிறது. எனவே, காரியங் களைத் தொடங்காமலிருப்பதே மேல்.

(அவற்றின்) பலன் மிகச் சிறியதாக இருப்பதாலும், (அவற்றைச் செய்வதில்) நிறைய சிரமம் இருப்பதாலும், மெய்யறிவினாலேதான் முக்தி நிலை வருகிறது. (காரியங் களினால் அல்ல) என்பதாலும் (அக்காரியங்களைச் செய்யா மலே ஒதுங்கி விடுவது தான் நல்லது).

பதில் : உண்மைதான்; அற்பப் பலனுள்ளதாக இருப்பது முதலிய குற்றங்களின் நெடியுள்ளதும், அறியாமைக்கு பொருளா யிருப்பதுமான செயல்பாடுகள், ஆசைகளோடு கூடியவனுக்குத் தானே தவிர, ஆசைகள் அற்றவனுக்கன்று. ''எவன் இச்சைக் குரிய இன்பங்களை விரும்புகிறானோ'' (முண்டக உபநிஷத், III, 2.21), ''இவ்வாறு ஆசைப்படுகின்றவனும்'' என்பது முதலிய வேதவாக்குகள் (இதைத்தான் சொல்லுகின்றன).

ஆசைகள் உள்ள ஒருவனுக்குக் காரியங்கள் (உள்ளத்) தூய்மையுண்டாவதற்குத்தான் உதவுகின்றன. அவையும் ஆசை களை நீக்கும் உபாஸனையுடன் கூடிச் செய்யப்பட வேண்டும். ''தேவதைகளை உபாஸிப்பவனைவிட ஆத்மாவை (மெய்ப் பொருளை) உபாஸிப்பவன் மேலானவன்'' என்று தொடங்கி, ''இதனால் எனது அங்கம் தூய்மைப்படுத்தப்படுகிறது'' என்று, தூய்மை பெறுவதற்காகத்தான் காரியங்கள் செய்கிறான் என்று வாஜஸனேயகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. 'ஐந்து பெரும் வேள்விகளினாலும், (மற்ற) வேள்விகளினாலும் தெய்வ

மயமான உடலைப் பெறுகிறான். (பரம்பொருளைப்பற்றிய அறிவிற்குத் தகுதியைப் பெறுகிறான்)'' (மனுவின் அறநூல், II, 28), ''வேள்வி, கொடை, தவம் இவை அறிவுடையவர்களுக்குத் தூய்மை தருவன' (பகவத்கீதை, XVIII, 5) என்பது முதலிய மறை வழிநூல்களும் (கூறுகின்றன). உயிர்க்காற்று (பிராணன்) முதலிய உபாஸனைகளும் தனியாகவோ, அல்லது சடங்கு களோடு சேர்த்தோ செய்யப்படும் பொழுது, அவை (பலனில்) ஆசையோடு கூடினவனுக்கு, பிராண (உயிர்க்காற்று) தேவதை முதலிய வற்றின் தன்மையை அடைவதற்குத்தான் உதவுகின்றன. பலனைக் குறித்து ஆசைப்படாதவனுக்கோ, அவை பரம் பொருளைப் பற்றிய மெய்யறிவிற்குத் தடையை நீக்குவதன் பொருட்டேயாகும்.

மெய்யறிவு பெற்றவனுக்கோ, காரியங்கள் செய்வது என்பது கிடையாது. (அவனுக்கு) அதில் பலன் ஏதுமில்லை என்பதுதான் காரணம். ''காரியங்களினால் உயிர் கட்டப்படு கிறது; மெய்யறிவினால் விடுவிக்கப்படுகிறது. அதனால், துறவிகள், உண்மையின் எல்லையைக் கண்டவர்கள், எந்தக் காரியமும் செய்வதில்லை'' (மகாபாரதம், சாந்திபர்வம், 242-7) (என்று கூறப்பட்டிருக்கிறது). ''முதலில் காரியங்களைச் செய்யும் வழி, (அதையடுத்து துறவுவழி. இவற்றுள், துறவே மேலோங்கி நின்றது'' என்றும், ''துறவினால் சிலர்'' (கைவல்ய உபநிஷத், I - 2) என்றும், ''(துறவைத் தவிர முக்திக்கு) வேறு வழி காணப் படவில்லை'' (ச்வேதாச்வதர உபநிஷத், III - 8) என்றும் கூறும் வேதவாக்குகளினாலும் (இது உறுதியாகிறது).

(இப்படிக் கூறுவது) பொது அறிவிற்கும் பொருந்துகிறது. காரியங்கள் (ஒருவனைத்) தூய்மைப்படுத்துவதன் மூலம் மெய் யறிவு உண்டாவதற்கு உதவியாகின்றன. மெய்யறிவினாலோ இறவாமை என்ற முக்தி நிலை அடையப்படுகிறது. ''இறவா மையை அன்றோ அடைகின்றான்'' (கேனோபநிஷத், II - 4), ''மெய்யறிவினால் இறவாமையை அடைகின்றான்'' (கேனோப

நிஷத் II - 4) என்பது முதலிய வேதவாக்குகளும் அதன் வழி வந்த நூல்களும் இதற்குச் சான்றாகும். ஆற்றின் அக்கரையை அடைந்தவன், படகை விடாமல் வைத்துக் கொள்வது உண்டா? அவனுக்குத் தன் விருப்பப்படி. எங்கும் செல்லுவதற்குச் சுதந்திரம் இருக்கிறதே!

தன் சொந்தமான இயல்பிலேயே இருக்கின்ற ஒரு பொருளைச் சாதனங்களினால் நிறுவ ஒருவன் விரும்புவானா? ஆத்மா என்ற மெய்ப்பொருளோ, தன் இயற்கையினாலேயே நிலைபெற்று இருப்பது. இந்தக் காரணத்தினாலேயே, அதைச் சென்று அடைவது என்பதும் இல்லை. சொந்தத் தன்மையாக ஆத்மா இருப்பதால், அது என்றுமே(ஒருவனால்) அடையப் பட்டதாகவே இருக்கிறது. அதை மாற்றி அமைப்பது என்பதும் முடியாது. (சொந்த) ஆத்மாவாக இருப்பதால் அது நித்ய மாகவும், மாறுதலடையாததாகவும், அறியப்படும் பொருளாக இல்லாமலும், உருவம் இல்லாததாகவும் (இருப்பதுதான் காரணம்).

''காரியங்களினால் அது வளர்வதில்லை'' (பிருஹ தாரண்யக உபநிஷத், IV - 4.23) முதலிய வேதவாக்குகளினாலும் (இது உறுதிப்படுகிறது). (வழி நூல்களாலும்) ஸ்மிருதிகளி னாலும் ''இது மாறுதலில்லாதது'' என்று கூறப்படுகிறது (கீதை II-25). சுத்தப்படுத்தும் தேவையும் ஆத்மாவுக்குக் கிடையாது. ''தூயது, பாவமில்லாதது'' (ஈசாவாஸ்ய உபநிஷத், 8) என்று வேதவாக்கு இருப்பதாலும், (ஆத்மா என்ற மெய்ப் பொருளைத் தவிர) வேறு ஒன்றும் கிடையாது என்பதாலும் தூய்மைப் படுத்தப்பட வேண்டிய தேவை ஆத்மாவிற்கு இல்லை. ஏதேனும் ஒரு பொருள் (அதைவிட) வேறொன்றினால் சுத்தப்படுத்தப் படுகிறது. ஆத்மாவிற்கு அதைவிட வேறானதொரு பொருளும் இல்லை. ஆத்மாவிற்கு தன்னைத் தானே சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவையும் இல்லை. (தனக்கு வேறான) இன்னொரு பொருளை எடுத்துக் கொள்வதோ, அந்த வேறு பொருளை

நிலையாக அடைந்து நிற்பதோ அதற்கு இருக்க முடியாது. முக்தியோ என்றுமுள்ளது. எனவே, மெய்யறிவு பெற்றவனுக்கு, காரியம் செய்வது என்பது பொருந்தாது. ஆதலால், (தன்னைத் தவிர) வேறான புறப்பொருள்களிலிருந்து மனத்தைத் திருப்பிக் கொண்டவனுக்கு, ஆத்ம ஞானத்தைப் (மெய்யறிவைப்) புகட்டு வதன் பொருட்டு, ''கேனேஷிதம்'' (''எவரால் ஆணையிடப் பட்டு'' என்று கேன உபநிஷத்) தொடங்குகிறது.

மந்த்ரம் 1

(சடப்பொருட்களான மனம் முதலியன) வேலை செய்வது கண்கூடாதலால், அதைப்பற்றியதொரு சிறப்பான அறிவைப் பெறும் பொருட்டு கேள்வி (எழுந்தது) பொருத்தமானதே. அறிவுள்ள மனிதரால் செலுத்தப்படும் தேர் முதலிய (உயிரற்ற) பொருட்களுக்குச் (நகருவது முதலிய) செயல் ஏற்படுவதும் கண்கூடு. அவ்வாறு ஓர் அறிவு பொருந்திய மனிதனால் செலுத்தப்படாதவற்றில் (நகருவது முதலிய) (செயல் இல்லை). மனம் முதலிய உயிரற்ற பொருட்களில் செயல் காணப்படுகிறது என்றால், அதுவே, (மனம் முதலியவற்றை) நடத்தும் அறிவுச் சக்தி ஒன்று இருப்பதற்கு அடையாளமல்லவா! மனம் முதலியன ஒழுங்காக வேலை செய்கின்றன. அவற்றை ஏவி நடத்தும் அறிவுள்ள சக்தி ஒன்று இல்லாவிட்டால், (இவற்றின் இந்த ஒழுங்கான வேலை) பொருந்தாது. ஆனால், அத்தகைய அறிவுச் சக்தியைப் பற்றிச் சிறப்பாகத் தெரியாமையாலும், ஏதோ பொத்தாம் பொதுவாக மட்டுமே அந்த அறிவுச் சக்தி புலப் படுவதாலும், சிறப்பாகத் தெரிந்து கொள்ளும் நோக்கத்தோடு கேட்கப்பட்ட (இந்தக்) கேள்வி பொருத்தமானதே.

(கேனேஷிதம்) - எவருடைய விருப்பத்தினால், எவருடைய இச்சையினால் மட்டுமே மனது, (பததி) - தனக் குரிய பொருளைக் குறித்துச் செல்கிறதோ, ஒழுங்காகச் செயல் படுகிறதோ என்று இதற்குப் பொருள். 'எதைக் (கருவியாகக்

கொண்டு) ஒருவன் சிந்திக்கிறானோ அது மனம். அது அறிவுக்குக் காரணமான உட்கருவி. (அந்த மனம்) 'ஏவப்பட்டது போல' என்று உவமைப் பொருளாகக் கொள்ள வேண்டும். 'இஷிதம்' 'ப்ரேஷிதம்' என்ற சொற்களுக்கு இங்கு நேரடியாக அப்படியே பொருள் வராது.

(ஓர் ஆசிரியன்) தனது சீடர்களைக் (காரியத்தில் ஏவுவது) போல, ஆத்மா, மனம் முதலியவற்றைத் தத்தம் பொருளைக் குறித்து ஏவுவதில்லையன்றோ! அழியாத அறிவை தனது இயல்பாகக் கொண்ட ஆத்மா அந்த (மனம் முதலியவை செய்யும்) காரியங்களுக்கு நிமித்தமாக மட்டுமே இருக்கிறது. சகோரப் பறவை நிமித்தமாக இருப்பது போல. (ஓர் அரசன் உணவு அருந்துவதற்கு முன்னால், சகோரப் பறவைக்கு இட்டு உணவில் விஷம் கலந்திருக்கிறதா என்று சோதனை செய்வார்கள். அந்தப் பறவைக்கு ஒன்றும் நேரவில்லை என்றால் உணவில் விஷம் இல்லை என்று அரசன் துணிந்து உணவு அருந்துவான். அரசனை உணவருந்தும்படி யாரும் நேரடியாகத் தூண்டுவதில்லை. உணவை அருந்தலாம் என்று அரசன் முடிவு எடுக்கும்படி செய்வதோடு சரி. அதாவது, சகோரப்பறவை அரசன் உணவு அருந்துவதற்கு வெறும் நிமித்தம் மட்டுமே.) அதுபோல இங்கும் வைத்துக் கொள்ள வேண்டும். சகோரப் பறவை போல ஆத்மாவும் காரியங்களுக்கு நிமித்தமாக மட்டும் இருக்கிறது. அது ஏவுதல் முதலிய காரியங்களைத் தானே தூண்டுவதில்லை. அதன் முன்னிலையில், மனம் முதலிய மற்றைய கருவிகள் தாமாகவே வேலை செய்கின்றன.

பிராணன் (உயிர்க்காற்று) நாசியில் தங்கியிருப்பது. உயிர்க்காற்று பற்றிப் பேசும் இடம் இது. அசையும் செய லெல்லாம் பிராணன் என்ற (உயிர்க்காற்றின்) காரணமாக நிகழ்வ தால், அதற்கு முதன்மை ஏற்பட்டிருக்கிறது. அது இயல்பாகவே பொருட்களை தோன்றமட்டும் செய்கிறது. உடனே (மனம்

முதலிய) கருவிகள் (அவற்றை நோக்கிச்) செயல்படுகின்றன. மனம் முதலியவற்றில் ஏற்படும் தொழில் எல்லாம் உயிர்க் காற்றினுடையதாகும். அதனால் முதன்மை இடம் உயிர்க் காற்றிற்குத்தான். பேச்சு எந்தக் காரணத்தினால் உண்டாகிறது? உயிரினங்களின் கண்களுக்கும், காதுகளுக்கும் எந்தத் தேவன் நடத்துபவனாக இருக்கிறான்? செயற்கருவிகளுக்கு ஆணையாள னாக இருக்கும் அறிவுடையொருவன் எவனோ அவன் எத்தகைய சிறப்புக் குணமுடையவன் என்பது இங்கு பேசப்படும் பொருள்,

மந்த்ரம் 2

(ச்ரோத்ரஸ்ய ச்ரோத்ரம்) - (காதுக்குக் காது) என்பது முதலிய (ஆசிரியரின்) பதில்கள், குணங்குறிகளற்ற (நிர்க்குணப்) பரம்பொருள், தான் ஒன்றும் செய்யாமல், பிறவற்றைச் செயலுக்கு நிமித்த காரணம் என்பதை உணர்த்துவதன் பொருட்டுச் (சொல்லப்பட்டது). மாறுதல் முதலிய ஒன்றும் இல்லாததும், வேற்றுமைகளற்றதுமான பரம்பொருள் மனம் முதலியவற்றின் செயலுக்கு நிமித்த காரணமாயிருத்தல் என்பதுதான், ''காதிற்குத் காது'' என்பது முதலிய (ஆசிரியர்) பதிலுக்குப் பொருள். காரணம், பேசப்படுகின்ற விஷயத்தின் தொடர்ச்சியாக இது வருகிறது. அந்தக் கருத்தை ஒட்டித்தான் இங்கு உபநிஷத்தின் சொற்கள் தொடர்கின்றன.

எப்படி? (ச்ருணோதி) இதன் உதவியால் கேட்கிறா என்பதால் அது 'ச்ரோத்ரம்' (செவி) எனப்படுகிறது. ஒலிை வாங்கி உணர்த்துவதே அதனுடைய செவித்தன்மை. அவ்வாறு ஒலியை உணர்த்தும் தன்மை காரணமாக, ஒலியைப் புலப் படுத்தும் அதன் இயல்பு அதனுடைய சொந்தமான (ஆற்றலன்று) செவி அறிவற்றது; ஆத்மாவோ அறிவு வடிவமானது. எனவே அது ஆத்மாவின் ஆற்றலேயாகும்.

செவிப்புலனுக்குக் கேட்கும் ஆற்றலும் (ஒலியை) விளக்கும் தன்மையும் இருப்பதற்கு, ஆத்மா காரணமாக இருக்கிறது என்பதால் ''செவிக்கும் செவி'' என்று அது சொல்லப்படுகிறது. அடக்கி ஆள்வதால் ஓர் அரசன் க்ஷத்ரியன் என்று சொல்லப்படுகிறான். வெந்நீரின் சூடு நெருப்பின் காரணமாக ஏற்படுவதனால், .நீரைச் சூடேற்றும் நெருப்பே சுடுகிறது என்றும் சொல்லப்படுகிறது. நீரும் நெருப்பின் தொடர்பால் நெருப்பு என்றே சொல்லப்படுகிறது. இதைப் போல ஆத்மாவின் சேர்க்கையால் அறியுஞ் சக்தி பெறும் கருவிகள்தான் செவிப்புலன் முதலியவை. செவிப்புலனுடைய அந்தச் சக்தி தாற்காலிகமானது; நீருக்குச் சுடும் சக்தி எப்படித் தாற்காலிகமானதோ அதுபோல. நெருப்பிற்குச் சுடும் சக்தி (எப்பொழுதும்) இருப்பது போல, அறியும் சக்தி எப்பொழுதும் இயல்பாகவே இருக்கிற (ஆத்மா) நித்தியமான அறிவுச் சக்தியாகவே இருக்கும் அந்தக் காரணத்தால், அது ''அறிபவன்'' என்றே சொல்லப்படுகிறது. (நீரின் சூட்டிற்குக் காரணமான) நெருப்புக்குத்தான் சுடும் சக்தி இயல்பாக உள்ளது என்பதுபோல. செவி முதலியவைகளில், கேட்கும் தன்மை முதலிய அறிவு தாற்காலிகமானது; ஆத்மாவிடத்திலேயோ அது நித்தியமானது. அதனால் ''செவிக்குச் செவியாகும்'' என்ற (உபநிஷத்தின்) சொற்கள் பொருள் செறிந்தவை. இதனால், வேற்றுமைகளற்றதும் அறிவே வடிவமானதுமான ஆத்மாவிற்கு, மனம் முதலியவற்றின் செய்கைகளுக்குக் காரணமாயிருக்கும் தன்மை பொருத்தமாகிறது. மனம் முதலியவற்றிற்கோ, முன்னர் எடுத்துக் காட்டியபடி, (அறியும் சக்தி நிரந்தரமானதல்ல, தாற்காலிகமானது).

அந்தப் (பரம்பொருள்) வாக்குக்கும் வாக்காகும். (''வாசோ ஹ வாசம்''); உயிருக்கு உயிராகும் (ப்ராணஸ்ய ப்ராண:'') என்று முறையே (வாசம்) என்று இரண்டாம் வேற்றுமையிலும், 'ப்ராண:' என்று முதல் வேற்றுமையிலும் இங்கு கூறப்பட்டிருந்தாலும், ''வாசம்'' என்பதை ''வாக்'' என்று

முதல் வேற்றுமையாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். இது போலவே எங்கும் காண்க. எப்படி? மெய்ப்பொருள் எத்தகை யது என்று கேட்கப்பட்டதால், பதிலும் முதல் வேற்றுமையில் தான் இருக்கவேண்டும். அத்தகைய மெய்ப்பொருள் எல்லாச் செயல்களுக்கும் காரணமாக அறியப்படுவதால், அது வாக்கிற் கும் ''வாக்கை'' என்று இரண்டாவது வேற்றுமையில் வரும். எனவே, ''வாசோ ஹ வாசம்'', ''ப்ராணஸ்ய ப்ராண:'' என்பது போல எல்லா இடங்களிலும் வாக்கிற்கும் வாக்கான பரம் பொருளை என்று அது இரண்டாம் வேற்றுமையிலும், உயிருக்கும் உயிர் என்று முதல் வேற்றுமையிலும் சொற்கள் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன.

செவி முதலிய புலன்கள் தத்தம் பொருட்களை அறிவதற்குக் காரணமானதும், ''செவிக்குச் செவி'' என்பது முதலிய தன்மையுடையதும், எப்போதும் அறிவு வடிவமானதும், வேற்றுமைகளற்றதுமான இந்த ஆத்மா என்ற மெய்ப்பொருளைத் தெரிந்து கொள்வதன்மூலம் அறியாமையினால் ஏற்படுவதும், பொய்யாகக் கற்பிக்கப்பட்டதும், புத்தி முதலிய அடையாளங் களைக் கொண்டதுமான பிறவிச் சுழலிலிருந்து விடுதலையைப் பெற்று, (தீரா:) மெய்யறிவு உடையவர்கள் (ப்ரேத்ய) இந்த உலகத்திலிருந்தும் உடலிலிருந்தும் விடுபட்டு (அதன்) தொடர்பைவிட்டுத் தாண்டி, இறவாமையை (முக்தியை) அடை கிறார்கள். இன்னொரு பிறவி எடுப்பதற்குக் காரணமொன்றும் இல்லாததால், (மறுபடி பிறக்காமல் முக்தி அடைகிறார்கள்).

அறியாமை இருக்கும்பொழுதுதான், கர்மவினைகள் மறுபடி இன்னொரு உடலோடு (உயிரைச்) சேர்த்து வைக்கின்றன. மெய்யறிவு பெற்றுவிட்ட போதோ, எல்லா வினைகளுக்கும் காரணமான அறியாமை, (அதன்) எதிரியான மெய்யறிவு என்ற நெருப்பினால் எரிக்கப்பட்டுவிடுவதால், செயல் செய்வது (அவர்களுக்கு) இல்லாமற்போய், இறவாதவர் களாக (முக்தர்களாக) ஆகிறார்கள். உடல் (எடுப்பது) முதலிய

தொடர்ச் சங்கிலி அறுபடாமல் மறுபடி பிறவி எடுப்பதை வைத்துப் பொய்யாகக் கற்பிக்கப்பட்ட மரணம் அவர்களுக்கு இப்போது இல்லாது நீங்கி விடுவதால், என்றுமுள்ள ஆத்மாவை தன் சொந்த வடிவமாகக் கொண்டு, முன்னமே விடுதலை பெற்றவர்களாக இருந்தபோதிலும், மறுபடி விடுதலை பெறுகிறார்கள் என்று உபசாரமாக (ஒரு பேச்சுக்காக) சொல்லப்படுகிறது.

மந்த்ரம் 3

''அங்கு கண் பார்வை செல்வதில்லை'' என்று இங்கு சீடனுக்குச் சொல்லப்படுவதன் காரணம், அதை இன்னும் ஆய்ந்து மறுப்புச் சொல்வதற்கு அவனுக்கு வாய்ப்புக் கொடுப் பதற்குத்தான். ஏற்கனவே (ச்ரோத்ரஸ்ய ச்ரோத்ரம்) - ''செவிக்குச் செவியான'' (பரம்பொருள்) என்று மெய்ப் பொருள் பற்றிய உண்மை சொல்லப்பட்டிருந்த போதிலும், பேசப்படும் பொருள் மிக நுட்பமாயிருக்கின்ற காரணம்பற்றி புரிந்து கொள்ள முடியாமலிருப்பதால், சீடன் மறுபடி மறுபடி கேள்வி கேட்க விரும்புவதற்குக் காரணத்தை உண்டுபண்ணிக் கொடுக்கிறது வேதம். ''அங்கு கண்பார்வை செல்வதில்லை'' என்று சொன்னதால் செவி முதலியவற்றிற்கு ஆத்மாவாக இருக்கும் பரம்பொருளைப்பற்றிய அறிவைக் கண் முதலியவை களும் கொடுக்க இயலாது. வாக்கு, கண் முதலியவை மட்டும் இங்கு சொல்லப்பட்டாலும் எல்லாப் புலன்களையும் இங்கு சேர்த்துக் கொள்ள வேண்டும். அப்படியானால், கண் முதலிய ஒரு புலனும் மெய்ப்பொருளை அறியமுடியாதென்றால், மனத்தால் அந்த (மெய்ப்பொருள்) அறியப் படட்டுமே என்று கேட்டால், அதற்குப் பதில் சொல்லப்படுகிறது. ''மனமும் (அதை அறியமுடியாது).'' அந்த மெய்ப்பொருள், மகிழ்ச்சி முதலியவை போல மனத்திற்குப் புரியும் பொருளன்று; புலன்களுக்கு அது எட்டாத பொருளாக இருப்பதே அதற்குக் காரணம். புலன்களும்

மனதும் சேர்ந்தே பொருட்களை அறிகின்றன. எனவே புலன் களுக்கெட்டாத பரம்பொருள் மனதுக்கும் எட்டாது. மேலும், புலன்களுக்கு ஆத்மாவாக இருக்கும் பரம்பொருள் மனதிற்கும் ஆத்மாதான். எனவே மனதுக்கும் மூல காரணமாக இருக்கும் அந்த ஆத்மாவை மனம் அறிய முடியாமலிருப்பது இயற்கையே.

(ந வித்மோ ந விஜானீம:) பரம்பொருளை ''நாம் அறிய வில்லை; உணரவில்லை'' (கேனோபநிஷத் - 3). (இதன் பொருள் வருமாறு:) இந்தப் பரம்பொருள் மனம் முதலிய அறிவுக் கருவிகளின் கூட்டத்தை ஏவுகிறது; வேலை செய்ய வைக்கிறது. அவற்றின் செயலுக்குக் காரணமாகிறது. எனவே (அந்தப் பரம்பொருளை) மனத்தின் மூலமாக அறியமுடிவ தில்லை. ஆத்மா மனத்தினால் அறியப்படும் ஒரு பொருளாக இல்லாததுதான் இதற்குக் காரணம்.

அல்லது, ''செவி முதலியவற்றின் கேட்குந்தன்மை முதலி யவை உண்மையில் பரம்பொருளின் ஆற்றலாகும் என்பதை விளக்க வேண்டும்'' என்று சீடனால் கேட்கப்பட்ட ஆசிரியர் ''அப்படிக் காட்ட இயலாது'' என்று சொன்னார். ஏன்? ''அங்கு கண் பார்வை செல்லாது'' என்றெல்லாம் முன் சொன்னபடியே அதன் காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். இங்கு வேறு என்ன சிறப்பாகச் சொல்லப்பட்டது என்றால், ''இத்தகைய (பரம்பொருளைப்) பற்றி இன்னொருவருக்கு எப்படி உபதேசிக்க முடியும்?'' என்பதுதான். இந்தப் பரம்பொருளை ஓர் ஆசிரியர் தன்னை விட வேறான மாணவர்களுக்கு எப்படி உபதேசிக்க முடியும்? முடியாது என்பது கருத்து.

மந்த்ரம் 4

''எப்படியேனும் பரம்பொருளை உபதேசிப்பீராக'' என்று சீடனால் வேண்டிக்கொள்ளப்பட்ட ஆசிரியர்: ''அது தெரிந்ததை விட வேறானது; மேலும், தெரியாததைவிடவும் மேலானது''

என்று தெரிந்ததைவிடவும் தெரியாததை விடவும் வேறானது என்ற வழிவழிவந்த வேத உண்மையைச் சொன்னார். எவன் ஒருவன் அறிகின்றவனோ, அவனே பரம்பொருள்; எல்லாமாக அது இருப்பதால், எல்லாவற்றிற்கும் ஆத்மாவான அறிபவனைத் தவிர வேறு இரண்டாவது அறிபவன் இல்லை என்பதால், அறியப்பட்டதைவிட அந்த (அறியும் பரம்பொருள்) வேறானது. ''அறியப்படும் பொருட்களையெல்லாம் அவன் (பரம்பொருள்) அறிகிறான்; அவனை அறிபவன் யாரும் இல்லை'' (ச்வேதாச்வதர உபநிஷத், III - 19) என்று வேதவாக்கு இருப்பதும், ''அப்படி அறிபவனை எதைக் கொண்டு அறிய முடியும்?'' (பிருஹதாரண்யக உபநிஷத், II - 4.14) என்று வாஜஸனேயக உபநிஷத் கூறுவதும் (இதற்கு ஆதாரம்). மேலும், தெரிந்தது எதுவும் நன்றாக வெளிப்படையாக இருக்கிறது. அதனால், பரம்பொருள் அதைவிட வேறானது என்பது கருத்து. எது வெளிப்படையாகத் தெரிந்து கொள்ளப்படுகிறதோ அது (பரம்பொருளைவிட) வேறானது, எதிர்ச்சக்திகளுள்ளது; அதனால் அழியக்கூடியது; அதே காரணத்தினாலேயே, பலபடி யாக இருப்பது; எனவே தூய்மையற்றது. இந்தக் காரணங்களி னாலேயே, அதைவிட வேறான தன்மையது பரம்பொருள் என்று உறுதியாயிற்று.

அப்படியானால், அது (பரம்பொருள்) ஒருவருக்குமே தெரியாத ஒன்றா என்றால், அன்று; அதைத் தெரிந்து கொள்ளும் வேறு ஓர் அறிவை அது எதிர்பார்த்து இல்லை; அவ்வளவுதான் எது தெரிந்து கொள்ளப்படவில்லையோ, அது (தான் அறியப் படுவதற்கு) ஏதோ ஓர் அறிவை எதிர்பார்க்கும். தெரியாததைத் தெரிந்து கொள்ளும் அறிவைப் பெறுவதற்காக அல்லவா உலகத்தில் எல்லாரும் முயற்சி செய்கிறார்கள்? இதுவோ (பரம் பொருளோ) அத்தகைய அறிவை எதிர்பார்க்கவில்லை. ஏன்? தானே அறிவாக அது இருப்பதுதான் காரணம். எது எதனுடைய சொந்த இயல்போ (ஸ்வரூபமோ) அதைத் தெரிந்து கொள்வதில்

வேறொன்றின் உதவியை அது நாடுவதில்லையல்லவா? தானே தன்னையே எதிர்பார்ப்பது என்பது இல்லை. பிறிதொன்றையும் எதிர்பாராமலே ஏற்கனவே அது இருக்கிறது. (ஒளிவிடும்) ஒரு விளக்கு தான் இருப்பதைக் காண்பித்துக்கொள்வதற்கு வேறொரு ஒளியை வேறு விளக்கின் மூலமாகவோ அல்லது தன்னிட மிருந்தேயோ எதிர்பார்ப்பதில்லை. எது இன்னொன்றை எதிர் பார்க்காமலே விளங்குகிறதோ, அது தானாகவே நிலை பெற்றி ருக்கும். ஒளித்தன்மை உடைய ஒரு விளக்கு, தன்னைக் காண்பித்துக் கொள்ள இன்னொரு ஒளியை எதிர் பார்ப்பதாக வைத்துக் கொண்டால் அதில் பலனொன்றுமில்லை; ஒளி வீசும் தன்மையில், ஒளிகளுக்குள் வேற்றுமையில்லை என்பது தான் காரணம். விளக்கின் ஒளிதரும் தன்மை வெளிப்படுவதற்கு, இன்னொரு விளக்கின் ஒளியினால் எந்தப் பயனுமில்லை. இது போலவே, (அறிவே உருவான) ஆத்மா (என்ற மெய்ப் பொருளைத்தவிர) வேறு அறிவு ஒன்றில்லை. அப்படி இருந் தால், அந்த (ஆத்மாவின்) இயல்பைத் தெரிந்து கொள்வதற்கு அது தேவைப்படலாம். (அப்படி ஒன்றும் இல்லாததால் இந்தத் தேவை இல்லை.)

(இப்படிச் சொல்வது) முன்னுக்குப் பின் முரணாகும் என்று மறுக்கப்படுமானால், அதன்று; வேறாக இருப்பதால். (இந்த மறுப்பை) இன்னும் விளக்கமாகச் சொல்வோம்:

''அறிவையே தன் இயல்பாகக் கொண்டது ஆத்மா என்ற மெய்ப் பொருள்; அதனால் அது தன்னைத் தெரிந்து கொள்ள வேறொரு அறிவை எதிர்பார்க்க வேண்டியதில்லை'' என்று சொல்வது சரியன்று. ஆத்மாவைப் பற்றிய தவறான அறிவும் காணப்படுகிறது. சரியான அறிவும் உலகத்தில் காணப்படுகிறது; ''என்னை நான் தெரிந்து கொள்ளவில்லை'' என்று கூறுவதை உலகில் பார்க்கிறோம். ''நீ அதுவாக (பரம்பொருளாக) இருக்கிறாய்'' சாந்தோக்ய உபநிஷத், IV, 8-16) ''ஆத்மாவையே

தெரிந்து கொள்'' (பிருஹதாரண்யக உபநிஷத், I - 4.10) ''இந்த ஆத்மாவை அறிந்து கொண்டு'' (பிருஹதாரண்யக உபநிஷத், III - 5.1) என்பது முதலிய வேதவாக்குகளும் இதற்குச் சான்றாக இருக்கின்றன. வேதங்களில் எல்லா இடங்களிலும், (இவ்வாறு) ஆத்மாவைத் தெரிந்து கொள்வதற்கு வேறு இன்னொரு அறிவு தேவை என்றுதான் காணப்படுகிறது. (எனவே ஆத்மா என்ற மெய்ப்பொருளைத் தவிர வேறு அறிவு கிடையாது என்பது அநுபவத்தைச் சொல்லும் வேதத்திற்கு முரணாக உள்ளது என்று (யாராவது) எதிர்ப்புச் சொன்னால்) :

(அதற்குச் சங்கரர் பதில்) :

அன்று, எப்படி? புத்தி முதலிய செயற்கருவிகளின் கூட்டத்தோடு ஒன்றாகி அவற்றின் இடையறாத செயல்களின் தன்மையைப் பெற்று, தன்னைப்பற்றிய உண்மையை அறியும் திறனின்றி, தானே அந்த புத்தியில் பிரதிபலித்து, கண் முதலிய கருவிகளைக் கொண்டு, அழியாத அறிவே தன் இயல்பாகக் கொண்ட ஆத்மா சிற்றறிவை (அன்றாட உலகியலை) உண்டாக்குகிறது. இந்த உலகியல் அறிவைவிட ஆத்மா வேறானதுதான். (அதாவது, உடலில் கட்டுண்ட உயிரின் சிற்றறிவு உடலிலுள்ள பல கருவிகளால் உண்டாவது. இக்கருவிகள் நீங்கிவிட்டால், இந்த அறிவும், போய்விடும். ஆயினும், இத்தகைய உலகியல் அறிவும் ஆத்மா என்ற அறிவை அடிப்படையாகக் கொண்டதுதான். ஆத்மா என்ற பேரறிவோ நித்தியமானது. எனவே, அது உயிர்களுக்குள்ள நிலையற்ற உலகியல் அறிவைவிட வேறானது).

புத்தியில் உண்டாகும் பல்வேறு சிற்றறிவுகள் தோன்றி மறையும் தன்மையுடையன. அத்தகைய தன்மையினாலேயே, அவற்றினூடே தோன்றும் ஆத்மா அவற்றைவிட வேறாகவும் பிரகாசிக்கிறது.

ஆத்மா என்ற மெய்ப்பொருள் உள்ளிருக்கும் அறிவுக் கருவியான மனதிற்கும் மனதாகும் என்று ''(அது) எல்லா வற்றிற்கும் உள்ளே உள்ளது'' என்ற வேதவாக்கியத்திலிருந்து தெரிகிறது. நித்தியமான அறிவையே இயல்பாகக் கொண்டு, ஆகாயத்தைப் போல அசையாது உள்ளிருப்பது கருப்பொரு ளான ஆத்மா. அதற்கு வெளியிலிருக்கும் புத்தியை உடைய உயிர் (ஜீவாத்மா), அந்த ஆத்மாவைவிட வேறாய், ஒளிக் கதிர்களால் சூழப்பட்ட நெருப்புப்போல், அவ்வப்பொழுது தோன்றி மறையும் தன்மை கொண்ட (ஆத்மா என்ற உண்மை) அறிவின் சாயைகளோடுகூடி மேற்சொன்ன (உயிர்) இன்ப, துன்பங்களை நுகர்கிறது என்று உலகத்தோரால் நம்பப்படுகிறது. எனவே, இந்த உயிர் (ஜீவாத்மா), நித்தியமான அறிவையே இயல்பாகக் கொண்ட ஆத்ம மெய்ப்பொருளிலிருந்து வேறானது. இந்தச் சிற்றறிவில்தான் இன்னொரு அறிவின் தேவையும், தவறான அறிவுக்கு வாய்ப்பும் நிச்சயமாக உண்டு; என்றுமுள்ள ஆத்மா என்ற பேரறிவில் அதற்கெல்லாம் இடம் இல்லை.

கேள்வி : (மேலே சொன்னது சரியானால்) ''நீ அதுவாக (பரம்பொருளாக இருக்கிறாய்'' (தத்-த்வம்-அஸி) என்ற மெய்யறிவு போதனை பொருந்தாதே? ''ஆத்மாவை அறிந்து கொள்'' (பிருஹதாரண்யக உபநிஷத், I-4.10) முதலிய வாக்கியங்கள் ஆத்மாவை அறியப்படும் பொருளாகக் கூறுகின்றன. சூரியன் இன்னொரு ஒளியினால் பிரகாசப்படுத்தப் படவில்லை. அதுபோலவே மெய்ப்பொருளும் அறியப்படும் பொருள் இல்லை என்று நீங்கள் கூறுகிறீர்கள். இதையெல்லாம் பார்த்தால் அதுபற்றிய உபதேசம் எதுவும் வீண் என்றல்லவா ஆகிறது?

பதில் : அப்படி அன்று; பொய்யான உலகத் தோற்றத்தை நீக்கும் பொருட்டாக வந்தது மேற்சொன்ன வேத வாக்கியம்.

தெரிந்து கொள்'' (பிருஹதாரண்யக உபநிஷத், I - 4.10) ''இந்த ஆத்மாவை அறிந்து கொண்டு'' (பிருஹதாரண்யக உபநிஷத், III - 5.1) என்பது முதலிய வேதவாக்குகளும் இதற்குச் சான்றாக இருக்கின்றன. வேதங்களில் எல்லா இடங்களிலும், (இவ்வாறு) ஆத்மாவைத் தெரிந்து கொள்வதற்கு வேறு இன்னொரு அறிவு தேவை என்றுதான் காணப்படுகிறது. (எனவே ஆத்மா என்ற மெய்ப்பொருளைத் தவிர வேறு அறிவு கிடையாது என்பது அநுபவத்தைச் சொல்லும் வேதத்திற்கு முரணாக உள்ளது என்று (யாராவது) எதிர்ப்புச் சொன்னால்) :

(அதற்குச் சங்கரர் பதில்) :

அன்று, எப்படி? புத்தி முதலிய செயற்கருவிகளின் கூட்டத்தோடு ஒன்றாகி அவற்றின் இடையறாத செயல்களின் தன்மையைப் பெற்று, தன்னைப்பற்றிய உண்மையை அறியும் திறனின்றி, தானே அந்த புத்தியில் பிரதிபலித்து, கண் முதலிய கருவிகளைக் கொண்டு, அழியாத அறிவே தன் இயல்பாகக் கொண்ட ஆத்மா சிற்றறிவை (அன்றாட உலகியலை) உண்டாக்குகிறது. இந்த உலகியல் அறிவைவிட ஆத்மா வேறானதுதான். (அதாவது, உடலில் கட்டுண்ட உயிரின் சிற்றறிவு உடலிலுள்ள பல கருவிகளால் உண்டாவது. இக்கருவிகீள் நீங்கிவிட்டால், இந்த அறிவும், போய்விடும். ஆயினும், இத்தகைய உலகியல் அறிவும் ஆத்மா என்ற அறிவை அடிப்படையாகக் கொண்டதுதான். ஆத்மா என்ற பேரறிவோ நித்தியமானது. எனவே, அது உயிர்களுக்குள்ள நிலையற்ற உலகியல் அறிவைவிட வேறானது).

புத்தியில் உண்டாகும் பல்வேறு சிற்றறிவுகள் தோன்றி மறையும் தன்மையுடையன. அத்தகைய தன்மையினாலேயே, அவற்றினூடே தோன்றும் ஆத்மா அவற்றைவிட வேறாகவும் பிரகாசிக்கிறது.

ஆத்மா என்ற மெய்ப்பொருள் உள்ளிருக்கும் அறிவுக் கருவியான மனதிற்கும் மனதாகும் என்று ''(அது) எல்லா வற்றிற்கும் உள்ளே உள்ளது'' என்ற வேதவாக்கியத்திலிருந்து தெரிகிறது. நித்தியமான அறிவையே இயல்பாகக் கொண்டு, ஆகாயத்தைப் போல அசையாது உள்ளிருப்பது கருப்பொரு ளான ஆத்மா. அதற்கு வெளியிலிருக்கும் புத்தியை உடைய உயிர் (ஜீவாத்மா), அந்த ஆத்மாவைவிட வேறாய், ஒளிக் கதிர்களால் சூழப்பட்ட நெருப்புப்போல், அவ்வப்பொழுது தோன்றி மறையும் தன்மை கொண்ட (ஆத்மா என்ற உண்மை) அறிவின் சாயைகளோடுகூடி மேற்சொன்ன (உயிர்) இன்ப, துன்பங்களை நுகர்கிறது என்று உலகத்தோரால் நம்பப்படுகிறது. எனவே, இந்த உயிர் (ஜீவாத்மா), நித்தியமான அறிவையே இயல்பாகக் கொண்ட ஆத்ம மெய்ப்பொருளிலிருந்து வேறானது. இந்தச் சிற்றறிவில்தான் இன்னொரு அறிவின் தேவையும், தவறான அறிவுக்கு வாய்ப்பும் நிச்சயமாக உண்டு; என்றுமுள்ள ஆத்மா என்ற பேரறிவில் அதற்கெல்லாம் இடம் இல்லை.

கேள்வி : (மேலே சொன்னது சரியானால்) ''நீ அதுவாக (பரம்பொருளாக இருக்கிறாய்'' (தத்-த்வம்-அஸி) என்ற மெய்யறிவு போதனை பொருந்தாதே? ''ஆத்மாவை அறிந்து கொள்'' (பிருஹதாரண்யக உபநிஷத், I-4.10) முதலிய வாக்கியங்கள் ஆத்மாவை அறியப்படும் பொருளாகக் கூறுகின்றன. சூரியன் இன்னொரு ஒளியினால் பிரகாசப்படுத்தப் படவில்லை. அதுபோலவே மெய்ப்பொருளும் அறியப்படும் பொருள் இல்லை என்று நீங்கள் கூறுகிறீர்கள். இதையெல்லாம் பார்த்தால் அதுபற்றிய உபதேசம் எதுவும் வீண் என்றல்லவா ஆகிறது?

பதில் : அப்படி அன்று; பொய்யான உலகத் தோற்றத்தை நீக்கும் பொருட்டாக வந்தது மேற்சொன்ன வேத வாக்கியம்.

எல்லாவற்றிற்கும் உட்பொருளாகவும் என்றுமுள்ள அறிவானது மான ஆத்மாவில், புத்தி முதலிய (சிற்றறிவின்) நிலையற்ற குணங்கள் உலகத்தினரால் ஏற்றப்படுகின்றன. இதற்குக் காரணம், ஆத்ம மெய்ப்பொருளைப் பற்றிய பகுத்தறிவு இல்லாததுதான்.

எனவே அத்தகைய தவற்றை நீக்கும் பொருட்டுதான், அறிவே உருவான ஆத்மாவைப் பற்றிய உபதேசம் செய்யப்படுகிறது. மெய்ப்பொருளை அறியும் முயற்சியில் தவறான அறிவோ, சரியான அறிவோ இரண்டுக்கும் வாய்ப்புண்டு. ஏனெனில், அத்ததைய அறிவு மற்றொன்றின் உதவியினால் உண்டாகிறது. தண்ணீரில் சூடு ஏறுவது (அதைவிட வேறான) நெருப்பின் காரணத்தால் வருவது போலவும், இரவும், பகலும் சூரியனால் ஏற்படுவதுபோலவும் இங்கும் புரிந்து கொள்ள வேண்டும். எப்பொழுதும் இருக்கிற சூடும், ஒளியும் , நெருப்பு, சூரியன் இவற்றின் காரணமாக பிற பொருட்களில் தாற்காலிகமாகத் தோன்றும் பொழுது அவை எப்பொழுதும் உள்ளவை அல்ல என்று (உலகத்தாரால்) ஒரு பேச்சுக்கு உபசாரமாக சொல்லப்படுகின்றன. ஆனால் (சூடும், ஒளியும்) முறையே நெருப்பிலும், சூரியனிடத்திலும் (நித்தியமாக) இருக்கின்றன. இருப்பினும் உலகத்தில் ''தண்ணீர் சுடுகிறது'' என்றும் ''பகல் ஒளி பொருந்தியது'' என்றும் பேசும் வழக்கம் இருக்கிறது. தண்ணீரிலும் விளக்கிலும் தோன்றும் சூடும், ஒளியும் தாற்காலிகமானவை. நெருப்பிலும், சூரியனிலும் இருக்கும் சூடும் ஒளியும் என்றுமுள்ளவை. 'நெருப்பு சூடேற்றுகிறது'. ''சூரியன் பகலாக்குகிறது'' என்றெல்லாம் சொல்லுவது பேச்சு வழக்கில் வந்துவிட்டது.

(இதே போல) இன்ப துன்பங்கள் பந்த மோக்ஷங்கள் என்ற இவை உண்மை என்ற தவறான மயக்கம் உலகில் காணப்படுகின்றது. எனவே ''அது நீயாக இருக்கிறாய்'', ''உன்னை யாரென்று தெரிந்துகொள்'' என்று ஆத்மாவைப் பற்றிய

உண்மையான உபதேசங்கள் இந்த பொய்யான மயக்கத்தைப் போக்குவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டவை.

வேதவாக்குகளெல்லாம் ''சூரியன் தன்னைப் பிரகாசப் படுத்திக் கொள்கிறது'' என்று சொன்னால் எப்படியோ அப்படித் தான், என்றுமுள்ள அறிவான ஆத்மா, ''அறிகிறது'' ''அறிய வில்லை'' என்ற (இரண்டு) செயல்களுக்குரியதாகிறது.

எனவே, அது தெரியாதவற்றிலிருந்தும் வேறானது. 'மேலானது' என்ற (உபநிஷத்தில் வரும்) சொல் ''வேறானது'' என்ற பொருளுள்ளது. எது எதிலிருந்து மேலானதோ, அது அதனின்றும் வேறானது என்பது கருத்து. ஓர் அரசன் சேவகர் களைவிட மேலானவன், எனவே வேறானவன் என்று வருவது போல (இங்கும் காண்க). எது வெளிப்படையாகத் தோன்ற வில்லையோ அதுவே தெரியாதது; எனவே, வேறானது என்பது பொருள்.

தெரிந்ததும் தெரியாததும் என்பவை முறையே வெளிப் பட்டதும் வெளிப்படாததும் ஆகும். இவை காரண காரியத் தொடர்புடையவை. (வெளிப்படையாகத் தோன்றுவது தெரிவது; அதனால் நிகழும் காரியமும்; வெளிப்படாமல் நுட்பமாக இருப்பது, காரணம்; தெரியாதது; அதனால் நிகழும் காரியம்) என்ற இவை இரண்டினின்றும் வேறானது பரம்பொருள் (பிரம்மம்); அது அறிவே வடிவமானது; வேற்றுமை யொன்றும் இல்லாதது என்பதுதான் கூறப்பட்ட மொத்தமான பொருள்.

எல்லாவற்றிலும் அவற்றின் உட்தத்துவமாக மெய்ப் பொருள் இருப்பதாலேயே, அதைத் தள்ளவோ கொள்ளவோ முடியாது. ஒரு பொருள் அதைவிட வேறான ஒன்றினாலல்லவா தள்ளவோ கொள்ளவோ முடியும்? ஒன்று தன்னாலேயே தள்ளப்படுவதும் கொள்ளப்படுவதும் இல்லை. ஆத்மா என்ற உள்ளுறையும் மெய்ப்பொருளே பரம்பொருள் (பிரம்மம்)

ஆகும். அது எல்லாவற்றிற்கும் தன்மையான ஆத்மாவாக இருப்பதால், வேறு ஒன்றிற்கும் அது பொருளாகாது. இந்தக் காரணம் பற்றியே, அதற்கு வேறாக அதைத் தள்ளக் கூடியதும், கொள்ளக் கூடியதுமான பொருள் வேறு ஒன்றும் இல்லை.

(இதி சுச்ரும பூர்வேஷாம்) - (முன்னோர்களிடமிருந்து இவ்வாறு கேட்டிருக்கிறோம்) என்பது வழிவழிவந்த உபதேச மாகும். 'வ்யாசசக்ஷிரே' என்ற சொல் தன்னிச்சையாக மனம் போனபடி கட்சி கட்டுவதைத் தடுக்கும் பொருட்டாகச் சொல்லப் பட்டது. (சீடனே!) உனக்கு பரம்பொருள் பற்றிச் சொல்லப் பட்டது. மாறாது வழிவழி வந்த பரம்பொருள் பற்றிய இந்த மெய்யறிவை உனக்கு எடுத்து விளக்கினோம். இதன்றி, சொந்த ஆராய்ச்சியினால் தோன்றியதை வாதிக்கவில்லை. இப்படிச் சொன்னதன் மூலம், இடையறாது தொடர்ந்து வரும் மெய் யறிவின் மரபை காண்பிக்கிறார் குரு; இது மெய்யறிவின் பெருமையைத் துதிக்கும் பொருட்டாக; வெறும் வறட்டுத் தருக்கமோவெனில் ஒரு நிலையில்லாமல் மயக்கத்தைத்தான் உண்டு பண்ணும்.

மந்த்ரம் 5

'யத் வாசா' (எது வாக்கினால்) என்ற (உபநிஷத்தின்) விளக்கமான சொற்கள் (மேற் சொன்னவற்றை) ஒட்டிச் சொல்லப் பட்டன. (ஆத்மாவைப் பற்றிய) அறிவின் உறுதிப்பாட்டுக்காக. ''தெரிந்தவற்றினின்றும் வேறானது'' என்ற வேதத்தின் பொருள் எந்தப் பிராம்ஹணத்தினால் (மந்த்ரத்தை விளக்கும் சொற்கள் ப்ராம்ஹணம் எனப்படும்) சொல்லப் பட்டதோ, அதையே உறுதி செய்வதற்காக, 'யத் வாசா' என்பது முதலிய மந்த்ரங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

''எந்த ஒரு பரம்பொருள், (வாசா) - வாக்கினால் சொல்லப்பட முடியாததோ, விளக்கமுடியாததோ'' என்பது

இங்கு கூறிய கருத்து. ''யேன வாக் அப்யுத்யதே'' (எதனால் வாக்கு பேசுகிறதோ) என்பது வாக்கின் பேசும் ஆற்றலுக்கு (பரம்பொருள்) காரணமாயிருப்பதைக் கூறுதலாகும். ''யேன ப்ரகாச்யதே'' - (எதனால் விளக்கப்படுகிறதோ) என்று, பொருட்களை (மொழியினால்) விளக்கும் சொல்லின் ஆற்றலுக்குப் பரம்பொருளே காரணமாக இருப்பது சொல்லப் படுகிறது.

''எதனால் ஏவப்படுவதாக இந்த வாக்கைச் சொல்லுகின்றனர்'' என்று கேட்டுக் கொண்டு, ''எது வாக்குக்கும் வாக்காக இருக்கிறதோ அதை நீ பரம்பொருளாக அறிவாயாக'' என்று பரம்பொருளை வேறொன்றினாலும் அறியப்படாததாகக் கூறி, அதை உறுதியாக நிலை நிறுத்தும் பொருட்டு வேதம் இங்கு பேசுகிறது. ''எது வாக்கினால் கூற முடியாததோ, ஆனால் அந்த வாக்கின் பேசும் ஆற்றலுக்குக் காரணமாக இருப்பது எதுவோ'' என்று சொல்லப்பட்டதால், பரம்பொருள், சொல்லுக்கு எல்லாம் அப்பாற்பட்டது என்றும் அது இன்னொன்றை எதிர்பாராதது என்பதும் விளங்கியது.

அதன்மூலம், தன்னைவிட வேறானது (பரம்பொருள்) என்று (சீடன்) நினைத்துவிடும் நிலையைத் தவிர்த்து, (ஒருவனது) ஆத்மாவாகவே (அந்தப் பரம்பொருளை) நிலைப் படுத்துகிறது வேதம். (அறிகின்ற தன்னை விட வேறல்லாத) ''அதையே பரம் பொருளாக நீ அறிவாயாக'' என்று வலியுறுத்தி அதோடு அமைகிறது. ''ந இதம்'' (இதையன்று) என்று, பரம் பொருளை (ஆத்மாவைத்தவிர வேறாக) உபாஸிப்பதைத் தடுக்கவும் செய்வதால் (மேற் சொன்ன விளக்கம் பொருந்துகிறது).

மந்த்ரங்கள் 6, 7, 8, 9

''எது மனத்தினால்'' என்பது முதலிய (உபநிஷத்தின் சொற்கள்) முன் சொல்லியது போலவே பொருளுள்ளன. மனதும் அறியப்படும் பொருளாகிறது என்று சொன்னதால்

நித்தியமானதும் அறிவே வடிவமானதுமான பரம் பொருளினால் மனதும் அறியப்படும் பொருளாயிற்று என்பது தெளிவு. (அந்தப் பரம்பொருளோ), எந்த அறிவுக் கருவிக்கும் பொருளன்று. தத்தம் பொருள்களை அறியும் கருவிகளான கண் முதலியவை களும், அவற்றின் தொழில்களோடு சேர்த்தே, நீங்காத அறிவைத் தன் இயல்பாகக் கொண்ட (பரம்பொருளினால்) அறிவிக்கப் படுகின்றன என்பது இந்த (உபநிஷத்) சுலோகத்தின் பொருள். ''உடலை அதில் வசிக்கும் மெய்ப்பொருள் முழுவது மாகப் பிரகாசப்படுத்துகிறது'' என்று பகவத் கீதை (XIII - 33) சொல்லுகிறது. ''அதனுடைய ஒளியினால் (இவையாவும் ஒளிபெறுகின்றன)'' (முண்டக உபநிஷத் II - 2.10) என்று அதர்வண வேதத்தைச் சேர்ந்த உபநிஷத்தும் கூறுகிறது. ''எதனால் உயிர்க் காற்றும்'' என்ற (கேன உபநிஷத் வாக்கியத்தி னால்) உயிர்கள் செயலாற்றுவதும் மெய்ப்பொருளின் பேரறிவின் காரணமாகத்தான் நிகழ்வது என்பது பொருள்.

கேனோபநிஷத்தின் முதற்கண்டம் வாக்ய-பாஷ்யம் முற்றிற்று.

கேனோபநிஷத்

வாக்ய பாஷ்யம்

இரண்டாவது கண்டம்

மந்த்ரம் 1

''சீடனே! நான் பரம்பொருளை நன்கு அறிந்து கொண்டு விட்டேன் என்று நீ எண்ணுவாயானால், (அதிலிருந்தே நீ பரம்பொருளைப்பற்றி மிகவும் கொஞ்சமாகத்தான் அறிந்து கொண்டிருக்கிறாய் என்பது தெளிவு)'' என்று ஆசிரியர் சொல்லி சீடனுடைய புத்தியை மறுபடி குழம்பும்படி செய்வது ஏன் (என்று கேட்டால்), முன்னமே அவன் பெற்ற அறிவை நன்கு நிலைப் படுத்துவதன் பொருட்டுத்தான். தெரிந்தது, தெரியாதது என்ற வற்றிலிருந்து சீடனுடைய மனத்தைத் திருப்பித் தன் சொந்த இயல்பான ஆத்மாவில் நிலைநிறுத்தி ''நீ அதையே மெய்ப் பொருளாக அறிந்துகொள்'' என்று சொந்த சாம்ராஜ்யத்தில் இருக்கும்படி பட்டாபிஷேகம் செய்வித்து, பரம்பொருளைத் தவிர வேறொன்றையும் வழிபட வேண்டாம் என்று தடுப்பதின் மூலம், சீடனுடைய மனத்தைச் சிறிது அசைத்துப் பார்க்கிறார் (ஆசிரியர்).

''சீடனே! 'நான் பரம்பொருளை நன்கு அறிந்து கொண்டு விட்டேன்' என்று கருதுவாயானால், நீ அந்தப் பரம் பொருளைப்பற்றி 'மிகவும் கொஞ்சமாகத்தான் தெரிந்து கொண்டிருக்கிறாய் என்று நிச்சயமாகிறது'' என்றார் ஆசிரியர்.

பின் ஏன் சீடனுடைய மனத்தை அவர் குழப்பவேண்டும் என்றால், சீடனுக்கு ஏற்கனவே சிறிதளவு தெரிந்ததை உறுதிப் படுத்துவதற்காகத்தான். தேவர்களுக்குள்ளும் ''(பரம்பொருளை) முற்றும் அறிந்து கொண்டு விட்டேன்'' என்று யார் நினைக்கிறார் களோ அவர்கள் பரம்பொருளின் இயல்பைக் கொஞ்சம்தான்

அறிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நிச்சயம். ஏனெனில், பரம்பொருள் எந்த அறிவுக்கும் பொருளன்று. அல்லது, மனிதர் களுள்ளும் தேவர்களுள்ளும் மிகச் சிறிதளவே பரம் பொருள் குடிகொண்டிருக்கிறது. அந்த அளவுதான் மனிதரும் தேவரும் அதைப்பற்றித் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்று தொடர்பு படுத்திப் பொருள் கொள்ள வேண்டும். 'அத நு' என்ற உபநிஷத்தின் சொற்கள், மேலும் ஆராய்ச்சி செய்வதற்கான காரணத்தைச் சொல்லுகின்றன. ''நான் பரம்பொருளின் இயல்பைக் கொஞ்சமே அறிந்தாலும், அந்தக் கொஞ்சத்தையும் நன்கு அறிந்து கொண்டேன்'' என்று சீடன் சொல்வதாக ஆகும். ''தெரிந்ததைவிட வேறானது'' என்று ஏற்கனவே சொல்லப்பட்டு விட்டதல்லவா? ''தெரிந்து கொண்டேன்; ஆனால் கொஞ்சம் தான் தெரிந்து கொண்டேன்'' என்று நினைக்கின்ற காரணத்தால், பரம் பொருள் மேலும் மேலும் ஆராயப்படவேண்டும். ''தெரிந்த வற்றையெல்லாம்விட வேறானது என்றும், (அதே சமயம்) தெரியாதவற்றினின்றும் வேறானது என்றும் (பரம்பொருளைப் பற்றிக் கூறிய) வேதத்தின் உபதேசம் உனது சொந்த அநுபவமாக ஏற்படும் வரை நீ ஆராய்ந்து கொண்டே இருக்க வேண்டும்'' என்பது குருவின் கருத்து.

''பரம் பொருளைத் தெரிந்து கொண்டவனாக என்னை நினைக்கிறேன்'' என்று எண்ணிய சீடனுக்கு, (உனக்குத் தெரிந்தது கொஞ்சம்; தெரிந்து கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது); எனவே மேலும் மேலும் ஆராய வேண்டும் என்று அவனுக்குச் சொன்னது, மூன்று வகையான அறிவுகளின்: இணைந்த முயற்சிக்காகத்தான் அவை (i) வேதம், (ii) ஆசிரியரின் உபதேசம், (iii) சொந்த அநுபவம்.

உண்மையை மேலும் நன்கு உறுதி செய்து கொள்ளும் பொருட்டாக, எல்லாம் தெரிந்து கொண்டு விட்டேன் என்று செருக்கடைந்த சீடனின் தவறான எண்ணம் குலைக்கப்பட்டு, ''நீ இதை மேலும் ஆராயவேண்டும்'' என்று உபதேசிக்கப்பட்டது.

அவன், தனிமையில் அமர்ந்து அமைதி கொண்ட மனத்தினனாக, நன்கு ஆராய்ந்து, மேற்சொன்னபடி அசைக்க முடியாத உறுதி யோடுகூட, வேதம், குருவின் உபதேசம், சொந்த அநுபவம் என்ற மூன்று வகையான அறிவுகளுக்கும் ஒரே கருத்தாக இருப்பது பரம்பொருளே என்று (தெளிய வேண்டும்) என்பதற் காக இவற்றின் ஒன்றிற்கொன்றுள்ள தொடர்பைக் கூறினார் குரு.

இவ்வாறு நன்கு உறுதியாக நிலைப்படுத்தப்பட்ட மெய்யறிவுதான் பயனுள்ளதாக இருக்கும். அப்படி (நிலைப் படாத) அறிவு (பலனுள்ளதாகாது) என்று அறிவுக்குப் பொருத்த மாகக் காண்பிக்கப்பட்டது. ''தெரிந்ததாக நினைக்கிறேன்'' என்று உறுதியான மெய்யறிவை அப்பொழுது பெறலாம் என்று மேற் கூறிய பிரச்சினைக்கு ஆதாரமாகக் கூறப்பட்டது.

மந்த்ரம் 2

உறுதியாக நிலைத்ததும், பலனைத் தருவதுமான மெய்யறிவை விரும்புகிறான் சீடன். அதற்கு ஆதாரமாக ''நான் (பரம்பொருளை) நன்கு அறியவில்லை'' என்று சொல்லுகிறான். குருவும் சீடனும் இந்த நிச்சயமான அறிவில் சமமாக இருக்கிறார் கள் என்பதை இது காட்டுகிறது.

(''அஹம்'' என்று இங்கே உபநிஷத் மந்த்ரத்தில் (II - 2) இல்லாமல், ''அஹ'' என்று இருப்பதாகப் பாடமானால்) 'அஹ' (என்ற சொல்) உறுதியான முடிவைக் குறித்து நிற்கும் அசை யாகும். ''அப்படி நினைக்கவேயில்லை'' என்று (சீடன்) அடித்துச் சொல்லும் குறிப்பு அதில் உள்ளது. அறிவு உறுதியாக நிலைப்படாமல் இருந்த வரையில், ''நான் பரம்பொருளை நன்கு அறிவேன் என்ற தவறானதொரு முடிவு எனக்கு இருந்தது. அந்தத் தவறு தங்களால் தகர்க்கப்பட்டு (இப்பொழுது) நீங்கி விட்டது. இதற்குக் காரணம், (நீங்கள் உபதேசித்த) பொருளை நன்கு ஆராய்ந்ததால் உண்டான ''பரம்பொருள் நானே'' என்ற மெய்யறிவிற்கு அது விரோதமாக இருந்ததுதான். எனவே,

(நான் பரம்பொருளை) நன்கு அறிந்த கொண்டுவிட்டதாக நினைக்கவேயில்லை'' என்று சீடன் சொன்னான். (இப்படிச் சொல்வதற்கு) மேலும் ஒரு காரணமும் உண்டு.

''அதைத் தெரிந்து கொள்ளவில்லை என்றும் நினைக்க வில்லை'' என்று தொடர்ந்து சீடன் பேசுகிறான். பரம்பொருள் அறியப்பட முடியாதது என்பதும் மறுக்கப்பட்டுவிட்டதே இதன் காரணம். ''பின் என்னதான் நினைக்கிறாய்?'' என்று கேட்கப் பட்ட சீடன் சொல்கிறான்:'' தெரிந்து கொண்டும் இருக்கிறேன்''. 'ச' என்ற உபநிஷத்தில் வரும் சொல்லால், ''அறிவேன்; இருந்தும் அறியவில்லை'' என்ற குறிப்பு ஏற்படுகிறது. பரம் பொருள், தெரிந்ததிலிருந்தும் தெரியாததிலிருந்தும் வேறாக இருப்பதே இதன் காரணம். இம்முறையில் ''பரம்பொருள் என்னால் (இவ்விதம் முழுதும்) அறியப்பட்டதாக நினைக் கிறேன்'' என்பது முழு வாக்கியத்தின் பொருள்.

அல்லது, வேத ச (அறியவும் செய்வேன்) என்ற உபநிஷத்தின் சொற்களுக்கு, என்றுமுள்ள அறிவாயிருக்கிற பரம் பொருள் என்னுடைய சொந்தத் தன்மையாகவே இருக்கிற காரணத்தால், அதை நான் அறியவில்லை என்பது இல்லை; அறியவே செய்கிறேன் என்பது பொருளாகலாம். சொந்தத் தன்மை மாறுபடவே முடியாது என்பதுதான் (இப்படிச் சொல் வதற்குக்) காரணம். தனித்தனியாக புத்தியில் எழும் அறிவுகள் ஆத்மா என்ற பரம்பொருளில் பொய்யாகக் கற்பிக்கப்படு கின்றன. உண்மையில் இவை இல்லை. எனவே, இந்த் புத்தியில் எழும் சாதாரணமான அறிவுகளினால் பரம்பொருளை உண்மை யில் நான் அறிய முடியவில்லை என்பது கருத்து.

''எவருக்குத் தெரியவில்லையோ, அவருக்குத் தெரிந்தது'' என்று உபநிஷத் கூறுவது வேறு சில தவறான கருத்துக்களை மறுப்பதற்காகத்தான். மேலே சொல்லப்பட்ட கருத்துக்களை மீண்டும் கூறி இன்னும் வலுவூட்டுவதற்காக உபநிஷத் இப்படிச் சொல்கிறது. நம்மிடையே யார் இவ்வாறு (தெரிந்தது, தெரியாதது இவற்றைவிடப் பரம்பொருள் வேறானது என்று)

அறிகிறார்களோ, அவர்களே பரம்பொருளை உண்மையில் அறிந்தவர்கள்; மற்றவர்களல்லர். ''நான் அறிந்து கொண்டேன்'' என்று மற்றவர்கள் அறிந்து கொண்டதாகச் சொல்வதெல்லாம் உபாஸனைக்குப் பொருளாகிய பரம்பொருளின் ஒரு அம்சத்தைத்தான், தோற்றத்தைத்தான். இந்த வகையில் ''நான் அறிந்து கொண்டேன்'' என்று கூறுபவர்களிடத்தில், பரம் பொருளை (இவர்கள்) அறிந்து கொண்ட நிலை மறுக்கப்படு கிறது. எப்படி இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று கேட்டால், அதற்குப் பதில் சொல்லப்படுகிறது. மேலே ஏற்கனவே மெய் யுணர்வின் அடிப்படையில் ''நாங்கள் அறியவில்லை என்பதில்லை; ஆனால் அறியவுமில்லை'' என்று உபநிஷத் தன் வாக்கையே திரும்பக் கூறி (இந்த முடிவை) வலியுறுத்துகிறது.

மந்த்ரம் 3

''எவருக்குப் பரம்பொருள் சிந்தனைக்குப் பொருளாக வில்லையோ'' என்ற (கேனோபநிஷத்தின்) சொற்கள், கதை யாகச் சொல்லத் தொடங்கியதை முடிப்பதற்காக கூறப்பட்டன.

சீடன் கேட்பதாகவும், குரு அதற்கு விடை சொல்வதாக வும், அநுபவம், அறிவு கொண்டு ஆராய்தல் இவற்றை முக்கிய மாகக் கொண்டதாகவும் அமைந்த கதையினால் எந்த விஷயம் சொல்லப்பட்டதோ அது முடிவாகச் சுருங்கக் கூறப்படுகிறது.

எந்த ஒரு பரம்பொருள் வாக்கு முதலியவற்றுக்கு அப்பாற்பட்ட காரணத்தால் தெரிந்தவற்றைவிட வேறாகி சொந்த அநுபவத்தினால் உணரப்பட்டு, அறிவு பூர்வமாகவும் ஆராயப் பட்டதோ, அது அவ்வாறாகவே தெரிந்து கொள்ளப்பட வேண்டும்.

''எந்தப் பரம்பொருள், அதை அறிய வேண்டும் என்ற அவாவினால் தூண்டப்பட்டு அதை அறிய முயற்சி செய்கின்ற சீடனுக்குப் புலனாகவில்லையோ, அறியப்படவில்லையோ, தெரிந்து கொள்ளப்படவில்லையோ'' என்று இவ்வாறு பரம் பொருளின் உண்மையைப் பற்றிய நிச்சயமான பலன் முடிவில்

வரும் வகையில், மெய்யறிவினால் (பரம்பொருளை) அறிய வேண்டும் என்ற அவா நிறைவு பெற்றது என்பது கருத்து. இவ்வாறு தெரிந்து கொண்டவனால் (பரம்பொருள்) உள்ளபடி அறிந்து கொள்ளப்பட்டது. மெய்ப்பொருளானது வேறு அறிவிற்குப் பொருளாகாது என்று உணர்ந்து, தன் சொந்த ஆத்மாவாகவே யார் தெரிந்து கொண்டார்களோ அவரால் பரம்பொருள் உள்ளபடி அறியப்பட்டது என்பது குறிப்பு. இப்படி மெய்யறிவு ஏற்பட்டவுடன் ''பரம் பொருள் என்னுடைய ஆத்மாவாகவே இருக்கிறது'' என்ற மெய்யுணர்வில் எல்லாமே நிறைவு பெற்றுவிடுவதால், செய்ய வேண்டியதான காரியம் எதுவுமே அவருக்குக் கிடையாது. இவரே உண்மையை உள்ளபடி உணர்ந்தவர். இதற்கு மாறானது பொய்யறிவு.

எப்படியென்றால், ''என்னால் பரம்பொருள் உள்ளபடி அறியப்பட்டுவிட்டது'' என்று ஒருவனுக்கு எண்ணம் ஏற்படும் பொழுது அவனுடைய எண்ணம் பொய்யானதாகும்; உண்மை க்கு மாறான அறிவு அது. 'தெரிந்தது' என்ற எல்லாவற்றி லிருந்தும் பரம்பொருள் வேறானதால், அவன் (''தெரிந்தது'' என்று சொன்னதனால்) உண்மையில் தெரியாதவனாகிறான். அவனுக்கு (உண்மை) தெரியவில்லை.

இதனாலும், வேதத்திற்கு எதிரான எல்லா அறிவினுடைய பொய்ம்மையும் (காட்டப்பட்டது). (பரம்பொருளல்லாத) வேறு எதையெல்லாமோ அந்த அறிவு தன் விஷயமாகக் கொண்டிருப் பதால், அது நிந்தனைக்குரியதாகிறது. அவ்வாறே, கபிலர், கணாதர் முதலியவர்களுடைய தத்துவக் கொள்கைகளும் சிற்றறி வினால் தெரிந்து கொள்ளப்பட்டதை உண்மை என்று நம்புவதா லும், உறதியானதொரு வேர் இல்லாத வறட்டுத் தருக்கத்தினால் உண்டானதனாலும், (எது உண்மை என்பதை முற்றும்) தெரிந்து கொள்ள வேண்டும் என்ற அவாவைத் தீர்க்காதபடியாலும் அவை பொய்யானவை என்பது தெளிவாகிறது. வேதத்தை ஒட்டி எழுந்த மெய்ந்நூல்களிலும், ''வேதத்திற்கு புறம்பான (மனிதனால் செய்யப்பட்ட) நூல்களும், கோணல் பார்வைகளும்

எல்லாம் உபயோகமற்றவை. குருட்டு இருட்டில் தடுமாறுபவை அந்த மனிதக் கற்பனைகள்'' (என்று மனு கூறியிருக்கிறார். (மனுஸ்ம்ருதி : XII - 95). இதனால், உண்மைக்கு மாறானதும் பொய்யுமான அறிவு அழிகின்ற தன்மை உடையது. ''தெரிந்தவர் களுக்குத் தெரியவில்லை; தெரியாதவர்களுக்குத் தெரிந்தது'' என்ற (கேனோபநிஷத்) வாக்கு, உபநிஷத் மந்த்ரத்தின் முதல் பாதியில் சொன்னதற்கு ஆதாரம் காட்டும் வகையில் சொன்ன தாகும். (முதலில்) சொன்னதையே அது திருப்பிச் சொல்வதா னால் வீண் பேச்சாகி விடும். சொன்னதையே திரும்பச் சொல்லுதல் என்பது பொருளில்லாத பேச்சு. இதனால், ''தெரியா தவருக்கு'' என்பது முதலிய சொற்கள் மெய்யறிவு, பொய்யறிவு இவற்றிற்கு முறையே காரணமாகின்றன என்ற இது காண்பிக்கப்படுகிறது.

''(அறிகின்றவனது) சொந்த ஆத்மாவாகவே பரம் பொருள் இருப்பதால் அது அறியப்படும் வெளிப்பொருள் அன்று'' என்று புரிந்து கொண்டவர்களுக்கு இப்படிப் புரிந்து கொள்வதே மெய்யறிவு ஆயிற்று. (இதற்கு மாறாக) புத்தி முதலிய சிற்றறிவிற்குப் பொருளாவதாகப் பரம்பொருளைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும் அறியாதவர்களுக்கு, அதாவது, ''தெரிந்தது, தெரியாதது'' என்ற (இரண்டு வகையான) அறிவுகளுக்கும் வேறானதும், (அறிபவர்களுடைய) ஆத்மா வாகவே இருந்து (அறிவதும்), என்றும் அழியாத அறிவு வடிவமாய் இருந்து கொண்டிருப்பதும், தன்னிலையிலேயே என்றும் மாறாததும், இறவாததும், மூவாததும், அச்சமில்லா ததும், (''அறிகிறேன்'') என்று சொல்பவருக்குள்ளும் அறிவாய் இருப்பதால் அறிவுக்குப் பொருளாகாமல் (அறியும் அறிவாகவே இருப்பதும்) ஆன பரம்பொருளை அறியாதவர்களுக்கு, புத்தி முதலியவற்றின் பொருளாக அது இருப்பதாகவே பரம்பொருள் (தவறாக) எப்போதும் எண்ணப்படுகிறது. ''தெரிந்தது,. தெரியா தது'', ''வெளிப்படையானது, வெளிப்டையாகாதது'' என்பது முதலிய இயல்பினைப் பொய்யாகக் கற்பித்துக் கொள்வதனால்,

அந்தப் பொய்யான அறிவுக்குக் காரணமான கற்பனையாகி, (அறிபவன், அறியப்படும் பொருள், அறிவு) என்ற வேற்றுமை கள் புகுந்த பல பட்டடையான அறிவாகிறது. பொய்யான கற்பனையைத் தனது பொருளாகக் கொண்டிருக்கிறது. கிளிஞ்சலை வெள்ளியாகப் பார்ப்பது முதலிய பொய்யான அறிவைப் போல, இவர்களது அறிவும் கற்பனை; பொய்.

மந்த்ரம் 4

''ப்ரதிபோத விதிதம் மதம்'' (மனத்தில் ஏற்படும் ஒவ்வோர் அறிவிலும் மெய்ப்பொருள் பார்க்கப்படுகிறது) என்று (உபநிஷத்) திரும்பவும் சொல்வது, ஆத்மாவைத் தெரிந்து கொள்வதற்கு இந்த அறிவுகள் வாயில்களாக இருப்பதால்தான். 'அறிவுதொறும் அறிவுதொறும்' என்று இரண்டு தடவை சொல்லப்படுவது, சிலவற்றை மட்டுமல்லாமல் எல்லா அறிவு களையும் குறிப்பிடும் பொருட்டேயாகும். புத்தியில் உண்டாகும் எல்லா அறிவுகளும், காய்ச்சப்பட்ட இரும்பில் நெருப்பு பூராவும் நிறைந்திருப்பதைப் போல, அறிவான ஆத்மாவினால் பரவப் பட்டிருப்பதால் அந்த மெய்ப்பொருளின் இயல்பை வெளியிடு கின்றன. அவற்றைவிட வேறான ஆத்மா (காய்ச்சப்பட்ட இரும்பைவிட வேறான) நெருப்பைப்போல அவற்றினூடே அறியப்படுகிறது. இதனால் ஆத்மாவை அறிவதற்கு (இந்த மனத்தின் கண் தோன்றும் அறிவுகள்) வாயில்களாகின்றன. ஆகவே, ஒவ்வொரு அறிவிலும் தோன்றும் உள்ளுறை ஆத்மா தான் பரம்பொருள். அதுவே மெய்யறிவு பெற்ற பெரியோர் களுடைய அறிவாகும். வெளியுலகப் பொருட்களைப் பற்றிய அறிவன்று அது.

''உள்ளுறைகின்ற தனது ஆத்மாவாக (மெய்ப் பொருளைப்) பார்த்தார்'' என்று கடோபநிஷத்தும் (கூறுகிறது). ''இறவாமையை அடைகிறான்'' என்று (கேனோபநிஷத் இங்கு) கூறுவது (மெய்யறிவு முக்திக்குக்) காரணம் என்பதைக் காட்டு கிறது. இதற்கு மாறான (பொய்யறிவினால்) மரணம்தான்

கிட்டும். வெளியிலுள்ள உலக விஷயங்களைப் பற்றிய அறிவு களினாலே மரணம்தான் ஏற்படுகிறது. எனவே, ஆத்மாவைப் பற்றிய மெய்யறிவு முக்திக்குக் காரணம். ''(மெய்யறிவினால்) முக்தியை அடைகிறான்'' என்று (அதை முக்திக்குக்) காரணமாக மேலே சொன்னது பொருத்தமாகிறது.

ஆத்மாவைப் பற்றிய அறிவினால், முக்தி புதிதாக உண்டாக்கப்படுகிறதா? என்றால் பதில் : இல்லை. பின் என்ன? தன்னாலேயே தன்னை அடைகிறான். நித்தியமான ஆத்மாவாக ஏற்கனவே இருக்கும் தன் இயல்பான, முக்தியை அடைகிறான்; இன்னொன்றை எதிர்பார்த்து அல்ல. ''அடைகிறான்'' (விந்ததே) என்பது ஆத்மாவைப் பற்றிய மெய்யறிவினால் வரும் பலன். முக்தியானது (ஏற்கனவே இல்லாமல் புதிதாக) உண்டாக்கப்படு வதாயிருந்தால் அது அழியக்கூடியதாகிவிடும், ஒரு காரியம் செய்து அதனால் உண்டாகும் பலன் அழியத்தானே செய்யும்? முக்தி என்ற வீடுபேறு மெய்யறிவினால் புதிதாக உண்டாவ தன்று. (ஏற்கனவே இருப்பதுதான். அதைத் தெரிந்து கொள்வது ஒன்றுதான் அதை அடைவது என்பதன் பொருள்).

(சொந்த ஆத்மாவே முக்தி என்றால், (அப்புறம்) மெய்யறிவு எதற்கு? இதற்குப் பதில் சொல்லப்படுகிறது. ஆத்மா இல்லாத பொருளைப் பற்றிய பொய்யறிவை மெய்யறிவு விலக்குகிறது. அப்படி விலக்குவதால், இயல்பாகவே இருக்கிற முக்திக்கு அது காரணம் என்று கற்பனையாகச் சொல்லப்படு கிறது. ''மெய்யறிவினால் முக்தியடைவதற்குரிய ஆற்றல் பெறப் படுகிறது'' என்று சொல்லப்பட்டிருக்கிறது. 'வீர்யம்' என்றால் ''ஆற்றல்'' என்று பொருள். ஆத்மா என்ற மெய்ப் பொருளில் அதல்லாத பொய்யான வேறு பொருட்களை கற்பனை செய் வதற்குக் காரணமான மாயை என்ற குருட்டு இருட்டை அழிக்கும் ஆற்றல் மெய்யறிவினால் ஏற்படுகிறது.

அதுவும், (அந்த ஆற்றலும்), எத்தகைய தன்மை உடையது (என்று கேட்டால்) அழிவில்லாத தன்மையுடையது.

அறியாமையினால் உண்டாகும் அறிவிற்குத்தான் அழிவுண்டு. மெய்யறிவினால் அறியாமை நீக்கப்படுவதே இதன் காரணம். மெய்யறிவை மறுத்து அழிக்கக்கூடிய ஒன்றும் கிடையாது என்பதனால், மெய்யறிவினால் உண்டாகும் ஆற்றல் அழியாதது. எனவே, மெய்யறிவு, (அதன் ஆற்றலினால், முக்திக்கு) காரணமாக இருக்கிறது. (ஆத்மாவல்லாத வேறு பொய்ப் பொருட்களைப்பற்றிய பொய்யறிவை அது நீக்குகிறது என்பது மட்டுமே அது செய்யும் காரியம்). அதர்வண வேதத்திலுள்ள (முண்டக உபநிஷத்திலும்) ''இந்த ஆத்மா என்ற மெய்ப் பொருளானது ஆற்றல் குறைந்தவனால் அடையப்படமாட்டாது'' (III - 2.4) என்று கூறப்பட்டிருக்கிறது.

உலகத்திலும் கூட அறிவினால் உண்டாகும் ஆற்றலே வெற்றியடைகிறது. யானை முதலியவற்றைப் போல, உடம்பு முதலியவற்றின் வலிமையினால் அல்ல.

அல்லது (வேறு விதமான பொருள் கொண்டால்) ''ப்ரதிபோத விதிதம் மதம்'' என்ற சொற்களினால், ஒரேயடியாக பொய்யறிவு மிச்சமில்லாமல் போக்கடிக்கப்பட்டவுடன், எப்படி விழித்துக் கொண்டவுடன் கனவு முழுவதும் போய்விடுகிறதோ, அதுபோலத் தெரிந்து கொள்ளப்படுவதே பரம்பொருளாகும். அல்லது (இன்னும் வேறொரு வகையாகப் பொருள் கொண்டால்) குருவின் உபதேசமே மெய்யறிவு; அதன் மூலம் (பரம்பொருள்) தெரிந்து கொள்ளப்படுகிறது. இரண்டு இடத்திலும், 'ப்ரதி போதம்' (''ஒவ்வொரு அறிவிலும் தோன்றுவது'') என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (அறியாமை என்ற) தூக்கத்திலிருந்து குருவினால் எழுப்பப்பட்டு, அறிவுறுத்தப்பட்டு, சீடன் (பரம் பொருளைத் தெரிந்து கொள்கிறான்) என்பதை இது காட்டுகிறது. மற்றபடி எல்லாம் முன் சொன்னதுபோலத்தான்.

மந்த்ரம் 5

''இஹ சேத் அவேதீத்'' (இங்கு உண்மையைத் தெரிந்து கொண்டானானால்) என்று சொன்னது கட்டாயம் இந்த உயிர்

வாழ்க்கையிலேயே மெய்யறிவு பெற) வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக. அப்படி இல்லையென்றால், அது பேரிழப்பு என்று வேதம் கூறியிருக்கின்றது. இங்கு, இந்த மனிதப் பிறவி இருக்கும்பொழுதே, கட்டாயம் மெய்ப்பொருள் தெரிந்து கொள்ளப்படவேண்டும் என்பதற்காக இது கட்டாயமான கடமை யாக வற்புறுத்தப்படுகிறது. இங்கு மெய்ப் பொருளைத் தெரிந்து கொண்டவனுக்கு, அவனுடைய பிறவியானது பயனுள்ளதாகிறது என்பது கருத்து. இங்கு (இந்தப் பிறவியிலேயே) ஒருவன் தெரிந்து கொள்ளாவிட்டால், அவனது பிறவி வீணாகிறது. மேலும், வாய்ப்பை நழுவவிட்ட பெரும் நஷ்டமும் உண்டா கிறது.

பிறவி, மரணம் என்ற இடையறாத சுழலில் சிக்கி அழியும் நிலையைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு, கட்டாயமாக மெய்ப் பொருள் அறியப்படவேண்டும்.

இத்தகைய அறிவினால் கண்கூடாக என்ன ஏற்படும் என்று சொல்லப்படுகிறது. ''பூதேஷு பூதேஷு'' என்ற (உபநிஷத்தின்) சொற்களுக்கு ''அசைவனவும் அசையாதனவும் ஆகிய எல்லாவற்றிலும்'' என்று பொருள். அவற்றை நன்றாகப் புரிந்து அறிந்து, ஒன்றாய் நின்று உலக இயல்புகளில் ஒட்டாத ஆத்ம மெய்ப்பொருளாகவே இவற்றைப் பார்க்க வேண்டும். (ஸம்ஸ்க்ருத மொழியில்) தாதுக்களுக்கு பல அர்த்தங்கள் இருப்பதால், 'சித்வா' ('அடுக்கி' என்ற பொருளுள்ள) சொல் சரி வராது. எனவே 'விசித்ய' என்ற சொல் பயன்படுத்தப் பட்டது). மெய்ப்பொருளைப் பொய்ப் பொருளிலிருந்து பிரித்தறியும் ஆற்றலுள்ள அறிவாளிகள், வெளியுலகப் பொருள் களில் ஆசையை அகற்றி உடல் முதலிய இவ்வுலகத்தை விட்டு நீங்கி, 'நான்' 'எனது' என்ற உணர்வுகள் அகன்று, அழிவில்லாத, நித்தியமான பேரறிவாகிறார்கள்.

இரண்டாவது கண்டம் முற்றிற்று.

மூன்றாவது கண்டம் (வாக்ய-பாஷ்யம்)

''ப்ரஹ்ம ஹ தேவேப்ய:'' (பரம்பொருள் தேவர்களுக்கு வெற்றி வாங்கித் தந்தது) என்ற கேனோபநிஷத் வாக்கியம், பரம்பொருள் அறிவதற்கரியது என்று கூறுவதுடன், பெரு முயற்சி செய்து (அதை அறிய வேண்டும்) என்பதைக் குறிக்கிறது. இதோடு பிரம்ம வித்யை என்ற மெய்யறிவு முடிந்தது. மனிதனுடைய குறிக்கோள் எதைச் சார்ந்து இருக்கிறதோ அந்தப் பிரம்ம வித்யை (பரம் பொருள் பற்றிய உபதேசம்) முடிவுற்றது.

இதற்கு மேல், பரம்பொருள் அறிதற்கரியது என்பது சொல்லப்படுகிறது. அரியது என்றால்தான் அதை அறிவதில் ஒருவன் அதிகமான முயற்சியை மேற்கொள்ளுவான்.

(அல்லது வேறு வகையாகப் பொருள் சொன்னால்), ஒருவனுக்கு ஆசாபாசங்கள் நீங்கி மன அடக்கம் முதலியன உண்டாக வேண்டும் என்ற கருத்தில் உபநிஷத் (இந்த பரம் பொருளறிவைப் புகழ்ந்து கூறுகிறது). பரம்பொருளைப்பற்றிய அறிவுக்கு மன அடக்கம் முதலியவை வழிகளாக வகுக்கப் பட்டிருக்கின்றன. உபநிஷத் அதைப் புகழ்வதற்காக (இந்தப் பகுதியைக் கூறுகிறது). மன அடக்கம் முதலியவை இல்லாத, ஆசாபாச, விருப்பு வெறுப்புக்கள் முதலியன நீங்காத ஒருவனுக் குப் பரம் பொருளைப் பற்றிய அறிவிற்கு வேண்டிய ஆற்றல் இருக்காது அல்லவா? வெளி உலகம் பொய்யானது என்ற மெய்யறிவினால் மட்டுமே பரம்பொருளைத் தெரிந்து கொள்ள முடியும் என்பதே காரணம். இதனால், ''வெற்றி நம் சொந்த ஆற்றலினால் வந்தது'' என்று எண்ணிய அக்னி முதலிய தேவதைகளின் கர்வத்தை அழித்து, கர்வம் நீங்கியவுடன் அதன் பிறகு, உண்மையறிவை (உபநிஷத்) புகட்டுகிறது. மன அடக்கம் முதலிய சாதனங்களைக் கூறுவதற்காக அவற்றைப் புகழ்கிறது.

அல்லது, இன்னும் வேறு விதமாகப் பொருள் கொண்டால், குணங்கள் நிறைந்த (ஸகுணமான) இறைவனை உபாஸிப்பது இங்கு சொல்லப்பட்டது. (பொதுவாக சாமான்ய மக்கள்) எதை உபாஸிக்கிறார்களோ அது (பரம்பொருளன்று) என்று சொல்லிய கேனோபநிஷத், பரம்பொருள் உபாஸனைக்கு உரிய பொருளன்று என்று (ஏற்கனவே) மறுத்துவிட்டது. அப்படி மறுத்து விட்டதால், (பரம்பொருள்) உபாஸனைக்கு உரிய பொருள் அன்று என்று தெளிவாகிவிட்ட பிறகு, அதே (குணங்குறிகளற்ற) பரம்பொருளை, குணங்களுடன் கூடி, தெய்வங்களின் வடிவிலும் தன் உள்ளத்திலும் (மனிதன்) வழிபட வேண்டும் என்ற இந்தப் பொருள் இங்கு சொல்லப்படுகிறது என்று கூறலாம்.

''இவ்வாறு தெய்வவடிவில் (பரம்பொருளை) 'தத்வனம்' என்று உபாஸிக்க வேண்டும்'' என்று (பின்னால் இதே உபநிஷத்தில்) சொல்லப்படவும் போகிறது. 'ப்ரஹ்மம்' என்பது இந்த இடத்தில் கடவுள் அல்லது இறைவனைக் குறிக்கும்; ஏனெனில் அதற்குரிய அடையாளங்கள் இங்கு சொல்லப் படுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலானவரும், நித்தியமான முழு அறிவு உள்ளவருமான இறைவனல்லாது, அக்னி முதலிய (தேவதைகளைத்) தோல்வியுறச் செய்து, ஒரு புல்லையும் வஜ்ராயுதம்போல் மாற்றும் ஆற்றல் வேறு யாருக்கும் இருக்க முடியாது. ''(அக்னிதேவதை) அந்தப் (புல்லை) எரிக்க முடிய வில்லை'' என்பது முதலிய அடையாளங்களால், ''ப்ரஹ்ம' (பரம் பொருள்) என்ற சொல் ''இறைவனைக்'' குறிக்கிறது என்று பெறப்படுகிறது. இல்லாவிட்டால், 'அக்னி புல்லை எரிக்க முடிய வில்லை, வாயு அதை அசைக்க முடியவில்லை, என்பதெல்லாம் நிகழ்ந்திருக்காது. இறைவனது இச்சையினால் புல்லும் வஜ்ராயுத மாகும் என்பது பொருந்துகிறது. உலகம் ஒழுங்கான நியதியில் இயங்குவதும் (இறைவனது) இச்சையினால்தான்.

சுருதி (வேதம்), ஸ்ம்ருதிகள் (அதன் வழி வந்த மெய்ந்நூல்கள்) இவைகள் மூலம், என்றுமுள்ள முழுப் பேரறிவாளனும், எல்லாவற்றிற்கும் ஆத்மாவும், எல்லா ஆற்றலும் படைத்தவனுமான இறைவன் (ஒருவன் இருக்கிறான்) என்பது உறுதியாகத் தெரிந்தாலும், மெய்ந்நூல்களின் பொருளை நன்கு நிச்சயிப்பதற்காக (இங்கு) மேலும் ஆராயப்படுகிறது. அந்த இறைவன் இருக்கிறான் என்பது எப்படித் தெரிகிறது என்று சொல்லப்படுகிறது.

தேவர், கந்தர்வர், யக்ஷர், ராக்ஷஸர், மூதாதையர், பிசாசுகள் முதலியவர்கள் நிறைந்ததும், சுவர்க்கம், ஆகாயம், பூமி, சூரியன், சந்திரன், கிரகங்கள், நக்ஷத்திரங்கள் என்று பல்வேறாகத் தோன்றுவதும், பல வகையான உயிர்களின் அநுபவங்களுக்குத் தகுந்த இடமாக இருப்பதும், அதற்கு வேண்டிய கருவிகளோடு கூடியதும், மிகவும் கைதேர்ந்த சிற்பிகளாலும் அமைக்க முடியாததும், காலம், இடம், காரணம் இவைகளால் ஒழுங்கு செய்யப்பட்ட முறையுடையதும், காரியம் செய்பவன், அதன் பலனை அநுபவிக்க வேண்டியவன் என்று வகுக்கும் வகை தெரிந்து ஓர் அறிவின் முயற்சியை முன்னிட்டதாகவும் ஏற்படுகிறது உலகம். ஒரு காரணத்தால் உண்டானதாய், மேலே சொல்லப்பட்ட இயல்பினை உடையதாக அது இருப்பதே இறைவன் இருக்கிறான் என்பதற்குச் சான்று. வீடு, அரண்மனை, தேர், படுக்கை, இருக்கை (என்பனவெல்லாம் அவற்றைத் திட்டமிட்டு அமைக்கிற ஒருவனது அறிவினால் ஏற்படுகின்றன. அதுபோல உலகத்திற்கும் ஓர் பேரறிவுள்ள கலைஞன் காரணகர்த்தாவாக இருக்க வேண்டும். அவனே இறைவன்).

கேள்வி : (உயிர்களின்) கர்ம வினைப்பயன்களாலேயே (இந்த உலகம் உண்டாகிறது. இறைவன் ஒருவன் தேவையில்லை) என்று சொல்லலாமே? இறைவன் வினைப்பயன்களை வைத்துக் கொண்டு (உலகத்தைப் படைப்பதில்) ஒரு கருவியாக மட்டும்

இருக்கிறான். (இன்ப துன்பங்கள்) பல வகைகளாக இருக் கின்றன. உயிர்கள் அவற்றைப் பெறுவதற்குரிய வழிகளும் பல வகைகளாக இருக்கின்றன. காலம், இடம், காரணம் இவை வடிவமாகி, ஒழுங்கான நியதியோடு காரியங்கள் நிகழ்வதும் நிகழாமலிருப்பதும் ஆகிற உலகின் வரைமுறை, என்றுமுள்ள எல்லாமறிந்த (இறைவனால்) படைக்கப்படுகிறது என்பது ஏற்புடையதன்று. கர்ம வினைகளினால்தான் (உலகம் அமை கிறது). எண்ணிப்பார்க்கவும் முடியாத அவற்றின் பலன்களுக்குக் காரணமாக அவைதான் இருக்க முடியும்.

கர்ம வினைகளே அவற்றின் பயன்களுக்கும் காரணமாக இருக்குமானால், இறைவன் என்ற அதிகமான ஒரு கற்பனை எதற்கு? எனவே, என்றுமுள்ளவனும், எல்லாவற்றையும் அறி யும் ஆற்றலை எப்பொழுதும் கொண்டவனுமான இறைவன் கர்ம வினைப் பயன்களுக்குக் காரணம் என்று கூறுவது தவறு என்று வாதிடப்படுமானால்:

பதில் : அது சரியன்று. பலவகைப்பட்ட (இன்பதுன்ப) அநுபவங் களுக்கு கர்ம வினைகளே காரணமாக இருத்தல் பொருந்தாது. ஏன்? கர்மவினைகள் அவற்றைச் செய்பவனைப் பொறுத்து அமைபவை. அறிவுள்ள ஒருவனது முயற்சியினால் செய்யப் படும் கர்மவினை, அந்த முயற்சி நிற்கும் பொழுது ஓய்ந்து, (உடனே பலனைத் தராமல்), வேறு ஓர் இடத்திலோ, வேறு நேரத்திலோ, அதற்குரிய குறிப்பிட்ட காரணத்திற்கு ஏற்ப அதைச் செய்தவனுக்குப் பயனைத் தருகிறது. இதனால், செய்தவனைத் தவிர வேறு ஒரு சக்திதான் கர்ம வினைகளின் பலனைத் தருகிறது என்பதை மறுக்க இயலாது.

கேள்வி : ''நீ என்னால் செய்யப்பட்டிருக்கிறாய். எனக்கு உகந்த பலனை அடைவதற்காக நான் உன்னைச் செய்திருக் கிறேன்'' என்று காரியம் செய்பவனே பலன் வரும் காலத்தில் அதை ஏற்படுத்திக் கொள்கிறான் என்று கூறலாமல்லவா?

பதில் : இடம், காலம் இவற்றினால் ஏற்படும் குறிப்பான காரணங்களின் நுட்பங்களை (ஒரு சாதாரண மனிதன்) அறிய முடியாது. இடம் முதலியவற்றின் வேற்றுமைகளை அறிந்தவ னாக ஒருவன் தன்னிஷ்டப்படி செயல்படுவானானால், அப்பொழுது, அவனுக்கு விருப்பமில்லாத ஒரு பலனைக் குறித்துக் காரியம் செய்ய மாட்டான். காரணமுமில்லாமல், விருப்பமுமில்லாமல் தன் உடலின் தோலைப்போல தன்னோடு நெருங்கிய தொடர்புள்ள காரியத்தை (தனது விருப்பத்திற்கு) மாறாகச் செய்யவே மாட்டான்.

மேலும், ஒருவனால் செய்யப்பட்ட காரியம் அதைச் செய்யாத மற்றொருவனிடம், காந்தத்தால் இழுக்கப்படும் இரும்புத் துண்டைப்போல், போய் ஒட்டாது. காரியம் செய்தவனிடத்திலேதான் ஒட்டி நிற்கும். (பிரகிருதியின்) பௌதிகக் கூறுகளை அது ஒட்டி நிற்கும் என்றால் அதுவும் சரியன்று. ஏனெனில், (பௌதிகக் கூறுகளான) அவை (காரியம்) செய்வதற்குக் கருவிகளாய் மட்டுமே இருக்கின்றன. காரியம் செய்பவனுடைய செயலுக்குக் கருவியாக இருக்கக் கூடிய பௌதிகக் கூறுகள், காரியம் செய்யும் காலத்தில் செய்யப்படும் செயல்கள் முடிவுற்றவுடன், கலப்பை முதலியவை காரியம் முடிந்தவுடன் உழவனால் தனியாக வைக்கப்பட்டு விடுவதைப் போல, காரியம் செய்பவனால் கைவிடப்பட்டு, அக் காரியத்தின் பலனை பின்னொரு காலத்தில் (நியதியாக) தருவதற்குத் தகுதியுடையன அல்ல. ஒரு கலப்பை, வயலிலிருந்து தானியங்களை தானே எடுத்துக் கொண்டு வீட்டிற்குள் வருமா என்ன? பௌதிகக் கூறுகளும், கர்மவினைகளும் அறிவற்ற ஜடமாகையால், அவைகளுக்குத் தாமாகவே இயங்குவது, செயல் செய்வது என்பது பொருந்தாது.

(ஜடப் பொருளான) காற்று அசைவது போல இவையும் தாமே இயங்குவதாகச் சொல்லக் கூடாதா என்றால், அதுவும் சாத்தியமில்லை. அறிவற்ற (ஜடமான) காற்றுக்கும் தன்னிச்சை

யாக இயங்கும் சக்தி இல்லை; தேர் முதலிய (அறிவற்ற பொருட்களில்) இவ்வாறு காணப்படவில்லை. (அங்கும் ஒரு தேரோட்டி வேண்டியிருக்கிறது).

கேள்வி : காரியங்கள் தாமே (பலனைத் தரும்) என்று வேதம் கூறுகிறது. காரியத்தினால் பலன் அடையப்படும் என்று வேதமே கூறுகிறது. ''சுவர்க்கம் செல்ல விரும்புகின்றவன் (அக்னிஷ்டோமம் முதலிய) யாகங்களைச் செய்ய வேண்டும்'' என்று அது கூறுகிறது. இறைவன் முதலிய எதுவும் (அங்கு பலன் கொடுப்பதாகக் கூறப்படவில்லை). (வேதம் முதலிய) பிரமாணங்களினால் இவ்வாறு அறியப்படும் பொழுது நீங்கள் கூறுவதெல்லாம் வீண் பேச்சு. இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதிலோ எந்த வேறு பிரமாணமும் (ஆதாரமும்) இல்லை.

பதில் : (மேலே சொன்ன வாதம்) சரியன்று. கண்கூடாகத் தெரியும் ஒரு நியாயத்தைப் புறக்கணிப்பது முறையாகாது. காரியம் அல்லது செய்வினை இருவகைப்படும்: (i) கண் கூடாகப் பலன் தருவது, (ii) கண்ணுக்குத் தெரியாமல் பலன் தருவது. கண்ககூடாகப் பலன் தரும் செய்வினையும் இருவகைப் படும் (1) அதாவது, உடனடியாகப் பலன் தருவது (ii) பிற்காலத் தில் பலன் தருவது. உடனடியாகப் பலன் தருவது என்பது (ஓரிடத்துக்குச்) செல்லுதல், சாப்பிடுதல் போன்றது. இதற்கு வேறாக பிற்காலத்தில் பலன் தருவது என்ற செய்வினை உழுது (தானியம் விளைவிப்பது), உழைபபிற்கு (ஊதியம் பெறுவது) போன்றது. இங்கு, உடனடியாகப் பலன் கொடுப்பது என்ற வினை, அப்படிக் கொடுத்தவுடனேயே அழிந்து போவது; பிற்காலத்தில் பலன் தரும் காரியமோ எனில், பலன் தெரியும் முன்னமே அழிந்து போவது. (காரியத்தின் பலன் பின்னால் வரும் என்பது கருத்து).

உழுது பயிர் விளைவிப்பது. இன்னொருவருக்குப் பணி விடை செய்வது முதலியவற்றின் பலன், உழுகிற தன்னையும்

யாருக்காக உழுகிறார்களோ அந்த நிலச் சொந்தக்காரனையும் சார்ந்து ஏற்படுகிறது. மேலே சொன்ன இரண்டு முறைகளைத் தவிர, தன்னிச்சையான காரியம், அதனுடைய பலன் என்பது காணப்படவில்லை. இங்ஙனமிருக்க, காரியங்களின் பலனை அடைவதில், கண்கூடாகப் பார்க்கப்படும் நியாயத்தை மறுப்பது முறையன்று. ஆதலால், யாகம் முதலிய காரியங்கள் முடிந்த வுடன், என்றும் உள்ளவரும், செய்பவன், செயல், அதன் பலன் என்ற வகைகளை அறிந்தவருமான இறைவன், பணிவிடையைப் பெற்ற எஜமானனைப்போல, யாகம் முதலியவற்றிற்கு ஏற்ப அவற்றின் பலன் அளிப்பவர் என்பது பொருத்தமாகிறது. அவரும், எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக, எல்லாக் காரியங் களுக்கும் உள்ள பலன்களை அறியும் சாக்ஷியாக, என்றும் அழியாத அறிவே இயல்பினராக, உலகத்து இயல்புகளால் தொடப்படாதவராக இருக்கிறார். இதைச் சொல்லும் வேத வாக்கும் இருக்கிறது: ''உலக இயல்பிற்கு அப்பாற்பட்ட இறைவன், உலகத் துன்பங்களினால் பாதிக்கப்படுவதில்லை'' (கட உபநிஷத் II - 2.11), என்றும், ''மூப்பையும் மரணத்தையும் கடந்து நிற்கிறான்'' (பிருஹதாரண்யக உபநிஷத், III -5.1) என்றும், ''மூப்பில்லாதவன், மரணமில்லாதவன்'' (சாந்தோக்ய உபநிஷத், VIII - 7.1) என்றும் ''விரும்பியதை அடைபவன், எண்ணியதை முடிப்பவன்'' (சாந்தோக்ய உபநிஷத், VIII - 7.1) என்றும், ''இவன் எல்லாவற்றிற்கும் ஈசுவரன்'' (மாண்டூக்ய உபநிஷத், VI) என்றும், ''நல்லதையே செய்யவைக்கிறான்'' (கௌஷீதகி உபநிஷத் III - 9) என்றும், இறைவன் தான் சாப்பிடாமல் கர்மவினைகளின் பலன்களைச் சாப்பிடும், அநுபவிக்கும் உயிரை சாக்ஷியாகப் பார்த்துக் கொண்டிருக் கிறான்'' (ச்வேதாச்வதர உபநிஷத், IV-3) என்றும், ''இந்த அழியாப் பரம்பொருளினுடைய கட்டளையினால், சூரியனும் சந்திரனும் வலம் வருகிறார்கள்'' (பிருஹதாரண்யக உபநிஷத், III - 8.9) என்றும் கூறும் வேதவாக்குகள், உலகத்தைக்

கடந்தவரும் இரண்டற்ற ஆத்மா வாயிருப்பவரும், என்றும் சுயேச்சையான வருமான இறைவன் இருக்கிறான் என்பதற்கு ஆதாரங்களாகும். (வேதத்தை ஒட்டிவந்த) மெய்ந்நூல்களிலும் (ஸ்மிருதிகளிலும்) ஆயிரக் கணக்கில் (இதற்குச் சான்றுகள்) இருக்கின்றன. இவையெல்லாம் வெறும் கற்பனையான புகழ்ச்சியுரைகள், (அவைகளை அப்படியே உண்மையென்று எடுத்துக் கொள்ளவேண்டிய தில்லை) என்று எண்ணவும் இயலாது. வேறு ஒன்றையும் சாராமல் தாமே நேரடியாக மெய்யறிவை உண்டாக்கும் ஆற்றல் இந்த (சுருதி, ஸ்ம்ருதிகளின்) வாக்குகளுக்கு இருப்பதே காரணம். அப்படி (அவைகளால்) உண்டாகும் அறிவு இன்னொரு அறிவினால் மறுக்கப்படவும் இல்லை.

மேலும், மறுத்துச் சொல்லும் எதுவும் இல்லை. ''இறைவன் இல்லை'' என்று மறுக்கும் சான்றுகளும் இல்லை. (''இறைவன் இல்லை என்பதால், இல்லாத இறைவன் இருப்ப தாகக் கூறுவதற்கு) மறுப்புச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. (அதனால் மறுப்புச் சொல்லவில்லை'') என்றால், அன்று; இதற்கு விடை ஏற்கனவே சொல்லப்பட்டிருக்கிறது.

கேள்வி : ''(உயிர்களைத்) துன்புறுத்தாதே'' என்ற வேதவாக்கில், 'துன்புறுத்தல் கூடாது' என்று மறுப்பு இருக்கிறது. உலகில் உயிர்களைத் துன்புறுத்துவது கண்கூடாக இருப்பதால் இந்தத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. இறைவன் விஷயத்திலோ அவன் இருக்கிறான் என்ற பேச்சே எழாத பொழுது, அவர் இல்லை என்று மறுத்துச் சொல்லும் அவசியம் இல்லை என்று சொல்லப்படுமானால் (பதில்) இறைவன் இருக்கிறான் என்பதற் குரிய ஆதாரங்கள் ஏற்கனவே கூறப்பட்டுவிட்டன.

(அல்லது வேறொரு வகையில் இங்கு பொருள் கொண்டால்) 'அப்ரதிஷேதாத்' (மறுக்கப்படவில்லை) என்ற சொல்லுக்கு, கர்மவினைகளின் பலனை இறைவனும், காலமும்

கொடுக்கிறார்கள் என்பதற்கு மறுப்பு (ப்ரதிஷேதம்) எதுவும் இல்லை என்று பொருள் கொள்ளலாம். வேறு காரணங்களை எதிர்பாராமல், செய்பவனாலே மட்டும் ஏவப்பட்டுப் பலனைக் கொடுக்கும் காரியம் காணப்படவில்லை. அவனால் மட்டும் செய்யப்படும் யாகம் பாதியில் நின்று போனால் பிறிதொரு காலத்தில் பலனைக் கொடுக்கமாட்டாது. ஆனால் இறைவனைச் சார்ந்து செய்யப்படும் யாகம் பாதியில் நின்றாலும் பலன் கொடுக்கும்.

ஒரு சேவகன் (தன் பணிவிடையினால்) தன் தலைவ னுடைய மனதில் (மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கூலி பெறுவது போல), யாகம் முதலிய காரியங்கள் பாதியில் நின்று போனாலும், இறைவனது சித்தத்தில் மகிழ்ச்சியை உண்டு பண்ணும் பொழுது, (தலைவனுடைய மனம், சேவகனுடைய பணிவிடையினால் மகிழ்ந்து பலன் தருவதுபோல), இறைவன் மூலம் (யாகம் முதலியவற்றைப்) பாதி முடித்தவனுக்கும் கூட பலன் கிடைக்கிறது என்பது பொருத்தமுடையது. மேலும் பொருள்கள், இடம் மாறினாலும், காலம் மாறினாலும், தத்தம் இயற்கையை விடமாட்டா. இதற்கு எதிராக நூறு வாக்கியங்களை மேற்கோள் காட்டினாலும் ஏற்றுக் கொள்வதற்கில்லை. இடமும் காலமும் மாறுவதனால், நெருப்பு தன் சூட்டை இழந்துவிடுமா என்ன? இதே போல காரியங்களின் பலனும் பிறிதொரு காலத்தில் மேலே சொன்ன இரண்டு வகைகளிலும் ஏற்படு கின்றது என்பது காணப்படுகிறது.

விதை, நிலம், உரம், பாதுகாப்பு என்ற அறிவு (நிலம் உழுபவனுக்கு) இருப்பதுபோல, காரியம் செய்பவனைச் சார்ந்து (அக்காரியத்தின்) பலன் ஏற்படுகிறது. உழுவது முதலியவற்றைப் பற்றிய அறிவைச் (சார்ந்து தானிய விளைச்சல் என்ற பலன் உண்டாவதுபோல) பணிவிடை முதலியன தலைவனின் மனத் தில் மகிழ்ச்சியைப் பொறுத்துப் பலன் வருகிறது.

(இதற்கு மாறாக), யாகம் முதலியவற்றின் காரியங்களுக்கும் (அவை பற்றி) நன்கு அறிவுபடைத்த யாகம் செய்பவனின் நோக்கத்தின்படி பலன்கள் ஏற்படுகின்றன என்பது சரியில்லை. அவை (யாகங்கள் செய்யப்பட்ட பிறகு) வேறு காலத்தில் ஏற்படுவதால், காரியம், இடம், காலம், காரணம், பக்குவம் என்ற பாகுபாடுபற்றிய ஓர் சிறந்த அறிவைச் சார்ந்து அவற்றின்பலன் ஏற்படுவது பொருத்தமாக இருக்கிறது. அந்த அறிவே இறைவன்.

ஓர் (தலைவனுக்குப்) பணிவிடை செய்தல் முதலிய காரியங்களுக்கு ஏற்ப, அந்தத் தலைவனின் மனத்தில் ஏற்படும் மகிழ்ச்சியைப் பொறுத்து (வேலைக்காரனுக்குக் கிடைக்கும் வெகுமதி போன்ற, பலன்களைப் போல. எல்லாமறிந்த, எல்லாப் பிராணிகளினுடைய எண்ணங்கள், காரியங்கள், காரியங்களின் பலன், இவற்றின் பாகுபாடுகள் இவற்றை அறிந்த இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பது உறுதி. ''நேரடியாக உணரப்படும் பரம் பொருள், ஆத்மா; எல்லாவற்றிலும் உள்ளுறை மெய்ப் பொருள் அது'' (பிருஹதாரண்யக உபநிஷத், III - 4.1) என்று வேத வாக்கும் இருக்கிறது.

அந்தப் பரம்பொருளே, உயிர்களுக்கெல்லாம் உயிரான மெய்ப்பொருள். ''அதைத் தவிர பார்க்கின்ற, கேட்கின்ற, நினைக்கின்ற, அறிகின்ற வேறு ஒன்றும் இல்லை''. ''எனவே அதைத் தவிர வேறு அறிகின்றவன் இல்லை'' (பிருஹதாரண்யக உபநிஷத், III - 8.11) என்று, ஆத்மா என்ற பரம்பொருளைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்று மறுத்துச் சொல்லும் வேத வாக்குகள் இருக்கின்றன. ''அது நீயாக இருக்கிறாய்'' (சாந்தோக்ய உபநிஷத்) என்று (அந்தப் பரம்பொருள்) எல்லாவற்றிலும் உட்பொருளாக இருக்கும் தன்மை உபதேசிக்கப் பட்டிருக்கிறது. ஒரு மண்ணாங்கட்டி தங்கத்தாலானது என்று எங்கேனும் உபதேசிக்கப்படுமா?

கேள்வி : அறிவு, ஆற்றல், செயல், தியானிக்கப்படும் பொருள், தியானிப்பவன், தூய்மையானது, தூய்மையற்றது, விடுதலை

பெற்றது, விடுதலை பெறாதது என்று உயிர்களிடையே வேற்றுமை காணப்படுவதால் மெய்ப்பொருளும் ஒவ்வொரு உயிரினும் வேறுபடுகிறது என்று சொல்லக்கூடாதா?

பதில் : அன்று; வேற்றுமை அறிவு (வேற்றுமைகளற்ற மெய்யறி வினால்) அடிபட்டுப் போவதால்.

இங்கு எதிராளி மறுபடி மறுப்புச் சொல்கிறான் : பிறப்பு, இறப்புக்குள்ளான மனிதன் இறைவனைவிட வேறானவன் அல்ல என்று எது கூறப்பட்டதோ அது தவறாகும். இறைவனுக்கும் உயிர்களுக்கும் வேற்றுமை அல்லவா இருக்கிறது? எருமைக்கும் குதிரைக்கும் (எப்படி இயல்புகள் வேறு வேறோ) அவ்வாறே (இறைவனுக்கும் உயிர்களுக்கும்) இயல்புகள் வெவ்வேறு.

வேறு வேறு இயல்புகள் இருப்பதாக எப்படிக் கூற முடியும் என்றால், இறைவனுடைய அறிவு எப்போதும் உள்ளதாயும், எல்லாவற்றையும், அறிவதாயும், சூரியனுடைய ஒளியைப் போல அமைந்திருக்கிறது. இதற்கு மாறாக, சிற்றுயிர்களுடைய (அறிவு) மின்மினிப் பூச்சியைப் போல, மிகச் சிறியது. மேலும், இறைவனுடைய ஆற்றல் எப்போதும் உள்ளதாகவும் எல்லாப் பொருட்களையும் அடக்குவதாயும் இருக்கிறது. (சிற்றுயிர்களின்) ஆற்றலோ இதற்கு நேர்மாறானது. (இறைவன்) காரியம் செய்வதும், இறைவன் அறிவு வடிவமாக இருப்பதனாலேயே ஏற்படுகிறது, சூட்டையே தன்மையாகக் கொண்ட நெருப்பு, அது இப்படி இருப்பதாலேயே அதன் எரிக்கும் செயல் நடைபெறு வதைப் போல. ஓர் அரசன், காந்த இரும்பு, ஒளி இவற்றின் செயற்பாடுபோல, மெய்ப்பொருள் தான் மாறாமலே இருந்து கொண்டு (பிறவற்றைக் காரியம் செய்ய வைக்கிறது). மற்றவை யெல்லாம் இதற்கு மாறான இயல்புடையவை. ''வழிபடு வாயாக!'' என்ற வேதவாக்கு இருப்பதால், இறைவன் குருவை யும் அரசனையும்போல வழிபடப்பட (உபாஸிக்கப்பட) வேண்டி யவன். உபாஸனை செய்பவனோ, (குருவை வழிபடுகிற)

சீடனையும் (அரசனை வழிபடுகிற) சேவகனையும் போன்றவன். ''குற்றங்கள் எல்லாம் நீங்கியவன்'' என்று வேதம் (இறைவனைப் பற்றிப்) பேசுவதால், இறைவன் என்றும் தூயவன். ''புண்ணியத் தினால் புண்ணியம் (வளர்கிறது)'' என்ற வேதவாக்கினால், (இறைவனைக் காட்டிலும்) மாறான இயல்புடையவை மற்றச் (சிற்றுயிர்கள்).

இந்தக் காரணத்தினாலேயே, இறைவன் என்றும் சுதந்திர மானவன் என்றும் குற்றம் குறைகள் உள்ள உயிர்கள் (இறைவனைவிட) வேறானவை என்றும் பெறப்படுகிறது. மேலும், எங்கு அறிவு முதலிய இயல்புகளில் (ஏற்றத் தாழ்வுகள்) இருக்கின்றனவோ, அங்கு வேற்றுமைகள் காணப்படு கின்றன, குதிரைக்கும் எருமைக்கும் போல. இவ்வாறே அறிவு முதலிய இயல்புகளில் வேற்றுமைகள் இருப்பதால் சிற்றுயிர்கள் இறைவனைவிட வேறானவை என்று ஏன் சொல்லக்கூடாது?

பதில் : அன்று. ''அவன் (இறைவன்) வேறு; நான் வேறு என்று நினைக்கிறவன் உண்மையை அறியாதவன்'' (பிருஹதாரண்யக உபநிஷத், I - 4.10) ''அவர்கள் அழியக் கூடிய உலகங்களை அடைகிறார்கள்'' (சாந்தோக்ய உபநிஷத் VII-25.2), ''ஒரு மரணத்திலிருந்து இன்னொரு மரணத்தை அடைகிறான்'' (கட உபநிஷத், II-1.10) என்று (வேதங்கள்) வேற்றுமைப் பார்வையை இகழ்ந்து மறுக்கின்றன. இதற்கு மாறாக (வேற்றுமை களற்ற) ஒன்றே உண்மை என்பதைக் கூறும் வேத வாக்குகளோ ஆயிரக் கணக்கில் இருக்கின்றன.

(சிற்றுயிர்களுக்கும் இறைவனுக்கும்) அறிவில் ஏற்றத் தாழ்வு இருப்பதைக் கொண்டு, (''இறைவன் வேறு, உயிர்கள் வேறு என்றுதான் சொல்ல வேண்டும்'') என்ற கூற்றுக்குப் பதில் உரைக்கப்படுகிறது. அந்தக் கூற்று சரியன்று. அவ்வித ஏற்றத் தாழ்வு இருப்பதை ஒப்புக் கொள்ள முடியாது. (உயிர்களி னுடைய) புத்தி முதலியவற்றைவிட வேறாக, இறைவனிட

மிருந்து மாறுபட்ட எதுவும் உயிர்களின் உட்பொருளான ஆத்மா என்ற மெய்ப் பொருளில் இல்லை. இரண்டற்ற இறைவன் ஒருவனே எல்லா உயிர்களுக்கும் ஆத்மாவாய், என்றும் சுதந்திர மானவனாய் ஒப்பப்படுகிறான்.

கண், புத்தி முதலியவற்றின் சேர்க்கையினால் தொடர்ச்சி யாக வரும் ''நான்'' ''என்னுடையது'' என்ற பொய்யறிவின் கட்டு அறுபடாத நிலையில், என்றும் உள்ளதும், என்றும் தூயதும், (எல்லாவற்றையும்) அறிவதும், சுதந்திரமானதும், அறிவே வடிவானதுமான மெய்ப்பொருள் உணரப்படாத நிலை யில், புத்தி, புத்தியின் தொழில்கள் என்ற இவை அவற்றின் வித்தான (அறியாமையினால்) விளைந்திருக்கின்றன. இவை தாம் இருக்கும் உடம்போடு கூடி, பொய்யானதொரு மாயையாக அழியும் தன் ஓட்டங்களோடு, இறைவனுடைய இயல்புக்கு முற்றிலும் மாறுபட்டதாக இந்த சிற்றுயிர் (ஜீவன்) ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த அறியாமையின் தொடர்ச்சி அறுபடாத பொழுது, உலகியல் வாழ்க்கை ஏற்படுகிறது. அறுபட்ட பொழுது, முக்தி நிலையாகிறது.

இந்தச், (சிற்றுயிர் வாழ்க்கை) உடம்பில் ஒட்டிக் கொள்ளும் மண் (தட்டினால் உதிர்ந்து விடுவதைப்போல), பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே அழிந்து போகின்ற தன்மையுடையது. தேவர், மூதாதையர். மனிதர் முதலிய பிரிவுகள் கொண்டது. பௌதிகமான இயற்கைச் சக்திகளின் கூட்டமாயிருப்பது. ஆனால், இவை தூல, சூக்ஷ்ம, காரண உடம்புகள் என்று மூன்று வகையானவை. நான்காவதான இறைவனை விட இவை வேறாக ஏற்கப்படவில்லை.

புத்தி முதலியனவற்றால் (பொய்யாகக்) கற்பிக்கப்பட்டு, மெய்ப்பொருளைவிட இவை வேறானவை என்ற கருத்தில் அல்லவா, (இறைவனது) இயல்பு உயிர்களின் இயல்பைவிட வேறுபட்டது என்று எதிராளி சொன்னான்? இந்த வாதத்தில்

(இயல்பில் வேற்றுமை என்பதற்கு) ஆதாரம் எங்கும் இல்லை. ஏனெனில் இறைவனைத் தவிர உயிர்கள் என்று வேறாக ஒன்றும் இல்லை. அப்படியிருக்க வேறுபட்ட அறிவுக்கு இடம் ஏது? (''ஆகாயத்தாமரை மணம் உள்ளது, தாமரையாக இருப்பதால், வேறு பல தாமரைகளைப் போல'' என்ற வாதத்தில், ''தாமரையாக இருப்பதால்'', என்பது 'மணம் உள்ளது' என்று கூறுவதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது. ஆதாரம் அல்லது ''ஆகாயத்தாமரை'' என்பது அந்த மணத்திற்கு இடமாகச் (ஆச்ரயமாகச்) சொல்லப்படுகிறது. ஆனால் ''தாமரையாக இருப்பது'' என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏனெனில் ஆகாயத் தாமரை என்று ஒன்றும் உலகில் கிடையாது. அப்படி ஒரு தாமரையே கிடையாது என்றால் ''அது தாமரையாக இருப்ப தால், மணமுள்ளது'' என்பது எப்படி வரும்? இதுபோல இறை வனைத் தவிர உயிர்கள் என்ற வேறு ஒன்றும் கிடையாது என்று இருக்கின்ற பொழுது, அவற்றின் அறிவில் ஏற்றத்தாழ்வோ, அதன் காரணமாக அவை இறைவனிடமிருந்து வேறுபட்டவை என்பதோ எப்படி வரும்?

கேள்வி : ''இறைவன் உயிர்களைவிட வேறான இயல்பை உடையவன் அல்ல வென்றால், (உயிர்களுக்கு ஏற்படும்) இன்ப துன்பங்களெல்லாம் அவனுக்கும் ஏற்பட்டுவிடுமே?

பதில் : அன்று; (சூரியன் தான் எதிலும் ஈடுபடாமல் ஒளி கொடுப்பவனாய் மட்டும் இருந்து கொண்டு உலக நடவடிக்கை களுக்கு எப்படிக் காரணமாகின்றானோ) அதைப்போல, (இறைவன் உலக நடவடிக்கைகளில் கலக்காமல்) இருந்தாலும், தவறான அறிவினால் (உலக நடவடிக்கைகளில் அவன் தொடர்புள்ளவன் போல்) உலகம் எண்ணுகிறது. (விளக்கமாகச் சொன்னால்), எப்படிச் சூரியன் எப்பொழுதும் ஒளியுள்ளவனாக இருந்து, உலகம் பகலில் தெரிவதற்கும் இரவில் தெரியாததற்கும் காரணமாகி, மனிதனுடைய தவறான அறிவினால், இரவென்றும், பகலென்றும், சூரியன் (கிழக்கே) உதிக்கிறது என்றும். மேற்கே

அஸ்தமிக்கிறது என்றும் இந்தக் காரியங்களைச் செய்பவனாய்ப் பொய்யாகக் கற்பனை செய்யப்படுகின்றானோ, அதுபோலவே, இறைவனும், எப்பொழுதும் நீங்காத அறிவுடையவனாய் இருந்து கொண்டே, மக்களிடையே அறிவின் அழிவு, இன்ப துன்பங்கள், நினைவுகள் முதலியவற்றிற்கு காரணமாக மட்டும் ஆகி, மக்களின் அறியாமையால் அவனிடம் இல்லாத இயல்பு களை அவனிடத்தில் கற்பனை செய்து, அவன் உயிர்களை விட வேறாக (எங்கோ தொலைவில்) இருப்பவனென்றும், இன்ப துன்பங்களுக்கு இருப்பிடமென்றும் எண்ணப்படுகிறான். அவனிடத்தில் உண்மையில் இவை ஏதும் கிடையாது.

ஒவ்வொருவனும் தன்னைப் போலவே இறைவனையும் கற்பனை செய்து கொள்கிறான். மேகங்களால் மறைக்கப் பட்ட ஆகாயத்தில் சூரியன் கண்ணுக்குத் தெரியாத பொழுது, தன் கண்ணுக்குத் தெரியவில்லை என்பதால் ''சூரியன் இங்கு இப்பொழுது ஒளியை இழந்து விட்டான்'' என்று மனிதன் சொல்கிறான். இது மடமையாகும். சூரியன், அதே சமயம் மேகங்களில்லாத வேறு இடங்களில் பிரகாசித்துக் கொண்டுதான் இருக்கிறான் என்பது தெரியாமல் மனிதன் தவறு செய்கிறான். இது போலவே, தனது புத்தி முதலியவற்றின் செயல்கள் காரண மாக, தோன்றுவதும் மறைவதுமாக இருக்கின்ற இன்ப துன்பங்க ளோடு தன்னை ஒன்றுபடுத்திக் கொண்டு, அதனால் உண்டாகும் புத்தி மயக்கத்தினால் (இறைவனிடமும்) அவை எல்லாம் இருப்பதாகத் தவறாக எண்ணிவிடுகிறான் என்று கூறுவதே பொருத்த மாகும்.

இதற்குச் சான்றாக கீதை முதலிய வழிநூல்களும்: ''அறிவு, நினைவு, அவற்றின் இழப்பு எல்லாம் என்னுடையனவே'' (கீதை XV - 15), ''(இறைவன்) எவருடைய பாவத்தையும் எடுத்துக் கொள்வதில்லை'' (கீதை : V - 15) என்று கூறுகின்றன. சூரியனி டம் (தோன்றுதல், மறைதல்) என்ற இயல்புகள் இருப்பதாக நம் அறியாமையால் ஏற்றிவைத்துப் பேசுவதுபோல என்றுமே

தன்னிச்சையானவனும் இரண்டற்றவனுமான இறைவன் பேரில் இன்ப துன்பங்கள் நிறைந்த உலக வாழ்க்கை, பொய்யாகக் கற்பனை செய்யப்பட்டதாகும். இறைவனிடத்தில் (பிறப்பு, இறப்பு, இன்பதுன்பங்கள்) இவை கிடையாது என்று எடுத்துக் கூறும் மெய்ந்நூல்களின் பலத்தைக் கொண்டு இவ்வாறு ஏற்கப் பட்டிருக்கிறது. எனவே, எங்கும் முரண்பாடு ஏதுமில்லை.

மேற்சொன்னவற்றால், அறிவு முதலிய வேற்றுமைகள் யாவும் தனித்தனியே இறைவனிடத்தில் மறுக்கப்பட்டுவிட்டன. நுண்மை, அறிவு, எங்கும் நிறைந்து நிற்பது என்ற தன்மைகளில் வேற்றுமை இருப்பதாக எண்ணுவதற்கு எந்தச் சான்றும் இல்லா திருப்பதே இதன் காரணம். (வேற்றுமைகள் இருந்தால் மாறுந் தன்மை வரும்). மாறும் தன்மை இருந்தால், அழியுந்தன்மையும் வரும். முக்தி நிலையில் வேற்றுமைகள் இருப்பதை ஏற்க முடியாது. அப்படி ஏற்றால் முக்தி நிலையும் ஒருநாள் அழியும் என்று ஏற்கவேண்டி வரும். உண்மை அறியாதவனுக்கே வேற்றுமைகள் காணப்படுகின்றன. (அறியாமை) அழியும் பொழுது, (வேற்றுமைக்கு) இடமேதுமில்லை என்பதால், இறைவன் என்ற பரம்பொருள் இரண்டற்ற ஒன்று என்பது முடிந்த முடிவாயிற்று.

எனவே, உடல், புலன்கள், மனது, புத்தி, இவற்றால் அறியப்படும் பொருள், அதனால் உண்டாகும் உணர்வின் தொடர்ச்சி என்ற இவை 'நான்' 'எனது' என்ற அகந்தையோடு சேர்ந்து என்றுமுள்ள இறைவன் என்ற பேரறிவைவிட வேறான அறியாமை காரணமாக ஏற்படுகிறது; உள்ளதை உள்ளபடி உணர்ந்த மெய்யறிவினால் நீக்கப்படும் பொழுது, அழிகிறது அறியாமையின் அழிவே முக்தி என்று பெயர் சூட்டப்படுகிறது. இதற்கு மாறாக இருப்பது பந்தம் (கட்டு) என்று அழைக்கப் படுகிறது. இவை இரண்டுக்குமே உண்மை தெரிவதும் அல்லது தெரியாததும்தான் காரணமாக இருக்கிறது. (தெரிந்தால் முக்தி; தெரியாவிட்டால் கட்டு).

'ப்ரஹ்ம ஹ' என்ற (உபநிஷத் சொற்களுக்கு) இதிஹாஸம் அல்லது வரலாறு என்று பொருள். முன்னொரு காலத்தில், தேவர் களுக்கும், அசுரர்களுக்கும் போர் நடந்த பொழுது, உலகத்தைப் பாதுகாக்கும் பொருட்டு தன்னுடைய ஆணைகளின்படி நடக் கின்ற தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, அசுரர்களைப் பரம் பொருள் வென்றது. பரம்பொருளின் இச்சை ஏற்பட்ட மாத்திரத்தில் தேவர்களுக்கு வெற்றி ஏற்பட்டது என்பது கருத்து. அந்தப் பரம்பொருளின் வெற்றியில் தேவர்கள் பெருமை பெற்றார்கள். உலக நன்மைகாகச் செய்யப்படும் வேள்வி முதலியவற்றை அழிக்கும் அசுரர்கள் தோற்கடிக்கப்பட்ட பொழுது, தேவர்கள் வளர்ச்சியும், புகழும் பெற்றார்கள்.

'தே ஐக்ஷந்த' என்ற (உபநிஷத் சொற்கள்) (வெற்றிக்குத் தாங்களே காரணம் என்ற தேவர்களின்) எண்ணம் உண்மைக்கு மாறானதால் அதைக் கைவிட்டு விட வேண்டும் என்று அறிவுறுத்துவதற்காக எழுந்த வேதவாக்கு. இறைவனின் அருளால் வெற்றி ஏற்பட்டிருக்கிற பொழுது ''எங்களுடைய சொந்தத் திறமையினால் (இந்த வெற்றி) ஏற்பட்டது; எங்களுக்கே இந்தப் பெருமை உரியது,'' என்று தங்களையே வெற்றியின் புகழுக்குரியவர்களாக தேவர்கள் எண்ணிக் கொண்டார்கள். எல்லாவற்றிற்கும் ஆத்மாவாகவும், உள்ளுறை மெய்ப்பொருளாகவும், எல்லா நன்மைகளுக்கும் ஆதாரமாகவும் உள்ள இறைவனை, தங்களது ஆத்மாவாக அறியாமல், உடல் முதலியவற்றையே தங்கள் ஆத்மாவாக எண்ணி மயங்கி, எந்தத் தவறான அறிவை மேற்கொண்டார்களோ, அந்த அறிவு அவர் கள் எடுத்த தவறான எண்ணத்தின்மேல் எழுந்த பொய்யான கற்பனையாகும். எல்லாவற்றிற்கும் உள்ளுறை மெய்ப் பொரு ளான இறைவனை உள்ளது உள்ளபடி அறிவதனால் இந்தப் பொய்யறிவு அகற்றப்பட வேண்டும் என்பதை அறிவுறுத்து வதற்காக, ''தத் ஹ ஏஷாம்'' என்று தொடங்கும் உபநிஷத் ஒரு வரலாற்றைச் சொல்ல முற்படுகிறது.

மந்த்ரம் 2-12

தேவர்களின் அகந்தையினால் உண்டான எண்ணத்தை அந்தப் பரம்பொருள் அறிந்து கொண்டது. அப்படி அறிந்து கொண்டு, அந்தப் பொய்யான அகந்தையைப் போக்கி அதன் மூலம், தேவர்களுக்கு அருள் செய்ய வேண்டுமென்ற விருப்பத்தினால், அவர்களின் பொருட்டு, அவர்கள் கண்ணில் படும்படியாக அருகில் வந்து தோன்றியது. இறைவனின் ஆற்றலான மாயையினால், மிகவும் விந்தையான ஒரு தனி உருவத்தை எடுத்துக் கொண்டு அவர்கள் முன் தோன்றியது. அதைக் கண்ணால் கண்டபிறகும், தேவர்கள், வணங்குவதற்குரிய இந்த தெய்வீக வடிவம் இன்னதென்று அறிய முடியவில்லை.

அதைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, தேவர்கள் அக்னியைப் பார்த்துச் சொன்னார்கள். (அந்த வடிவத்திடம் சென்று) ஒரு புல்லை (அதன் முன்னால் வைத்து)பேசச் சொன்ன தன் கருத்து என்னவென்றால் மிகவும் மதிப்புக்குரிய அக்னி (நெருப்பு), வாயு, (காற்று) என்ற தேவதைகளுக்கு, (புல்லை) எரிப்பது, அதைச் சிதறடிப்பது போன்ற செயல்களில் ஆற்றலின்மை வெளிப்பட்டு, அவர்களின் இறுமாப்பு நீங்கட்டும் என்பதுதான்.

இந்த்ரன் என்பது சூரியனையோ அல்லது வஜ்ராயுதம் ஏந்திய (தேவதையையோ) குறிக்கலாம். அதில் முரண்பாடு ஏதுமில்லை. இந்த்ரன் நெருங்கியவுடனே, பரம்பொருள் மறைந்து போயிற்று என்பதன் கருத்து பின்வருமாறு:

''நான் இந்த்ரன்'' என்ற மிகுந்த தன்மானமுடையவன் இவன். அக்னி முதலியவர்களுக்குக் கிடைத்த (அந்தத் தெய்வ உருவத்தினுடைய) பேச்சு வார்த்தை கூட எனக்குக் கிடைக்கவில்லையே என்று அவனது தற்பெருமை சிறிதாவது குறையாதா? என்று அவனுக்கு அருள் செய்யும் பொருட்டு, பரம்

பொருள் (அவனுடைய கண்ணுக்குத் தென்படாமல்) மறைந்தே போயிற்று.

(அவ்விதம்) இறுமாப்புக் குறைந்த இந்த்ரன் பரம் பொருளை அறிய வேண்டும் என்று மிகவும் ஆசை கொண்டான். (அப்பொழுது) எந்த ஆகாயத்தில் பரம்பொருள் தோன்றி மறைந்ததோ அந்த இடத்திலேயே அறிவே உருவமான ஒரு பெண் உருவம் தோன்றியது. தனக்கு முன்னர் வந்தது பரம் பொருளே என்று இந்த்ரனுக்குத் தெரிவிப்பதற்காக, சிவனுடைய தேவியான உமா, ஹிமவானின் மகள், மிக்க. ஒளியுடன் தோன்றினாள். (அவள்) ஞானமே வடிவானவள். அழகற்ற உருவமுள்ளவனானாலும், அறிவுள்ள ஒருவன் ஒளிவீசத்தான் செய்கிறான். (ஜகன் மாதாவைப் பற்றிக் கேட்பானேன்?)

கேனோபநிஷத் மூன்றாவது கண்டம் முற்றிற்று.

கேனோபநிஷத்

நான்காவது கண்டம் (வாக்ய-பாஷ்யம்)

மந்த்ரம் 1-3

இந்த்ரன் அந்தத் (தேவியைக்) கேள்வி கேட்டு, அவளுடைய வாக்கினாலேயே தெரிந்து கொண்டான். எனவே, இந்த்ரனுக்கு அறிவுண்டாகக் காரணமானதால், உமா, ஞானத்தின் உருவமேயானவள். ''இறைவன் ஞானத்தை (தேவியை) உதவியாகக் கொண்டவன்'' என்று வழிநூலும் (ஸ்ம்ருதியும்) உரைக்கிறது. எனவே இந்த்ரனுக்கு உண்டான மெய்யறிவின் மூலம், அவனும், அக்னியும், வாயுவும் பிரம்ம வித்யையைப் பெற்று விட்டதால், அந்தப் பரம்பொருளை வெகு அருகாமையில், அதைத் தொட்டுவிடுவது போல, (அவ்வளவு அருகாமையில்) பார்த்தார்கள். அவர்கள் (மூவரும்) முதன் முதலில் பரம்பொருளை அறிந்ததன் சிறப்பினால், மற்றைய‌த் தேவர்களை விட மிகவும் ஒளிபெற்று விளங்குகிறார்கள். (அந்த மூவரிலும்) இந்த்ரனே இன்னும் அதிகமாக ஒளி பெற்று விளங்குகிறான். முதன் முதலில் பிரம்ம ஞானத்தைப் பெற்றவனல்லவா?

மந்த்ரம் 4

அவனுக்கு (இந்த்ரனுக்கு) இது உபதேசமாகும். பரம்பொருளைப் பற்றிச் சொல்லப்படப் போகின்ற உபாஸனையைப் பற்றிய உபதேசம் இது என்பது கருத்து. பளீரென்று ஒரு மின் வெட்டைப்போல, ஒளியுடன் தேவர்களின் முன் தோன்றியது பரம்பொருள் என்பதால், இப்பரம்பொருள் ஒளிமயமானது.

'ஆ' என்ற (உபநிஷத்தில் வரும்) சொல்லிற்கு 'போல' என்ற உவமைக் குறிப்பு பொருள். எப்படி அடர்ந்த இருட்டைப் பிளந்து கொண்டு ஒரு மின்னல் எங்கும் ஒளிவிட்டுப் பிரகாசிக்

கிறதோ, அதுபோல, அந்தப் பரம்பொருள் தேவர்களின் முன்பு எங்கும் பிரகாசமாகித் தோன்றியது. எனவே அது ஒளி உருவாய் உபாஸிக்கப்பட வேண்டும். ''மின்னல் பளீரிடுவதுபோல்'' என்று வாஜஸனேயக (சுக்ல யஜுர்வேதமும்) பரம்பொருளுக்கு மின்னலை உவமையாகக் காண்பிக்கிறது.

(மின்னலைப்போல் ஒரு கண்ணிமைக்கும் நேரம் தோன்றிய அது), இந்த்ரன் அதை அணுகியபொழுது மறைந்தும் போயிற்று. கண் இமைக்கும் நேரத்தில் என்பது கருத்து. 'இதி' (என்ற உபநிஷத்தில் இங்கு வரும் சொல்) பொருளில்லாத அசை. கண்மூடித்திறக்கும் நேரத்திற்குள் மறைந்து போயிற்று. இது அதிதைவதம் அதாவது தேவதைக்கு முன் நிகழ்ந்த தெய்வீக நிகழ்ச்சி.

மந்த்ரம் 5

(அத) இதற்குப்பிறகு, (அத்யாத்மம்) ஆத்மாவைப் பற்றி இனி பேசப்போவதால் இனி வரும் பகுதி அத்யாத்மம் எனப் படுகிறது என்பது வாக்கியத்தின் மிச்சப்பகுதி. இவ்வாறு மேற் சொன்ன இயல்புடையதாக பரம்பொருள் இருப்பதனால், (மனது அது குறித்துச்) செல்வது போல, (அதைச்) சென்றடைவது போல, மனத்திற்கு அது பொருளாவதுபோல, இருக்கிறது என்பது கருத்து. (உண்மையில் அப்படியல்ல). பரம் பொருள் மனதினால் அறியப்படும் பொருளன்று. அதனால் மனது அதை அடையாது. ''எதனால் மனதும் அறியப்படுகிறது என்று சொல் கிறார்களோ'' என்று (உபநிஷத்) ஏற்கனவே சொல்லியும் இருக்கிறது. ''அதைக் குறித்துச் செல்வது போல'' என்று கூறியிருப்பதற்கு, அது (பரம்பொருள்) மனத்திற்கும் மனதாக இருக்கிறது என்பதுதான் காரணம்.

பரம்பொருள் உள்ளுறை ஆத்மாவாக இருப்பதால், அதன் அருகாமையில் மனது இருக்கிறது என்று கூறப்படுகிறது. இந்த

மனத்தினால்தான் அறிவுடை மனிதன் அந்தப் பரம்பொருளை நினைக்கிறான் என்பதால், பரம்பொருளிடம் மனது செல்லுகிறது போல ஒரு தோற்றம் ஏற்படுகிறது. மனது திரும்பத் திரும்ப எண்ணங்களில் ஈடுபடுவது பரம்பொருளின் ஏவலினால் தான். எனவே, நினைப்பது, முனைவது முதலிய அடையாளங்களால் மனதானது அத்யாத்மமாக (நம்முள்ளே விளங்கும்) பரம் பொருளாக உபாஸிக்கப்பட வேண்டும் என்பது கருத்து.

மந்த்ரம் 6

நம்முள் உறையும் செம்பொருளாக பரம்பொருளை உபாஸிப்பதிலுள்ள சிறப்புக்களை நியமமாகத் தருகிறது உபநிஷத்.

'தத் ஹ தத்வனம்' (என்ற உபநிஷத் சொற்களின் பொருள்) : இத்தகைய இந்தப் பரம்பொருள், 'தத்வனம்' எனப்படும். அதாவது, (தத்) அந்தப் பரம்பொருள் நேரடியாக அறிய முடியாத ஒன்று, அது (வனம்) உபாஸிக்கப்பட வேண்டும். உபாஸனை அல்லது இடையறாது சிந்தித்தல் என்ற செய்கைக்குப் பொருளாவதால், அந்தப் (பரம்பொருளுக்குத்) 'தத்-வனம்' என்று பெயர். இந்தப் பெயர் அதன் உண்மைப் பெயரல்ல; ஒருவித (கற்பனையான) பெயர்தான். எனவே, இந்த குணத்தோடு கூடியதாக 'தத்வனம்' என்று உபாஸிக்கப்பட வேண்டும். யார் மேலே சொல்லப்பட்ட குணத்தோடு, 'வனம்' என்ற பெயரினால் பரம்பொருளை உபாஸிக்கிறார்களோ, அவர் களுக்கு (அத்தகைய உபாஸனையின்) பலன் சொல்லப்படுகிறது. எல்லா உயிர்களும் அப்படி உபாஸிப்பவரை நேசிக்கின்றன, வழிபடுகின்றன என்பது பொருள். எத்தகைய குணத்தோடு உபாஸிக்கிறார்களோ, அதற்குத் தகுந்த பலன் நிச்சயமாகக் கிடைக்குமல்லவா?

மந்த்ரம் 7

''ஓ (ஆசிரியப் பெருமானே)! உபநிஷத்தை எனக்குச் சொல்லுங்கள்'' என்று சீடனால் குரு கேட்கப்பட்டதாக (கேன உபநிஷத்தில்) சொல்லப்பட்டிருப்பதால், சீடனால் கேட்கப்பட்ட ஆசிரியர்'' ஆத்மாவைப் பற்றிய உபநிஷத்தும், உபாஸனையும் சொல்லப்பட்டுவிட்டன. இப்பொழுது உனக்கு பரம் பொருளைப் பற்றிய உபநிஷத்தைச் சொல்லப்போகிறேன்'' என்றார். அதை இனிச் சொல்லப் போகிறார். ஏற்கனவே இது சொல்லப்பட வில்லை. சொன்னது எல்லாம் ஆத்மாவைப் பற்றிய உபநிஷத் மட்டுமே. ஆகையினால், ''அப்ரூம'' என்ற சொல்லிற்கு (ஏற்கனவே) சொல்லிவிட்டார் என்பது பொருள் அன்று.

மந்த்ரம் 8

சொல்லப்படப்போகிற ரகஸ்ய உபதேசத்திற்கு (தவம்), தமம் (புலனடக்கம்) கிரியை (முத்தீ வழிபாடு) முதலியன இடமாக இருக்கின்றன. இவை இருக்கும்பொழுது, பரம் பொருளைப் பற்றிய உபதேசம் நிலை பெற்றதாகிறது. வேதங்கள் நான்கும், மற்றெல்லா அங்கங்களும் அப்படியே நிலை பெற்றிருக்கின்றன. பரம்பொருளைப் பொருளாகக் கொண்ட தல்லவா அதைப்பற்றிய அறிவு? ஸத்யம் என்பது உள்ளதை உள்ளபடி பேசுவது; பிறருக்குத் துன்பந்தராமலிருப்பது. உண்மை மெய்யறிவிற்கு நிலைக்களன். உண்மையே பேசுபவர் களிடம் முன் சொன்ன எல்லாம் இடங்கொண்டிருக்கின்றன. (''இருப்பிடங்கள்'' என்ற சொல்) ''இருப்பிடங்கள் போன்று'' என்ற பொருள் கொண்டது.

மந்த்ரம் 9

தவம் முதலிய இந்தப் பகுதிகளையும், அவற்றில் நிலை கொண்டுள்ள பரம்பொருளைப்பற்றிப் பேசும் உபநிஷத்தையும்,

அதன் நிலைக்களன்களோடும், யார் உள்ளது உள்ளபடி அறிந்து நடக்கின்றார்களோ அவர்களுக்கு வரும் பலனைச் சொல்லுகிறது வேதம். பாவத்தை நீக்கி, (அதாவது தருமம் அதருமம் என்ற இரண்டையும் நீக்கி), எல்லையில்லாததும், கரையில்லாததும், அறியாமை நீங்கியதும், மகிழ்ச்சி நிரம்பியதும், துக்கமே இல்லாததும், சுவர்க்கம் என்று அழைக்கப்படுவதும், எல்லா வற்றிலும் மூத்ததும், எல்லாவற்றிலும் பெரியதுமான பரம் பொருளிடத்தில் நிலைபெறுகிறார்கள். எல்லா வேதாந்தங்களி னாலும் அறியப்படுகிற பரம்பொருளைத் தனது சொந்த ஆத்மா வாக உணர்ந்து அந்தப் பரம்பொருளையே அடைகிறார்கள். (பரம்பொருளாகவே ஆகிறார்கள்) என்பது கருத்து.

கேனோபநிஷத்தின் நான்காவது கண்டம் முற்றிற்று.

சங்கரர் உரைத்த

கேனோபநிஷத்தின் **வாக்ய-பாஷ்யம்** முற்றிற்று.

ஓம் தத் ஸத்

